Registered as a News paper in Ceylon ★ ★ விலை சதம் 20

மில்க்வைற்
தயாரிப்புகளின்
மேலுறைகளைச்
சேகரித்து அனுப்பி
பரிசுகளைப் பெறுங்கள்.

மில்க்வைற்சோப்
தொழிற்சாலை
யாழ்ப்பாணம்.

# ஈழநாடு

வாரமலர்

மலர் 12 சாதாரண ஆவணி 30 றஜபு 13 (15—9—70) செவ்வாய்க்கிழமை இதழ் — 216

## அடிப்படை உரிமைகள்

# தேசிய ஒருமைப்பாட்டுக்கு வழிவகுக்க வேண்டும்!

## யாழ்ப்பாணத்தில் ஹெக்டர் அபயவர்த்தன

[நமது நிருபர்]

''அடிப்படை உரிமைகளை வற்புறுத்தும்போது அது நாட்டின் தேசிய ஒருமைப்பாட்டுக்கும் பொருளாதாரவளர்ச்சிக்கும் வழிகோலுவதாகஇருக்க வேண்டுமே தவிர, தனிப்பட்டவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டிருக்கக் கூடாது!'' என்று மக்கள் வங்கி அதிபர் திரு. ஹெக்டர் அபயவர்த்தன நேற்றிரவு யாழ்ப்பாணத்தில் கூறினார்.

மொழியுரிமை, குடியுரிமை ஆகியனவற்றை அரசியல் சாசனத்தில் சேர்த்துக் கொள்வதுபற்றி கருத்து வெளியிடுகையிலேயேஇதனை அவர் வற்புறுத்தினார்.

யாழ். நகரமண்டபத்தில் திரு. ஏ. எஸ். கனகரத்தினம் தலைமையில் நடந்த 'சோஷலிச ஆய்வுக்குழு'வின் 'பிரஜைகளும் அடிப்படை உரிமைகளும்' என்ற கருத்தரங்கில் கலந்துகொண்டு திரு. ஹெக்டர் இவ்வாறு பேசினார்.

திரு. ஹெக்டர் அபயவர்த்தன மேலும் பேசுகையில், சட்டத்தின்மூலம் சிங்களத்துக்கும் தமிழுக்கும் சமத்துவத்தை ஏற்படுத்திவிட்டால் பிரச்னை தீர்ந்துவிடுமென்று கூறுவதில் அர்த்தமில்லை. மாற்றமுடியாத சில பிரச்சினைகளைத் தேடிப்பிடித்து அதனை அரசியல் சாசனத்தில் சேர்த்துக்கொள்ளும்படி கேட்பது மேலும் பிரச்சினையை வளர்த்துக்கொள்வதாகிறது: மொழி தற்காலிகமானது. நிரந்தரமாக நிற்காது.

இந்நாட்டின் சகல இடங்களிலும் ஆங்கிலத்தின் ஸ்தானத்தில் சிங்கள மொழியும், தமிழ்மொழியும் அமர்த்தப்படக்கூடியகாலம் ஒன்று விரைவில் உருவாகுமென்றும் திரு. ஹெக்டர் நம்பிக்கை தெரிவித்தார்.

கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை பேசுகையில், அரசியலில் மட்டுமல்ல பொருளாரத் துறையிலும் அடிப்படை உரிமைப் பிரகடனம் ஒரு கலங்கரை விளக்கம்.

மனித சாசனத்துக்கு மதிப்பளித்து அதை நடைமுறையில் கைக்கொண்டிருந்தால், 1948-ல் பிரஜாவுரிமைச்சட்டம் நிறைவேறியிருக்க முடியாது. அது நிறைவேறியதால் 10 லட்சம் மக்கள் குடியுரிமை இழந்துவிட்டனர். குடியுரிமை அடிப்படை உரிமை. அதை அபகரிக்கக் கூடாது. பிறப்பினால் பெறப்பட்ட உரிமை அதுவாகும். குறிப்பிட்ட ஒரு திகதிக்கு முன்பிறந்த ஒருவருக்கு மட்டும் குடியுரிமை வழங்குவதை வைத்துக்கொண்டு பார்த்தால், அத்திகதிக்குப் பின் பிறந்தவர்கள் அந்த உரிமையை அநியாயமாக இழக்கிறார்கள். திகதியை வைத்துக்கொண்டா குடியுரிமையை நிர்ணயிக்கவேண்டும்?

இப்படி இந்நாட்டில் குடியுரிமை கஷ்டமாக்கப்பட்

(18-ம் பக்கம் பார்க்க)

### இன்று

யாழ்ப்பாணம். செவ்

மக்கள் வங்கித் தலைவர் ஹெக்டர் அபயவர்த்தன இன்று மாலை சுழிபுரம்தபால் நிலையத்திற்கு அருகாமையில் நடைபெறும் கூட்டத்தில் உரையாற்றுவார்.

## பக்கத்து வீடுகளை கைப்பற்ற பல்கலைக்கழக மாணவர் முயற்சி?

கொழும்பு, திங்கள்

கொழும்புப் பல்கலைக்கழக மாணவர்கள் ஒக்டோபர் மாதம் பல்கலைக்கழகம் திறக்கப்படும்பொழுது பல்கலைக்கழகத்துக்கு அண்மையிலுள்ள வீடுகளைப் பலவந்தமாகக் கைப்பற்ற முயற்சி எடுக்கவிருக்கிறார்கள் என்று பொலிசாருக்கு நம்பகமான வட்டாரங்களிலிருந்து செய்தி கிடைத்துள்ளதாக அறியப்படுகிறது.

கொழும்புப்பல்கலைக்கழக மாணவர்களுக்கு பல்கலைக் கழகத்தில் இடவசதி குறைவாகவுள்ளமையே இத்தகைய திட்டத்தக்குக் காரணமென்றும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

மேலும் சேகுவேரா இயக்கத்துடன் தொடர்பு கொண்டுள்ள மாணவர்களினாற்றான் இத்தகைய திட்டம் தீட்டப்பட்டிருக்கலாமென்றும் பொலிசார் நம்புகின்றனர்.

## பிரான்சில் இலங்கைப் பிரதமர்

பாரிஸ், செப். 14

லுசாக்காவில்நடைபெற்ற கூட்டுச்சேரா நாடுகளின் மகாநாட்டில் கலந்து கொண்டபின், இலங்கைப் பிரதம மந்திரி ஸ்ரீமாவோ பண்டாரநாயகா பிரான்சுக்குவிஜயஞ்செய்துள்ளார்.

இலங்கைப் பிரதமரை ஓர்லி சர்வதேச விமானநிலையத்தில் பிரான்சு அமைச்சர்களும் அதிகாரிகளும் வரவேற்றனர்.

பிரதமர் பிரான்சு விஜயத்தின்போது இலங்கைத் தேயிலையை நேரடியாக பிரான்சுக்கு விற்பனை செய்வதுபற்றியும், தொழில்நுட்ப உதவிபற்றியும்பேச்சுவார்த்தைகள் நடத்துவார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வெலோனா நெசவாலை

## வேலை நிறுத்தத்தில் ஈடுபடாத ஊழியர் மீது குண்டு வீச்சு

### பலர் காயம்; மனேஜர் நிலை கவலை

பாணந்துறை, திங்கள்

வெலோனா நெசவாலையின் மனேஜர் திரு. ஜஸ்டின் கூரே சென்றுகொண்டிருந்த ஜீப்மீது குண்டு வீசப்பட்டதினால் அவர் அபாயகரமான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். முன்னர் இங்கு கடமையாற்றி விலகிய ஊழியர்ஒருவரே குண்டை வீசியதாகக் கூறப்படுகிறது. ஜீப்பில் பிரயாணஞ்செய்த மற்றுமிருவரும் பலத்த காயங்களுக்குள்ளானார்கள்.

திரு. ஜஸ்டின் கூரேயின் முகத்திலும் நெஞ்சிலும் காயங்களேற்பட்டன. அவரதுநிலைமை படுமோசமாயிருப்பதாகக் கூறப்பட்டது.

நேற்றுக்காலை பாணச்துறைக்கு அண்மையில் இந் சம்பவம் நிகழ்ந்தது. வேலை நிறுத்தத்தில் ஈடுபடாத சில ஊழியர்கள் வேலைத்தலத்திலிருந்து நேற்றுமாலை வீடு திரும்பிக்கொண்டிருந்தபோது மீண்டும் குண்டு வீச்சு சம்பவம் நடைபெற்றதாகவும் அறிவிக்கப்படுகிறது. இதில் பலர் காயமடைந்தனர்.

பொலிஸார் அங்கு கூடி நின்ற ஜனக் கூட்டத்தைக் கலைத்தனர். விசாரணை தொடர்கிறது. இதுசம்பந்தமாக இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை.

## நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், செவ்.

'பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செயவதற்கு ஏற்படும் தாமதத்திற்கு புகையிரதப்பகுதியும், மக்கள் இலாகாவுமே காரணமெனக் கூறுகின்றன. இதைப்பற்றி விசாரித்து விவசாயிகளுக்கு கஷ்டமின்றி அவர்களிடமிருந்து நெல்லைப் பெற்றுக் கொள்ள ஆவன செய்ய வேண்டும்'.

இவ்வாறுகோரும் மகஜரொன்றை பரந்தனைச் சேர்ந்த விவசாயிகள் சார்பில் திரு மா. சேனாதிராசாவிவசாய அமைச்சர் திரு. நவரத்னாவுக்கு அனுப்பியுள்ளார் 'உத்தரவாதத் திட்டப்படி அரசாங்கம் நெல்லைக் கொள்வனவு செய்வது விவசாயிகளுக்குப் பெரும் நட்டமாகும். கூட்டுறவுச் சங்கங்கள் ஏழை விவசாயிகளிடமிருந்து நெல்லுக் கொள்வனவு செய்வதில் மலிந்துள்ள ஊழல்கள் பற்றி விசாரித்தறிந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும்' அவர் தமது மகஜரில் கேட்டுள்ளார். (கு. வி. ம.)

## பத்திரிகையாளர் மாநாடு

இம்மாதம் 29-ம் திகதி பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. ஸ்ரான்லி சேனநாயக்கா கூட்டுகிறார்.

ஏதாவது கேள்வி கேட்க விரும்பும் பத்திரிகை நிருபர்கள் 4 நாள் முன்னராக விபரங்களை அறிவிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாட்டி சிந்தாத்திரை மாதா திருநாள் 24-9-1970

சாட்டி (வேலணை) சிந்தாத்திரை மாதா திருநாள் இம்மாதம் 15-ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 23-ம் திகதி மாலை வேஸ்பருடனும் 24-ம் திகதி காலை பாடற்பூசை, திருச்சுருப சுற்றுப் பிரகாரத்துடனும் முடிவடையும்.

யாத்திரீகர்களின் வசதிக்காய் 23-ம் திகதி மாலையும் 24-ம் திகதி காலையும்யாழ்ப்பாணத்திலிருந்தும், ஊர்காவற்றுறையிலிருந்தும் கோவிலடிக்கு பஸ் சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

சுவாமி
எஸ். ஏ. ஞானப்பிரகாசம்,
கட்டளைக்குரவர்.
குருமனை,
மண்டைதீவு.

2439

## கோட்டு விற்பனவு

வழக்கு இலக்கம் P/637
வழக்காளி:
மயில்வாகனம் மனோகரன்
எதிராளிகள்:
மயில்வாகனம் மகேந்திரன் கல்வியங்காடு யாழ்ப்பாணம்.
மயில்வாகனம் மகாரெத்தினம் சுங்க இலாகா, கொழும்பு.
மறுபேடும்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் P/637-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் 3 துண்டுக் காணிகளையும் 20-ந் திகதி செப்ரெம்பர் மாதம் 1970-ம் ஆண்டு (20-9-1970) பகல் பத்து மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதன விபரம்

யாழ்ப்பாணம் நகரசபை எல்லைக்குள் கந்தர்மடம் என்னும் குறிச்சியிலிருக்கும் 73-ம் இலக்க காணி, பலாவிரோட்.
1-ம் துண்டு 2 பரப்பு 11.7 குளி.
2-ம் துண்டு 4-00 பரப்பு.
3-ம் துண்டு 2-00 பரப்பு.
வேறு விபரங்களுக்கு:
த. கந்தையா
கொமிஷனர்
31, பருத்தித்துறைவீதி,
2445 யாழ்ப்பாணம்.

## ஏலவிற்பனவு விளம்பரம்

காரைநகர் தபாற்கந்தோருக்கும் யாழ்ற்றன் மகாவித்தியாலயத்திற்கும் மணற்காட்டு அம்மன் கோவிலுக்கும் அணித்தாயுள்ள மிக மதிப்பு வாய்ந்த கீழே விபரிக்கப்படும் ஆதனமும் நாற்சார்க்கல் வீடும் கிணறும் மற்றும் பயிர் வகைகளும் என்னால் அந்தக் காணிக்குள் நின்று 1970-ம் ஆண்டு ஐப்பசி மீ 31-ந் உ சனிக்கிழமை முற்பகல் பத்துமணி தொடக்கம் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி காரைதீவுக் கோவிற்பற்று களபூமி தங்கோடையிறை 'எடுக்கலங்காடு' பர. நீ. இல. 14. இதில் தெற்குப் பக்கமாய் நிந்தமாய் பர. நீ. இல ஏழு (பர, நீ. இல. 7) கல்வீடு, கிணறு, பனைகள், வடலிகளும் மற்றும் வான் பயிர் செய்பயிர்களும் இந்தப் பர நீ. இல. ஏழுக்கும் எல்லை கிழக்கு ஆறுமுகம் அம்பலவாணருக்குரிய வாதனம், வடக்கு மகேசசர்மா யோகீஸ்வரசர்மாவிற்கும் மகேசசர்மா தேவேஸ்வரனுக்கும் உரிய ஆதனம் மேற்கு ஒழுங்கை. தெற்கு சதாசிவ ஐயர் விசுவநாத ஐயருக்குரிய ஆதனம்- இதடங்கலும் இதன்பதிவு C 5/187.

விபரம் விரும்புவோர் என்னிடம் பெற்றுக்கொள்ளலாம்.

வை. ஏரம்பமூர்த்தி,
AUCTIONER
ஏலவிற்பனையாளர்,
காரைநகர்.
2-9-1970. 2434

# நாகரீக மோகத்தின் விளைவு தற்கொலை

## உடுவில் கி. ச. தலைவர் எச்சரிக்கை

உடுவில், ஞாயிறு
குடிசைக் கைத்தொழில் என்றபோர்வையில் மனித சமூகத்திற்கு அழிவை தரும்' 'கசிப்பு, சாராயம்' மற்றும் குடிவகை போன்ற பொருட்களைத் தயாரிப்பதன்மூலம் நம் மத்தியிலே ஏராளமான தற்கொலைகளும், திடீர் மரணங்களும் ஏற்படுகின்றன. நாகரீகம் என்ற போர்வையில் இளம் பெண்கள் பெற்றோருக்குத் தெரியாமல் தீயநடிவடிக்கைகளில் ஈடுபட்டு அது பெற்றோருக்கும்ஊருக்கும் தெரிய வரும்போது தம் உயிரையே மாய்த்துக்கொள்கிறார்கள். ஆண்களும் பெண்களுமாக சமூக விரோதிகளான மது, நாகரீகம் போன்றவற்றிற்கு உள்ளாகாமல்இருத்தல் அவசியம்.

சுன்னாகம் பொலீசாரால் நடத்தப்பட்ட குற்றத்தடுப்பு கலைவிழாவின் போது உரையாற்றிய உடுவில் கிராமசபை அக்கிராசனர் திரு. எஸ். முத்துலிங்கம் மேறகண்டவாறு கூறினார்,

உடுவில் கிராமசபை திறந்தவெளியரங்கில் நடைபெற்ற கலைவிழாவில் இன்னிசை, 'தற்கொலை' நாடகம், மற்றும் பொலிஸ்பகுதியினரின் குற்றத்தடுப்பு புகைப்படம் ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

## வெங்காயம் 8 சதம் கூட்டி விற்றவருக்கு ...

முல்லைத்தீவு, செவ்வாய்
மாங்குளம் தனலட்சுமி ஸ்ரோர்ஸ் உரிமையாளரான எஸ். பரராசசிங்கம் என்பவர் பம்பாய்வெங்காயம் ஒரு ருத்தலை கட்டுப்பாட்டு விலையிலும் பார்க்க எட்டுச் சதம் கூட்டிவிற்றதாகமுல்லைத்தீவு உணவு விலைக் கட்டுப்பாட்டுப்பரிசோதகர்திரு. வி. முதலித்தம்பியினால் தொடரப்பட்ட வழக்கு வவுனியா நீதிபதி திரு எம் பீ. ஜீ. திசநாயக்கா முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

எதிரிசார்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு. எஸ். ஜெயசிங்கம் 'எதிரி வயதானவர் என்றும் குற்றத்தை ஒப்புக்கொள்வதாகக் கூறிக் கருணை காட்டுமாறு கேட்டார்'.

நீதிபதி எதிரியை இரண்டு வருட நன்னடத்தைப் பிணையில் செல்லுமாறும் முடிக்குரிய செலவாக ரூபா 600 செலுத்துமாறும் உத்தரவிட்டுத் தீர்ப்பளித்தார்.

## தேவை

பெண்கள்!
நெசவு அனுபவமுள்ள பெண்கள் தேவை. போர்டிங் வசதி உண்டு. நேரில் விண்ணப்பிக்கவும். திருமதி சரவணபவன், தேவிராணி வாசம், நவாலி தெற்கு, மானிப்பாய். 2948

## அறிவித்தல்

யாழ்ப்பாண மாநகரசபை
குழாய்நீர் விநியோகம்

கோண்டாவில் தின்னவேலி முதலிய இடங்களிலிருக்கும் நீர் எடுக்கும் கிணறுகளிலிருந்து விநியோகிக்கப்படும் தண்ணீரில் உப்புத்தன்மை வரவரக் கூடுதலாக ஏற்படுவதனால் தண்ணீர் விநியோகத்தைக் குறைக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. இதனால் பொதுமக்களுக்கும், பொது ஸ்தாபனங்களுக்கும் தனிப்பட்ட நேரடித் தண்ணீர்த் தொடர்புகள் கொடுப்பது 1-9-70 தொடக்கம் நிற்பாட்டப்பட்டுள்ளது.

ஏ. ரி. சுந்தரம்,
மாநகரசபை ஆணையாளர்.
மாநகரசபை,
யாழ்ப்பாணம்,
11-9-70 2450

## இடமாற்றம்

உடுவில், ஞாயிறு
முன்னியவளை கிராம சபையில் காரியதரிசியாக கடமையாற்றிய திரு எஸ். சின்னையா இம்மாதம்முதல் திகதியிலிருந்து கொக்குவில் கோண்டாவில் கிராம சபைக்குகாரியதரிசியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

0 0 0

சுழிபுரம். ஞாயிறு
சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரிக்கு இம்மாதம் தொடக்கம் ஆசிரியர் திரு. கா. நடராசா இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவர் சுழிபுரம் கிழக்கு அமெரிக்கன் மிஷன்பாடசாலையில் உதவி ஆசிரியராக கடமையாற்றியவர்.

## "காலத்தை வீணாக்குகிறார்கள்"

யாழ்ப்பாணம், திங்கள்
"இன்றுவாலிபர்கள்தம்மிடம் உள்ள அளப் பெரிய சக்தியை அறியாதுகாலத்தை வீணாக்குகின்றார்கள், தன்னம்பிக்கையும். துணிவும், விடாமுயற்சியும் ஒரு வாலிபனிடத்தில் இருக்குமானால் அவன்வாழ்க்கையில் நிச்சயம் வெற்றிபெறுவான் இளைஞர்களால்பல பெரிய சாதனைகளை செய்யமுடியும்எனநல்லூர் இராமசாமி ஐயர் நினைவு விழாவில் உரையாற்றிய திரு ஜெ நாகேஸ்வரன் கூறினார்.

REGAL
Jaffna
Daily: 4-45, 7&9-45 p.m.
Poya, Prepoya 4 Shows
BEAUTIES BY NIGHT
(Adults only)

MANOHARA
Jaffna
Daily: 4-45, 7&9-45p.m.
Poya, Prepoya 4 Shows
THE PSYCHOPATH
(Scope color)
(Strictly for Adults)

ஸ்ரீகாலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 9-30
போயா, பிரீபோயா 2-30
சிவாஜி — ஜமுனா
நடித்த
மருதநாட்டுவீரன்

வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
போயா, பிரீபோயா 2-30
நாகேஷ் — கே. ஆர். விஜயா
நடித்த
சர்வர் சுந்தரம்


இப்பொழுது காட்சியளிக்கிறது
லக்ஷ்மி — நெல்லியடி
தினசரி இரவு 6-30 & 10-00 இருகாட்சி
போயாவும் முன்தினமும் காலை 10-30 பகல் 2-30 மெட்னி
★ ஜெமினிகணேசன்
★ ஏ. வி. எம். ராஜன்
நிர்மலா, சௌகார்ஜானகி, நாகேஷ், சுந்தரராஜன் நடித்த
சக்கரம்

ராணி (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
ஜெமினி — சௌகார் ஜானகி
நாகேஷ் — ஜெயந்தி
நடித்த
இரு கோடுகள்

3வது வெற்றி வாரம்
ராஜா — யாழ்ப்பாணம்
10-30, 2-30, 6-30, 9-45
பிரேம் நசிர், செம்மீன் ஷீலா, சாரதா, மது
மற்றும் பலர் நடித்த
இந்திய ஜனாதிபதியின் 'ஊர்வசி' பரிசு பெற்ற
துலாபாரம்
(மலையாளம்)
(எஸ். ரி. ஆர். பிலிம்ஸ்)

யாழ்-வின்ஸர் திரையில்
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி கணேசன், ஜெய்சங்கர்,
ராஜஸ்ரீ, நிர்மலா
நடித்த
பூவா தலையா

கெப்பிட்டல் (கொழும்பு)
பிளாஸா (வெள்ளவத்தை)
வெலிங்டன் யாழ்நகர்
(2-30, 6-30, 9-30)
தாய்க்குலத்தின் பெருமைக்கும் தமிழகத்தின் மாண்புக்கும் உதாரணமாய் வாழ்ந்த விஜயாவின் உள்ளத்தை உருக்கும் கண்ணீர் காவியம்.
உணர்ச்சி ஓவியம் . . .



ஸ்ரீ விநாயகா சுப்ரீயா கம்பைன்ஸ்
துலாபாரம்
(தமிழ்)
★ ஏ.வி.எம்.ராஜன்
இந்திய ஜனாதிபதியின் 'ஊர்வசி' பரிசுபெற்ற ★ சாரதா
காஞ்சனா, முத்துராமன், ரி. எஸ். பாலையா, நாகேஷ், சுந்தரராஜன், பேபி ரோஜாமணி
டைரக்ஷன்: வின்ஸன்ட்
(1969-ம் ஆண்டின் சிறந்த இயக்குனர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்நாடு கண்ட தலைவன்

செ. இராசதுரை
(மட்டக்களப்புப் பிரதிநிதி)

அண்ணாவின் கன்னித் தமிழ் பேச்சினால் தமிழ் மக்கள் கவர்ந்திழுக்கப்பட்டார்கள். தேன் கரும்பெனச் சுவைத்து கற்கண்டுபோல் இனித்தது உங்கள் கருத்து மிக்க தமிழ். மூட்டைதூக்கு பவனும் முதுகொடியப்பாடுபடுபவனும் நெல்லை விதைப்போனும் கல்லைப்பிளப்போனும் நெடுஞ்சாலைகள் ஆக்குவோனும் பல்கலைக்கழகத்தில் பயில்வோனும் தமிழின் சுவைகண்டார்கள். உங்கள் உள்ளத்தின் நிலைகண்டார்கள். காப்பியப் பெருந்தலைவி கண்ணகி, அவள் கற்பு நிலை மாறாத பெருஞ் சிறப்பு, கலைச்செல்வி மாதவி, காலம்வரையில் காதலன் வருவானெனக் காத்திருந்த அவள் மன நெகிழ்வு, கங்கை வென்ற சோழன், தமிழைப் பழித்தவன் தலைமீது கல் சுமக்கவைத்த சேரன் செங்குட்டுவன், காவேரிக்கு அணையெழுப்பிதமிழகத்தைவளம் கொழிக்கச் செய்த பொறியியல் மேதை கரிகால்பெருவளத்தான், தஞ்சைப் பெருங்கோயிலை வானுயர எழுப்பிய ராஜராஜன், தமிழகத்தின்மீது படையெடுத்து வந்த எதிரிகள் விந்தியத்தின் தெற்கே வந்ததில்லை, வென்றதில்லை, என்ற வீர நிகழ்ச்சிகள் - விரிந்த கடலைத்தாண்டி படை கொண்டுகளம்கண்டுவெற்றி வாகை சூடிய தமிழகத்துப் பெருவேந்தர்கள், வேழத்தின் தந்தமும் தமிழகத்தின் முத்தும் மயிலின் தோகையும் மணக்கும் ஏலமும் கராம்பும் சுமந்து ஐரோப்பிய நாடுகள் எங்கும் சென்ற பண்டைத் தமிழகத்தின் வாணிபச்சிறப்பு நிகழ்ச்சிகள் இன்னோரன்னவற்றை நமது மக்களுக்குப் பாடம்பாடமாகச் சொன்னார்.

தமிழகத்துப் பெருமக்கள் அணியணியாகத் திரண்டு ஆட்சிப்பொறுப்பை அண்ணாவின் கைக்கு மாற்றினார்கள். ''இப்படை தோற்கின் எப்படை வெல்லும், எ அருமைத் தம்பிகள் வெட்டிவா என்று சொன்னால் கட்டிவரும் தீரர்கள்'' என்று கூறியவர் தந்தை பெரியாரோடு பிணக்குற்று வெளியேறிய பின்னும் கழகத்தின் தலைமை நாற்காலியைத் தங்கள் உயிர் போகும்வரை முதலமைச்சரானபின்னரும் கூட காலியாகவே வைத்திருந்தார். தந்தை பெரியார் அமர்ந்திருந்த பீடத்தில் அமர கழகத்தில் யாருக்கும் தகுதியில்லை என்று கூறிக் கடைசிவரை அக்கூற்றை நிலைநாட்டிய தலைவனுக்கு உரிய மதிப்பளிக்கும் அண்ணாவின் பண்பு அரசியல் வாதிகளுக்கோர் எடுத்துக்காட்டு. முதலமைச்சர் பதவியை ஏற்றபின் தாயை வணங்கி பின் பெரியாரைத் தேடிச்சென்று அவரை அணைத்துக்கொண்ட நெஞ்சுருகும்காட்சி நன்றிமறவா, கடமைதவறா. தலைமைமீது கொண்ட பக்தியைக் காட்டிற்று. பெரியார் பிறந்த நாளுக்குப் பரிசுகள் பலர் வழங்க, அண்ணா என்ன பரிசு வழங்கினார் தந்தைக்கு என்று நண்பர்கள் கேட்ட சமயம், ''இந்தத் தமிழக ஆட்சியே அவருக்கு- பெரியாருக்கு பிறந்த நாள் பரிசு'' என்று கூறியமாட்சியினை எப்படிச் சொல்வது.



1969 தைத்திங்கள் நடைபெற்ற தமிழ் நாட்டுப் பெயர்சூட்டுவிழாவில் அண்ணாவோடுகருத்துவேற்றுமை கொண்டு வெளியேறிய ஈ. வி. கே. சம்பத்தைப் பற்றிக் குறிப்பிட்டது அண்ணாவின் உயர்ந்த பண்பை உணர்த்துகிறது ''சம்பத்- அவர் இப்போது போய்ச் சேர்ந்துள்ள இடம் அதற்கெல்லாம் (சாமர்த்தியம்) இடமளிக்கவில்லை என்பதை நினைந்து வருத்தப்படுகிறேன்'' என்று குறிப்பிட்டார். அப்பேச்சினை சம்பத் படித்திருந்தால் அவர் மனம் என்ன நினைத்திருக்கும்? அண்ணாவின் உள்ளம் அந்தப்பேச்சில் பளிங்குபோலத் தெரிந்திருக்காதா?

தமிழ்நாட்டின் ஆட்சிஅவர் கைக்கு மாறி ஆண்டுகள்இரண்டு கழியவில்லை. அதற்கிடையில் அவர் உள்ளம் கண்டுவந்த கனவுகளை நனவாக்க இரவென்றும் பகலென்றும் பாராது பணி புரிந்தார். பகைவனே அன்றிருந்த அண்ணனுக்கு நோயே பகைவனாக வந்தது மலேஷியாவில் முதல் உலக தமிழ் ஆராய்ச்சி மகாநாடு நடந்தபோது முதலமைச்சராக பக்தவத்ஸலம் சென்றார். இரண்டாவது மகாநாடு தமிழகத்தில் நடைபெற்றபோது அண்ணன் தமிழகத்தின் முதலமைச்சரானார். உலகமே வியக்கும் வண்ணம் தமிழ் நாடே விழாக்கோலம் பூண்டது. தமிழ்ப்புலவன் கம்பனுக்கும், ஔவைக்கும், கற்புத் தெய்வம் கண்ணகிக்கும், கடல் கடந்து வந்து தமிழ் வளர்த்த வீரமாமுனிவனுக்கும், ஜி. யூ. போப் பாதிரியாருக்கும், கால்டுவெல்லுக்கும், வள்ளுவருக்கும், பாரதிக்கும், பாவேந்தன் பாரதிதாசனுக்கும், கப்பலோட்டிய தமிழனுக்கும் உலகின் அழகுமிக்க சென்னைக் கடற்கரையில் அண்ணன் சிலையெழுப்பினார். தமிழ்மொழியின் புகழ்பரப்பினார். அவை நிலைபெற்றநினைவுச் சின்னங்களாகிவிட்டன. பகுத்தறிவுக்கருத்துக்களை, சீர்திருத்த மறுமலர்ச்சி எண்ணங்களை, தமிழகத்தில் பரப்பிய அண்ணன், ஆட்சி மன்றம் ஏறியவுடன் சுயமரியாதைத்திருமணத்தைச் சட்டபூர்வமாக்கினார். சென்னை மாநிலத்தில் - செந்தமிழ் திருநாட்டில் - மதுவொழிப்பைக் கடைசிவரை அமுல் நடத்தியே தீருவேன் என்றார் அண்ணா. ஆட்சி மன்றத்தின் பணப்பெட்டி நிரம்பவேண்டும் என்பதற்காகத் தமிழ்மக்களை நாட்டின் குடிகாரர்களாக்கமாட்டோம்என்று முழங்கினார் அண்ணன். தென்னகத்துக் காந்திஎன்று என்றோ ஒரு நாள் எவரோ ஒருவர் அவரைப் பாராட்டியது ஞாபகத்துக்கு வருகிறது. பார்புகழ் மகாத்மாகாந்தி இன்றிருந்தால் நம் அண்ணனை அள்ளிஎடுத்து அவரிரு கன்னங்களிலும் - முத்தமிட்டு நீயே என்வாரிசு என்று வாழ்த்தியிருப்பார்

இந்திச் சிறுக்கி தன் சின்ன இடைகுலுக்கி தமிழகத்தில் வந்தால் அவளின்கால் பிடரியில்பட விரட்டுவேன்' என்று சங்கநாதம் முழங்கி, தமிழகஅரசியலில் போராட்டம் பல நடத்தி, 'மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை, நம்மை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை' என்று சிந்துபாடி, சிரித்த முகத்தோடு சிறைக்கம்பிகளை முத்தமிட்ட அண்ணன் ஆட்சிக்கு வந்ததும் இந்தியை தமிழகத்தில் கட்டாய பாடமில்லாமல் ஆக்கினார். இனி இந்திக்கு இடமில்லை இனிய தமிழகத்தில்.

கலைஞர் கருணாநிதி அவர்கள் அண்ணன் அறுபதாண்டு விழாவிலே பேசியபோது 'எங்களுக்கென்று சொந்த ஒளி இல்லை. எங்களுக்கெல்லாம் ஒளி தருபவர் அண்ணன். அவர் ஒளியினாலேயே நாங்களெல்லாம் பிரகாசிக்கிறோம்' என்றுகூறியது இன்று ஞாபகத்துக்கு வருகிறது.

பேச்சுக்கொரு பண்டித நேரு என்று புகழ்பெற்றவர் நேரு. தி. மு. கழகம் என்றால் 'நொன் சென்ஸ்' என்று திட்டிய நேருஜியே டில்லி பாராளுமன்றத்தில் அண்ணன் பேசுகிறார் என்றால் அன்றுதான் அலுவலக வேலைகள் அனைத்தையும் ஒதுக்கிவிட்டு அமர்ந்திருப்பார். 'எனக்குரிய நேரத்தையும் அண்ணாவுக்குக் கொடுங்கள்' என்று ஒரு நாள் விவாதத்தின்போது அவர் சொன்னதை நாம் அறிவோம். அண்ணன்பேச்

(14-ம் பக்கம் பார்க்க)

# பகுத்தறிவு பாசறையின் தலைவன்

அ.பொ. செல்லையா

அகிலம் அனைத்திலும் வாழும் ஆறுகோடி தமிழ் மக்களின் நிலைமை பற்றியும் இருபது கோடிக்கும் அதிகமான திராவிடர்களின் வாழ்வு பற்றியும், தமிழ் நாடு தன்னாட்சி பெறுவதல்ல— தமிழகமே உருவாகித் திராவிடக் கூட்டாட்சி மலர்ந்திட, இந்திய ஒன்றியத்தின் உறுப்பாகவும் இருந்திடத் தனது எண்ணத்தைக் கைவண்ணமாக்கி அல்லும் பகலும் அயராது சிந்தித்துத் தனது காலத்திலேயே வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய 'தமிழ்நாடு' கண்டு. தனியாட்சி இல்லையென்றாலும் ஓரளவேனும் தன்னாட்சியுடைய தமிழாட்சியை அளித்தார்.

திராவிட இனத்தின் வரலாற்றைத் தீர்க்கமாய் அறிந்து தன்னரசு பெற்று, வாணிபம் நடத்தி உலக நாடுகள் அத்தனையும் போற்றிவாழ்ந்த தமிழினம் தருக்கிழந்த நிலைமாற, பகுத்தறிவு படைத்த பைந்தமிழ்ப் பரம்பரையினரின் அறிவை மயக்கிய அறியாமையை விரட்டி, சிந்தனையைப் பெருக்கி, தன்மான உணர்ச்சி பொங்கிவழியும் மறுமலர்ச்சிக் கருத்துக்களை தனக்கே உரித்தான பாணியில் சொல்லிலும் எழுத்திலும் தந்து தமிழகத்தின் தனித்துவத்தை நிறுத்தக்கூடிய நிலைக்கு வழிகாட்டினார்.

அண்ணாவுக்குக் கல்வியூட்டிய பெரும் பேராசிரியர்கள் எல்லாம் அண்ணாவின் கருத்துக்களைக் கேட்கவும் அவரது எழுத்துக்களைப் படிக்கவும் தவறாத நிலைக்குத் தங்களைத் தாங்கள் ஆக்கிக்கொள்ளுமளவுக்கு அறிவும் ஆற்றலும் படைத்திருந்தார் அண்ணா.

பணமில்லாமல், படையில்லாமல், பதவியில்லாமல் மாபெரும் அணிவகுப்பொன்றைத் தன் சுண்டுவிரல் ஆணையை ஏற்றுப் போற்றிடும் வகையில் செயல்படுத்தக் கூடிய அளவுக்குத் திறமையும் பெருமையும் பெற்றிருந்தார் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

ஆடம்பரமற்ற உடையும் ஆழ்ந்து சிந்திக்கும் திறனும் அலைமோதும் அழகுத் தமிழும், அன்பின் நிழல் காட்டும் ஆசைமுகமும், [illegible] சிறிய உருவமும் நம்மை எல்லாம் 'அண்ணா' என்று அழைத்திடத் தூண்டியது. —தூண்டுகிறது.

மாற்றாரும் மதித்திட மறுத்திட முடியாத அளவுக்கு வாதித்து தான் எடுத்த கருத்தினை எதிர்த்தவரும் எடுத்துக்கொள்ளக் கூடிய அளவுக்குக் கருத்துப் பொலிவும், வன்மை பெறத்தக்க ஆதாரச் செறிவும் நிறையப் பெற்றிருந்தார்.

தமிழரின் தனிக்கொடி உயரப்பறக்க வேண்டுமானால் ஏற்றத்தாழ்வு, தீண்டாமை முதலிய தீமைகள் தேய்ந்துபோக வேண்டுமென்றார். கலப்புமணத்தின் மூலந்தான் அவை முற்றாக ஒழியுமென்றார்.

மக்களின் வாழ்வில் இன்பம் பொங்கவேண்டுமென்றால் மது ஒழிந்தாகவேண்டுமென்று மிகத் தீவிரமாகவும் இறுக்கமாகவுமிருந்தார் வன்முறையை விடமக்களின் மனங்களின் மலர்ச்சிக் கருத்துக்களை பொலியவிடும் தன்மையில் மறுமலர்ச்சி புரட்சிகாணலாமெனச்சொல்லி 1967 தேர்தலில் அதனையுங்காட்டி அகிலம் புகழும் 'செபலோசிப்' பட்டத்தையும் யேல்' பல்கலைக்கழகத்தில் பெற்று உலகம் வியக்குமளவுக்குத் தமிழின் [illegible] உலகத் தமிழாராய்ச்சி மகாநாடு மூலம் எடுத்துக் காட்டினார்.

## வையகமுள்ளவரை உன் புகழ் வாழும்

— புலவர் தமிழ்மாறன் —

கன்னித் தமிழன் செய்தவத்தால்—அண்ணா
கவினுறு காஞ்சி மாநகரில்—பிறந்தாரே
அன்னை தொத்தா அணைப்பினில்—அவர்
அழகுற நாளும் வளர்ந் தாரே

பள்ளி வயதினில் எங்கள்—அண்ணா
பைந்தமிழோடாங்கிலமும் பயின்றாரே
பிள்ளைப் பருவத்தில் எல்லோரும்—போற்ற
பேசி எழுதிச் சிறந் தாரே.

பச்சை யப்பன் கல்லூரியில்—அண்ணா
பயிலும் வேளை ராணியை மணந்தாரே
எம். ஏ. பட்டம் பெற்ற—அவரும்
ஈ. வே. ரா. பெரியாரை அணைந் தாரே.

ஈட்டி அனைய விடுதலை—ஏட்டினில்
எண்ணற்ற கதைகள் எழுதிக் குவித்தாரே!
நாடக மன்றினில் முழங்கிய அண்ணா
நாடாளு மன்றிலும் நாவார முழங்கி

தமிழக முதலமைச்சராய் வந்த—அண்ணா
தமிழை எங்கும் செழிக்கச் செய்தாரே
அமெரிக்க அழைப்பினில் சென்ற—அவர்
அங்கும் தமிழைச் சிறக்கச் செய்தாரே.

இந்த வையகம் உள்ளவரை — எங்கள்
இனிய அண்ணாவின் புகழ் வாழுமே.
எதிர் காலத் தமிழர்க்கும்—அது
ஏற்ற வழிகள் பல கூறுமே னாரே

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 'தடை செய்துவிட்டு இரசிகர்களுக்கு கொடுக்க இங்கு என்ன இருக்கிறது'?

தென்னிந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பத்திரிகைகள்; சஞ்சிகைகளைத் தடை செய்ய வேண்டுமென்ற குரல் எழுந்த போது வாழ்க்கையின் பல்வேறு துறையையும் சேர்ந்த பலரின் அபிப்பிராயங்களையும் திரட்டித் தந்தோம். தமிழ்த் திரைப்பட இறக்குமதியைத் தடை செய்ய வேண்டுமென்ற குரல் ஒலிக்கிறது நாடகதிரைப்படத் துறையைச் சேர்ந்தசிலரின் கருத்துக்களை இங்கு தருகிறோம் ஆ—ர்

திரு. கே. வி. சிறந்த நடிகர், ஓவியர் மட்டுமல்ல பலரின் பாராட்டும் பெற்ற கலைஞர். அவர் கூறும் அபிப்பிராயம் இது:

வெளிநாட்டுத் திரைப் படங்களைத் தடைசெய்ய முற்படுகின்ற வேளையில் நமது நாட்டு இரசிகர்களுக்கு நாம் எதைக் கொடுக்க முடியும். இங்கே இன்று வரை நாம் நமக்கென்ற நல்ல சினிமாத் தயாரிப்புகளை ஆக்கின்ற முயற்சியில் கூட வெகு பின்னுக்கு நிற்கின்றோம்.

சிங்களப்படங்கள் இங்கே அபரிமிதமாகத் தயாரிக்கின்றார்கள். ஆனால் தமிழில் அவ்வப்போது ஒன்றிரண்டு படங்கள் மட்டுமே தயாரிக்கப்பட்டுள்ளன

இந்த அளவுக்கு அத்தயாரிப்புகளை நாம் உற்று நோக்குமிடத்து உண்மையில் நாம் நூற்றுக்கு ஒரு வீதம்கூட தயாரிப்பில் முன்னுக்கு வரவில்லையென்பதை மறுக்க முடியாது.

நாம் இங்கு ஒரளவுக்குத் தயாரிப்புகளைப் பெருக்கிய தன்பின்னர். நம்முடைய தயாரிப்புகளைச் செம்மைப் படுத்தியபோது இப்பிரச்சினையை அணுகுவதுதான் புத்திபூர்வமான காரியமாகும்.

இங்கு இதுவரை படத் தயாரிப்புகளை மேற்கொண்டவர்கள் தமது சுயநோக்கைத் திருப்திப்படுத்துவதை மட்டுமே மேற்கொண்டிருந்தமையைக் காண்கின்றோமே தவிர, நமதுகலையின் வளர்ச்சியில் போதிய கவனம் செலுத்தவில்லையென்பது தெரிகின்றது.

முதன்முதலில் இலங்கையில் தயாரித்த 'தோட்டக்காரி' அப்படத்தில் நடித்த நடிகர்களின் முதலீட்டின் காரணமாகவே தயாரானது, நடிகர்கள் தம் அபிலாசை நிறைவேறிய அளவுக்கு படத்தின் தயாரிப்பு முன்னேறவில்லை

படத்தைத் தயாரிப்பவர்கள் நடிகர்களைப் பொறுக்கி அவர்களைப் பயிற்றி தயாரிப்பதுடன் சினிமா சம்பந்தமான நுட்பங்களையும் அனுசரிக்க முன்வரவேண்டும். அப்போது நல்ல சினிமாக்கள் இங்கு தயாராகும்.

இந்தநிலை உருவாவதற்கு வழியமைத்த பின்னருங்கூட கலாசாரப் பரிவர்த்தனைக்கு தடைகள் குந்தகமாக அமையக் கூடாது தக்க தணிக்கைசபையை நியமித்துநமது நாட்டின் இரசிகர்களுக்கு ஆக்கபூர்வமான கருத்துக்களை வழங்கக்கூடிய வெளிநாட்டு படங்களை இருகை கூப்பி வரவேற்கவேண்டும்

## 'பத்திரிகை, படத்துக்கு பண்டமாற்று கூடாதா?"

கலை, இலக்கியம், ஆத்மீகம் இவைகளை முழுமையான அளவுதாங்கி அந்நாட்டை நிதர்சனமாகவே அறிமுகப்படுத்திவரும் சினிமாவையோ, பத்திரிகைகளையோ, மற்றைய எந்த விதமான கலைகளையோ நாம் வரவேற்றேயாகவேண்டும்.

அப்படி ஏதேனும் ஒன்றோ இரண்டோ இத்தகைய அடிப்படைகளைக் கொண்டதாக இருக்கலாம். அவற்றை யாம் நிச்சயம் வரவேற்றேயாக வேண்டும். இவை தவிர்ந்த ஏனையவற்றினால் நமது சமுதாயம் நிச்சயமாக முன்னேறப்போவதில்லை. பலருக்கும் இன்பந் தருவதால் அவற்றைத்தடை செய்யக்கூடாது என்று கேட்பவர்களைப் பார்த்து ஒன்று கேட்க விரும்புகின்றேன்.

பலரது இச்சையை நிவர்த்திசெய்யும் ஒருத்தியிலிருந்து குஷ்டரோகம் பரவுவதைத் தடுக்காமலிருக்க முடியுமா? தமிழனின் பண்பாட்டைப் பிரதிபலிக்காதவற்றையெல்லாம் விளம்பர மோகத்தினால் அங்கீகரிக்கலாமா?

பொருளாதார ரீதியிலும் சிந்திக்கவேண்டும். தமிழ்க் கொலையும், காமசேட்டைகளும் மலிந்தவற்றை இறக்குமதிசெய்ய அனுமதிக்கும் போது தரம்வாய்ந்த நமது தயாரிப்புகளை அனுப்ப நாம் ஏன் முற்படக்கூடாது.

கலை உலகளாவியதுதான். இலங்கைக் கலைஉலகளாவக் கூடாதா? இந்த நாட்டில் பிறந்தமைக்காக எமக்குக் கலைஉணர்வேவரக்கூடாதா? நம்மிடம் கலைத் திறமை இல்லையெனவாதாடவிரும்புவோர் கலைத்திறமுடையவர்களை நமக்குப் பெற்றுத்தரட்டும்.

சாரத்திற்குப் பண்டமாற்றுமுறை வைக்கலாம். பத்திரிகைக்கோ படத்திற்கோ ஏன் அப்படி வைக்கக்கூடாது, 10 படத்தை நாம் வாங்கினால் அங்கு இரண்டு படங்களாவது ஏற்றுமதிசெய்ய வழிபிறக்கவேண்டும். நமது தயாரிப்புகள் உயர ஒரேவழி சந்தையைப் பெருக்குவதுமாகும். எமக்கு வெளிநாட்டுச் சந்தையைத் திறந்துவிடு: அல்லது எமது சந்தையை எம்மிடமே விட்டுவிடு.

— ரகுநாதன்.

நாடக, சினிமா நடிகரும் தயாரிப்பாளருர்.

## "பரிசுபெற்ற படங்கள் மட்டும் வந்தால் போதும்"

நாடக நடிகரும் தயாரிப்பாளரும் 'நிர்மலா' திரைப்பட ரைடக்டருமான திரு. எஸ் அருமைநாயகத்திடம் மிகச் சுருக்கமாக உங்கள் அபிப்பிராயத்தைச் சொல்லுங்கள் என்று கேட்ட போது அவர் பின்வருமாறு சொன்னார்.

தென்னிந்தியப் படங்கள் குறிப்பாகத் தமிழ்ப்படங்கள் இங்கு உள்ளூர்த்திரைப் படத்தொழிலுக்கு இடையூறாக இருப்பதுஉண்மையே. நல்ல படங்கள் இங்குவரத்தான் வேண்டும். இப்பொழுது இங்கு வியாபாரநோக்கத்தோடு வரும் பெரும்பாலான படங்கள் தடை செய்யப்பட வேண்டும். அவை கலை, கலாசாரத்துக்கு எந்த விதத்திலும் உதவவில்லை.

இங்கு நல்லதரமான தமிழ்ப்படங்கள் தயாரிக்கப் படவேண்டுமானால் பணம் போடும் தயாரிப்பாளரின் தலையீடு இருக்கக்கூடாது:

தமிழ்நாட்டுப் படங்கள் மட்டுமல்ல இதரவெளிநாட்டுப்படங்களிலும் பல தேவையற்றவை இங்கு இறக்குமதியாகின்றன. சர்வதேசப் பரிசுபெற்ற படங்களை மட்டும் இங்கு இறக்குமதி செய்தால் போதும்.

## 'தடை செய்ய வேண்டியதுதான்'

இலங்கையில் சினிமாக் கலை வளர்வதற்கு வெளிநாட்டுப் படங்களைத் தடை செய்வது வரவேற்கப்படக் கூடிய காரியமாகும். இன்றைய நிலையில் இலங்கைச் சினிமாத்தயாரிப்பு இந்திய தயாரிப்புடன் சரிநிகர் சமானமாக முடியாது. இரு நாட்டுத் தயாரிப்புக் கிடையேயும் போட்டிகளை ஏற்படுத்துவது ஐந்து வயதுப் பையனை இருபத்தைந்து வயதுடைய வாலிபனுடன் ஓட்டப் பந்தயத்துக்குநிறுத்தும் முயற்சியாகும்.

மேலும் இந்தியப் படங்கள் முழுமையும் கலாசாரத்தின் பிரதிபலிப்பென்று கூற முடியாது. மலையாளப் படமான செம்மீனைப் பார்க்கின்றபோது மலையாளக் கலாசாரத்தை யாம் கண்டவராகின்றோம். இந்த நிலையை இன்று தமிழகத்திலிருந்து வெளிவரும் படங்கள் கொண்டுள்ளனவென்று கூறமுடியாது, உத்திமுறைகள், அமைப்புகள் போன்றவற்றில் தமிழகத்துச்சினிமா வெகுதூரம் முன்னேறி நிற்கிறதென்பதை யாருமே மறுக்கமுடியாது. அதேவேளையில் நாம் வளர்வதற்கும் தடையாக அது அமைகின்றது. தமிழகத் தயாரிப்புக்குச் சமமாக யாம் இங்கு தயாரிக்கக்கூடிய முதலீடு செய்யவும் இங்கு எவரும் தயாராகவில்லை,

நமது சுய அளவுக்குள்ளே நின்று தனிப்பட்ட கலாசாரங்களைப் பிரதிபலிக்கின்ற வாய்ப்பு வெளிநாட்டுப் படங்களின் தடையின்மூலம் கிடைக்கவே செய்யும். காலப்போக்கில் நாம் வளர்ச்சி பெற்றால் சுயத்துவமான - கலாசாரப் பிடிப்புள்ள படங்களை நிச்சயம் உருவாக்க முடியும்.

— ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி

நாடக சினிமா நடிகர், பாடகர்.

# இன்று வியாகுல மாதா திருநாள்

இ. பேர்னட்

இளவாலை

திருச்சபைகிறீஸ்துவின் அன்னையான தேவதாய்க்கு முக்கியத்துவம் அளித்து அவளின் திருநாட்களைச் சிறப்புறக் கொண்டாடி மகிழ்கிறது. கடந்த வாரம் தேவதாயின் பிறப்பை நினைவுகூர்ந்த திருச்சபை இன்று தேவதாயின் வியாகுலங்களை நினைவுகூருகிறது. இன்று வியாகுல மாதா திருநாள் திருச்சபையில் கொண்டாடப்படுகிறது. இதனையொட்டி இச் சிறுகட்டுரை வெளியாகிறது.

கிறீஸ்துவை பெற்றபின் நாற்பதாம் நாளில் அவரைக் காணிக்கையாக்க சூசையப்பரும் தேவதாயும் கொண்டுசென்றனர். அங்கிருந்த சிமியோன் என்னும் தீர்க்கதரிசி யேசுவைக் கையில் ஏந்தி வாழ்த்திய பின் தேவதாய் அடையவிருக்கும் துயரத்தை முன் அறிந்தவராய் 'உமது ஆத்துமத்தை ஒரு வாள் ஊடுருவும்' என்று கூறினார். தேவதாயின் ஏழு வியாகுலங்களில் இதுதான் முதலாம் இடம் வகிக்கிறது. அடுத்து யேசுவுக்குப் பன்னிரண்டு வயது நடக்கும்போது தேவாலயத்துக்குப் போனபோது அவர் தாய் தந்தையருக்குத்தெரியாமல் அங்கே தங்கிவிட்டார். தேவதாயும் சூசையப்பரும் மூன்று நாட்களாகத் தேடி 3-ம் நாள் தேவாலயத்தில் அவரைக்கண்டடைந்தனர். இதுவும் மிகுந்த துக்கத்தையளித்தது தேவதாய்க்கு.

இவைகள் மட்டுமல்லாது கிறீஸ்து யூதர்களால் கைது செய்யப்பட்டு சிலுவையில் இறந்து பின்னர், சிலுவையிலிருந்து எடுக்கப்பட்டு தேவதாயின் மடியில் வளர்த்தப்பட்டதுவரை தாங்கொணு வேதனைகளை அனுபவித்தாள் தேவதாய். இத்திருத் தாயார் அனுபவித்த துயரங்களை வரையறுத்துக் கூறமுடியாது; வர்ணிக்கவும் முடியாது. உச்சி தொட்டு உள்ளங் கால்வரை உள்ள ஏககாயத்தைப் பார்த்து எந்தத்தாய் தான் பொறுத்திருப்பாள்? இறைவன் சித்தம் இது வென்று எண்ணி அனைத்தையும் பொறுமையுடன் தாங்கியிருந்தாள். மாசற்றவளும் கடவுளின் தாயுமான தேவதாய் இத்துணை துக்கம் அனுபவிக்கவேண்டுமா? நமக்கு முன்மாதிரியாக விளங்கும் பொருட்டே கடவுள், தேவதாய் இத்தனை வியாகுலங்களையும் அனுபவிக்கச்சித்தங் கொண்டார். ஏன் கிறிஸ்து கூட தமது போதனையில் ''தன்தன் சிலுவையை (துன்பதுயரங்களை) [illegible] என்னைப் பின்செல்லுகிறவனே நித்திய வாழ்வையடைவான்'' என்று கூறியிருக்கிறார்.

தேவதாயும் சிலுவையடியில் நின்று கிறீஸ்துவின் துன்பதுயரங்களில் பங்கு கொண்டு உலகரட்சணியத்தைநிறைவேற்றும் உடனிரட்சகியாக உதவிபுரிந்தாள். எதையும் தாங்கும் இதயம் படைத்தவளாகிய தேவதாய் பொறுமை என்னும் உன்னத புண்ணியத்தைக் கடைப்பிடித்து அனைத்தையும் தாங்கிநடந்ததினால் இறைவனால்உன்னதநிலைக்கு உயர்த்தப்பட்டாள்.

வியாகுலமாதாவின்தோற்றத்தைநாம்பார்க்கும்போது துக்கம் தோய்ந்த வதனத்துடன் கூடிய இருதயத்தில் ஏழு வாட்கள் குத்தப்பட்டிருப்பதைக்காணலாம் இந்த ஏழுவாட்களும் தேவதாயின் முக்கிய ஏழுவியாகுலங்களைக் குறிக்கிறது.

ஆகவே நாமும்இந்தவியாகுல அன்னையைப் பின்பற்றி எம் வாழ்க்கையில் எமக்கு ஏற்படும் துன்பதுயரங்களை பொறுமையுடன் சகித்து முடிவில்லாப் பேரின்பத்தை அடைய முயற்சிக்க வேண்டும்.

வியாகுல மாமரியே

தியாகத்தின் மாதாவே

சிலுவையடியிலே [illegible]

[illegible]

## "நாட்டின் கருத்தைப் பிரதிபலிப்பவை"

உணவும் உடையும் உலகத்தில் வாழுகின்ற எல்லா மனிதனுக்கும்அத்தியாவசியமானவை. அதேபோல் மனிதனின் ஆன்ம வளர்ச்சிக்கு கலைகள் அத்தியாவசியமானவை கலைகளே ஒருநாட்டின் கருத்துப் பிரதிபலிப்பாகும். இக்கருத்துக்கள் ஒரேவிதமாக வெளிவருவதில்லை இத்தகைய மாறுபட்ட கருத்துக்கள் மூலமே மனிதமனங்கள் பண்படுகின்றன. பாகற்காய் விதையில் பாகற்காய் கிடைக்கும், கத்தரிவிதையில் கத்தரிகிடைக்கும். உணவென்று நாம் கொள்ளும்பொழுது இந்த இருவகைக்காயிலும் தனித்தனிச் சுவை கொள்கின்றோம் ஒருவன் ஒருசுவையோடு மட்டும் திருப்தியடைவதில்லை. நமது மூதாதைகள் உணவை ஆறுவகைச்சுவையாக வகுத்துள்ளனர். விருந்தில் அறுசுவை உணவையே விருந்தாக்குகின்றோம். அதுபோலநமது சிந்தனைக்கு விருந்தாகப் பல்வேறுபட்ட நாடுகளின் கலைகளையும் ஊட்டவேண்டியது அவசியமாகும். ஆனால் வாழ்க்கைக்கு உறுதுணையக்கும் ஒழுக்கத்துக்கு ஊறுசெய்யாத எந்தக் கலைகளையும் அவை எந்தநாட்டைச் சேர்ந்தாலும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அவற்றைத் தடை செய்வதால் நமது வளர்ச்சியை நாம் கொலைசெய்தவராவோம்.


— சு. அமிர்தநாதர்

## வளரவே வேண்டும்

நம்நாட்டுக் கலைஞர்கள் முன்னேறுவதற்கு நம்நாட்டில் சினிமாக்கலை வளர்ச்சி பெற்றேயாகவேண்டும். இன்றைய நிலையில் நாம் வெகுதூரம் பின்னால் நிற்கிறோம். வெளிநாட்டுப் படங்களின் ஆக்கிரமிப்பினால் நமதுதயாரிப்பாளர்கள் போட்டி

(13-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நொண்டி

## தம்பிமுத்து இரத்தினம்

இரவு ஒருமணி இருக்கும். அப்போதும் ரங்கனுக்குத தூக்கம் வரவேயில்லை. மணிக்கூட்டில் உள்ள கம்பிகள் திரும்பித் திரும்பிச் சுழல்வதைப்போல் அவனது உள்ளமும் பழைய சம்பவங்களைப்பற்றித் திரும்பித் திரும்பி எண்ணியவண்ணம் இருந்தன. அந்தப் பெண் சொல்லிவிட்ட வார்த்தைகள் நினைவுக்கு வந்தவுடன் திடீரென எழுந்தான். சுவரில் மாட்டப்பட்டிருந்த தாயின் படம்தான் அவனது கண்ணுக்குத் தென்பட்டது. அந்தப் படத்தைத் தவிர அவனுக்கு ஆறுதல் கூற வேறுயாரும் அங்கு இல்லை. அவனது கண்களுக்கு அம்மா உயிருடன் இருப்பதாகத்தான் தெரிந்தது. அம்மா என்று கத்தியபடிசெல்வதற்குக் காலடி எடுத்துவைத்தான். மறுவிநாடி நிலத்தில் வீழ்ந்தான்.

அப்போதுதான் நினைவுக்கு வந்தது தான் ஊன்றுகோலை எடுக்கவில்லையே என்று. அந்த ஊன்றுகோலை எடுத்து இரண்டு கமக்கட்டுக்குள் மாட்டிக்கொண்டு மெல்ல மெல்ல நடந்து தாயின் படத்தை அடைந்தான், அந்தப்படத்தை உற்றுப்பார்த்தான். தான் இப்பொழுது இருக்கும் நிலையையும் எண்ணிப்பார்த்தான். அவனால் பொறுக்கமுடியவில்லை. விக்கிவிக்கி அழுதான்.

'அம்மா நீங்கள் இன்று இருந்திருந்தால் நான் இப்படிக் கவலைப்படுவேனோ? இப்படித்தான் ஒரு கவலை வந்தபோதும் நீங்கள் எனக்கு ஆறுதல் கூறமாட்டீர்களா? நீங்கள் ஏன் என்னை விட்டுச் சென்றீர்கள்? என்னையும் அழைத்துச் சென்றிருக்கலாமே? உங்களிலும் குற்றம் இல்லையம்மா. நீங்கள் செல்லும்பொழுதுநான் ஒரு திடசாலியான வாலிபனாக இருந்தேன். அப்பாவும் நல்ல சம்பளத்தைப் பெற்றார். எப்படியாவது நாங்கள் நல்லாய் வாழ்வோம்என்றுநீங்கள் எண்ணியிருப்பீர்கள். அப்போது கூட என்னைப்பற்றி அப்பாவிடம் கூறிய வார்த்தைகளை எண்ணும்போது நான் என்னென்று பொறுத்துக்கொண்டிருப்பேன். ஆனால் அதற்குப்பின்பு நடந்த சம்பவங்கள் எப்படிஅம்மா உங்களுக்குத் தெரியும். அன்று கூறினீர்கள்' நன்மை செய்தவனுக்கு ஒரு காலத்திலும் அழிவில்லை' என்று இன்று எனக்கும் என்னைப் பெற்று இத்தனை வருடமாக வளர்த்த அந்தப் பாவத்திற்காக எனது அப்பாவிற்கு ஏற்பட்டிருக்கும் அவமானத்தைப் பாருங்கள். இப்பொழுதுநீங்கள் இங்கிருந்தால் 'நன்மை செய்தவனுக்குக் காலமில்லை, இனிமேல் நன்மை செய்யாதே' என்றுதான்கூறுவீர்கள். இந்த வார்த்தைகளைக் கேட்டுச் சிரிப்பது போன்று தங்கத்தினுடைய முகமும் சிரிப்புடன் காட்சி அளித்தது. அப்போதும் அவனதுமனம் ஆறவில்லை அம்மா நீங்கள் சிரிக்கிறீர்கள். ஏன் எல்லோராலும் கைவிடப்பட்ட ரங்கன் மடையன். என்னவோ அலறுகிறான் என்று சிரிக்கிறீர்களோ. சிரியம்மா நீங்கள் சிரியுங்கள். நான் அழுகின்றேன்; என்று கூறிய ரங்கனுக்கு தாயின் பழையஞாபகம் வருகின்றது. இல்லையம்மா இதை நேரில் கண்டால் பொறுக்கமாட்டீர்கள். நீங்களும் சேர்ந்து தான் அழுவீர்கள். ஆண்டவன் இந்த நிலைக்கு என்னை ஆளாக்கிவிட்டான். உங்கள் விருப்பப்படி அம்மா என்னை பட்டதாரி மட்டும் படிப்பித்துவிட்டார். வேலையைத் தேடி எங்கு சென்றாலும் நொண்டிக்கு இங்கு என்ன வேலை இருக்கிறதென்று துரத்துகிறார்கள் அம்மா, துரத்துகிறார்கள். அதுதான் போகுது வேலை இல்லாவிட்டால் பரவாயில்லை. சும்மா வீட்டில் இருப்போம் என்றால் அப்பாவுக்கு ஒரு மருமகள் தேவையென்று ஊரெல்லாம் தேடிச்சென்றால் நொண்டிக்கு நாங்கள் பெண்கொடுக்கமாட்டோம், நொண்டியை நான் கலியாணம் செய்யமாட்டேன் என்ற வார்த்தையைத்தவிர வேறுவார்த்தையேகிடைக்கவில்லை அம்மா கிடைக்கவில்லை ஏன் அம்மா நீங்கள் போகும்போது அப்பாவுக்கு அப்படிக்கூறினீர்கள். அப்படிக் கூறாவிட்டால் அப்பாவுக்கு இந்த அவமானம் எப்படி அம்மா வரும். அந்தப் பெண் சொன்னாளாமே நொண்டியைக் கலியாணம் பண்ணிவிட்டு அவரைத்தலையில் சுமந்துகொண்டு திரிவதா என்று. இந்த வார்த்தைகளைக் கேட்டுவிட்ட பிறகும் எப்படி அம்மா தூக்கம் வரும்...?

ரங்கன் படத்தை உற்றுப் பார்த்தான். கவலைப்படாதே உனக்கும் நல்ல காலம் வரும் என்று கூறுவது போல் சிரித்தபடிகாட்சி அளித்தது தங்கத்தின்முகம்.

அடே ரங்கன் நீ இன்னுமா தூங்கவில்லை நீ தூங்கி இருப்பாய் என்றல்லவா இவ்வளவு நேரமும் அங்கு தங்கிவிட்டு வந்தேன் என்று கூட்டத்திற்குச் சென்ற குருசாமி கேட்டபடி உள்ளே வந்தார். மகனுடையநிலைமையைப்பார்த்துவிட்டு தானும் அவனுடன் சேர்ந்து அழுவதைத்தவிர வேறு ஒன்றும் அவரால் அப்பொழுது செய்யமுடியவில்லை. ஆனால் தானும் அழுதால் மகனுடைய கவலை கூடிவிடும் என்று எண்ணி அவனைச் சாந்தப்படுத்த முயன்றார். "அப்பா எனக்கு உத்தியோகம் இல்லாவிட்டாலும் உங்களுடையபென்சன் காணுமப்பா நாங்கள் நிம்மதியாக வாழ்வதற்கு இனி என்னைச் சாகவா கூறினீர்கள்?" அழுதபடி ரங்கன் கூறினான். "உன்னால் நான் அடையும் வேதனை கொஞ்சம் அல்லடா. நீ கூறியது போல் என்னுடைய வருமானம் இருவரும் நிம்மதியாக வாழப்போதும். ஆனால் அன்று உனது அம்மா என்னிடம் வேண்டியதை எப்போது பூர்த்தி செய்யப் போகிறேன் என்று துடியாய்த்துடித்துக் கொண்டுஇருக்கின்றேன். முடியவில்லையே அப்பா, உனக்கு ஒரு நல்ல பெண்ணைத் திருமணம் செய்துவைத்த அன்றுதான் உனக்கு நான் தகப்பனும் உன் தாய்க்கு நான் புருஷனும் ஆவேன். இந்த நாள் எப்போது வரும் என்று எனக்கே தெரியவில்லை" என்று கண்களில் நீர்வழியக் கூறினார். "எனதுதிருமணத்தைப் பற்றித்தானே உங்களுக்குக்கவலை. அதை இன்றுடன் ஒழித்துவிடுங்களப்பா. நான் என்றைக்குமே பிரமச்சாரி." எடுத்த எடுப்பிலே கூறிவிட்டான்ரங்கன். நான் கூறியும் இவனுக்குப் புரியவில்லையே என்று எண்ணித் திருப்தியற்றவராக ரங்கன் உமது அம்மா இறக்கும் போது என்னடா கூறினாள். நீயும் பக்கத்தில் இருந்தாய்தானே. "ரங்கனுக்கு ஒரு நல்ல பெண்ணைப் பார்த்து கல்யாணம் பண்ணிவைத்தால்தான் எனது ஆன்மா சாந்தியடையும் என்று கூறினாளே. நான் என்னடா செய்வது? உனது அம்மாவின் ஆன்மா சாந்தி அடைவதை நீ விரும்பவில்லையா?" என்றார் தகப்பனார் குருசாமி. இதைக்கேட்டு ரங்கனுடைய உள்ளம் வெதும்பியது. "இல்லையப்பா நாங்கள் எவ்வளவு கஷ்டப்பட்டாலும் அம்மாவின் ஆன்மா சாந்தியடைய வேண்டும். அதற்காக நீங்கள் எதைச் செய்யச்சொன்னாலும் செய்கின்றேன். ஆனால் எங்களை இறைவன்கூடக் கைவிட்டுவிட்டாரே!" என்றான் ரங்கன். "இல்லை ரங்கன் இறைவன் எங்களைக் கைவிடவில்லை. எங்களைச் சோதிக்கின்றார் முன்னவன் முன் நின்றால் முடியாதபொருள் உள்ளதோ?" என்று கூறி ரங்கனுடைய மனத்தையும் தன்னுடைய மனத்தையும் சாந்தப்படுத்திக்கொண்டார். இதன்பின் ஒரு மாதம் கழிந்துவிட்டது.

அன்று வெள்ளிக்கிழமை குருசாமி பக்கத்தில் உள்ள கோவிலுக்குச் சென்றுவிட்டு வரும்போது ஒரு புதினத்தாளும் வாங்கிவந்து விருந்தையில் உள்ள சாய்வு நாற்காலியில் சாய்ந்து அதனைப் படித்த வண்ணம் இருந்தார் அப்போது மா மா என்ற இரக்கமான குரல் கேட்டது இதுவரை காலமும் இப்படியாரும் கூப்பிட்டாத கிடையாது. யாராயிருக்கலாம் என்று எண்ணியவராய் முகத்துக்கு முன் இருந்தபுதினத் தாளைச்சற்று கீழேபதித்தார். அன்றுஎனது மகனை இகழ்ந்த இந்தப் பெண் ஏன் இங்கு வந்தாள்? ஏன் வந்தவுடன் மாமா என்று கூப்பிடுகிறாள், என்ற எண்ணங்கள் குருசாமியின் மனத்தில் சுழன்றன எதற்கும் அவளைக் கேட்டு அறியலாம் என்ற துணிவுடன் "என்னம்மா என்னவிஷயம் அதுவும் இந்த அதிகாலையில் என்று கேட்டார். "மாமா அன்று ஏதோ கூறிவிட்டேன், இப்பொழுது தான் உங்களையும் உங்களது மகனது தியாகத்தைப்பற்றியும் அறிந்தேன். அதனால் தான் உங்களிடம் மன்னிப்புக்கேட்பது மட்டுமல்ல வேறு பல விஷயங்களும் கதைப்பதற்காக நானே நேரில் வந்துவிட்டேன்" என்றுமிகவும்மென்மையான குரலில் லீலா கூறினாள். அன்று அப்படிக்கூறிய அதே பெண் இன்று இப்படிக்கூறுகின்றாளே என்று எண்ணியபடி "என்னம்மா ஒன்றும் புரியவில்லையே புரியச்சொல்லேன்!" என்று விழித்துப் பார்த்துக்கேட்டார். லீலாவும் என்ன என்று கூறுவதென்றே புரியாது வாயடைத்து நின்றுவிட்டு சில விநாடிகளின்பின் "நீங்கள் அன்று அப்பாவிடம் பெண் கேட்டதும் அப்பா என்னை அழைத்து அவர்கள் எங்களுக்கு எத்தனையோ பெரிய உதவிகளைச் செய்திருக்கிறார்கள் ஆகவே நீ ரங்கனைக் கலியாணம் செய்துகொள் என்று கேட்டதும் நான் உங்கள் முன்பாகவே உங்கள் மகளை இகழ்ந்ததுடன் திருமணம் செய்வதற்கும் மறுத்ததும் உங்களுக்குத் தெரியும். ஆனால் அதன்பின்நடந்ததுதான் உங்களுக்குத் தெரியாது" என்றாள். "ஆம்" என்று ஆமோதிப்பது போல் தலையை ஆட்டினார் குருசாமி.

லீலா தொடர்ந்தாள்:

ஒருநாள் என் சினேகிதிராணியும் நானும் பூந்தோட்டத்தில் பல விஷயங்களைப் பற்றிக் கதைத்துக்கொண்டிருந்தோம். அப்போது லீலா லீலா நீ கூறினையே நொண்டியைத் திருமணம் செய்யும படி. உங்கள்அப்பா உன்னைக் கேட்டதாக அதை நான் எனது தாத்தாவிடம் [illegible] னேன். அவர் அப்போது ஒரு சம்பவம் பற்றிக் கூறினார். யாரோ ஒரு பெண் ஒருநாள் பாடசாலைக்குச் சென்றுகொண்டிருந்தபோது பக்கங்களைப்பார்க்காது வீதியைக் கடந்தாளாம், அப்போது வேகமாக வந்த கார் அவளை மோதும் தறுவாயாக நெருங்கிவிட்டது. அவளைக் காப்பாற்றுவதற்கு ஒருவரும் முன்வரவில்லை. கையில் புத்தகங்களுடன் வந்த ஒருவன் திரும்பப் பார்த்தான் புத்தகங்கள் சிதறின; ஓடிஓடிவந்து அந்தப் பெண்ணைத் தூக்கினான் அந்த நேரத்தில் அந்தப்

(12-ம் பக்கம் பார்க்க)

சின்னஞ் சிறு கதை

# அவளுக்கென்று ஓர் இதயம்

இன்றுடன் இரண்டு நாட்களாகின்றன. அவன் பிடிவாதமாகப் பசி கிடக்கிறான். 'ஏன்...?' அவளுடன் மௌனமாக விலகிச் செல்கிறாள், 'காரணம் என்ன?'

ஆம்! அவளுடன் அவனுக்கு மனஸ்தாபம்! ஆற்ற முடியாத கோபம்!

'அவளா என்மனம் நோக நடந்தாள்? அவளா என் மனம் நோகும்படி வார்த்தைகளைக் கொட்டினாள்?' நினைக்க நினைக்க அவன் மனதில் அனல் குழம்பு கொதிக்கிறது.

அவள் பெண்ணல்லவா; அவன் அப்படித் தன்னையே வருத்திக்கொள்வது அளவில்லா வேதனையைக் கொடுக்கிறது. அவன் இரண்டு அடி அடித்திருந்தால் அவள் பொறுத்திருப்பாள். ஆனால். அவனோ அப்படிச் செய்யாது மௌனத்தின் பின்னணியில் பசியைத் துணைகொண்டு, விலகி நடந்துவிடும் அவளைப் புழுவாகத் துடிக்கவைக்கிறது. 'நான் தவறு செய்து விட்டேன்! நான் தவறு செய்துவிட்டேன்!' என்று மனம்புழுங்கி தனக்குள் மாய்ந்து போகிறாள் அவள். அந்த வேதனையே அவளைச் சங்கல்பம் செய்யவைக்கிறது. அப்பெண்மனம் அவனிடம்பணிந்து மண்டியிடுகிறது. அதற்குப்பதிலாக அவன் அன்பில் கட்டுண்டு, அவன் உள்ளத்துடன் சங்கமமாகத் துடிக்கின்றது

இனிமேல் உங்கள் மனசு நோக நடக்கமாட்டேன். என்னை மன்னித்துச் சாப்பிடவாங்க!'

'... ... ... ... ...'

அவன் மௌனம் அவளை மேலும் வேதனைப்படுத்துகின்றது. ஆற்றாமை நெஞ்சைவிள்ள அவள்கெஞ்சுகிறாள்.

என்னை நம்புங்க! உங்கள் சாந்தாவைப் புரிந்துகொண்டது இவ்வளவுதானா...?

'பேசுங்களேன்! ஏன் இப்படி இருக்கிறீங்க?' அவள் அவன் கரம்பற்றிக் கேவிவிடுகிறாள்.

'நான் எச்சந்தர்ப்பத்திலும்:...எக்காரணங் கொண்டும் ...உங்கள் மனசுநோகும்படி... பேசமாட்டேன்......!

## "நீலா"

ஆற்றாமையுடன்விம்மிவிடுகிறாள்அவள். பசிஅவள் உடலையும் உள்ளத்தையும் தளர அடிக்கிறது. அவனுக்குத் தெரியும் அவள் உறுதி. எனவே அவன் எழுந்துகொள்கிறான்.

இன்றோ ... ...!

தள்ளாடி நடந்துவரும் அவன் குரலுடன் சுவர்க்கடிகாரமும் 12 முறை சப்தித்து இணைந்துகொள்கிறது.

அவனுக்காகக் காத்திருக்கும் அவள், மனசைக் கட்டுப்படுத்த முடியாமல் கேட்டுவிடுகிறாள்.

'தினமும் இப்படி வதைக்கிறீர்களே உங்களுக்கே நல் ருக இருக்கிறதா?'

'பே...சா...தே...!'

'உங்களுக்காக தினமும் நான்ஒருத்தி காத்திருப்பது நினைவில்லையா?'

'ஏய் ... சாந்தி ... ...! என் மனசு நோக நடக்கப் போகி...று...ய்...! அப்படித்தானே'

அவள் மனசு கூசிக் குறுகுகிறது. அவள் சங்கல்பத்தை அவன் நினைவூட்டுகிறானா? அவள் அதை மறந்துவிட்டாளா இல்லை. அதனாலல்லவோ இத்தனை நாட்கள் பொறுமையுடன் இருந்தாள். அவள் அவனை நிதானமாக நோக்குகிறாள். மனசைக் கல்லாக்கிக்கொண்டு அவள் பேசும்போது உடல் அதிர்கிறது.

'இப்படியேபோனால் நம் நிலை என்ன ஆகும் நினைத்துப் பார்த்தீர்களா?

'பளீர் ... ; பளீர்...!'

அவள் இருகன்னங்களும் அவனுக்கு மத்தளமாகின்றன. அவன் தள்ளாடிப் படுக்கையில் விழுகிறான்.

சோற்றைப் பிசைந்தபடி கட்டிலருகே வந்த அவள் அவனைத்தாங்கி இருத்தி கையில் உருட்டி வைத்த போது, இடதுகரம் அவன் துடிக்கும் நெஞ்சை அமர்த்திப் பிடித்துக்கொள்கிறது. அந்தக்கட்டுக்குள்ளும் அவளுக்கென்று ஓர் இதயம் இருக்கவே இருக்கிறது. அது அவனுக்காகஇரங்கும்போது அவளுக்காக மௌனமாக அழுகிறது. அதைப் புரிந்து கொள்ள அவன் இதயத்துக்குச் சக்தியில்லையே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊமையாய் பிறந்தவர்கள் பாக்கியசாலிகள்!



இவர்தான் பொ கெங்காதரம்பிள்ளை

சந்திப்பு: வி. இன்னாசிமுத்து

யாழ். நகரிலுள்ள பிரபல படப் பிடிப்பு நிலையத்தில் வேலைபார்க்கும் திரு. கெங்காதரம்பிள்ளையைச் சந்தித்தேன். அண்மையில் நடைபெற்ற கைதடி செவிடர் — குருடர் சங்க பழைய மாணவர் சங்கத்தின் நாலாவது வருடாந்தக் கூட்டத்தில் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டவர் அவர்.

ஆங்கிலமும் தமிழும் நன்றாக அவருக்குத் தெரியும். ஆனால் அவரால்தான் பேசமுடியாதே. எழுதுகிறார் எழுதிக்காட்டுவதைப் படித்து விளங்கிக்கொள்கிறார். அவருக்குக் கைவந்த மூன்றாவது மொழியான 'சைகை' மூலமும் எழுத்து மூலமும் நான் அவரைப் பல கேள்விகள் கேட்டேன். அவரும் சைகை மூலமும் எழுத்து மூலமும் பதில் தந்தார்.

'கெட்டதைக் கேட்காதே. என்று மகாத்மா காந்தி கூறியுள்ளார். எங்கள் செவிகள் கெட்டதைக் கேட்கமாட்டா கேட்கவே முடியாது. இது மகிழ்ச்சி தரும் விஷயம் தான். ஆயினும் நல்லதைக் கூடக் காதாரக் கேட்டு மகிழவும் முடியாமல் போய் விட்டது. துரதிர்ஷ்டம் தான் 'கெட்டதைப் பேசாதே' என்றார் காந்தி. அதனால்தான்போலும் எங்களால் கெட்டதைப் பேச முடியாதபடி நாங்கள் ஊமைராக்கப்பட்டோம். நல்லதைச் சொல்ல ஊர் முழுக்க ஆளிருக்கே' என்ற திரு. கெங்காதரம்பிள்ளை தம் பக்கலில் இருந்த தமது நண்பர்களிடம் சைகை மூலம் எதையோ விளக்கிவிட்டு 'உலகத்திலுள்ள மனிதர்களுள் ஊமையராய்ப் பிறந்த நாங்கள் பெரும் பாக்கிய சாலிகள்' என்றார்.

பிரபல தமிழ் அரசியல் கட்சியொன்றின் ஆதரவாளராகவும் அக்கட்சியின் கொள்கைகள் நிறைவேற வேண்டுமென்பதில் ஆர்வமுடையவராகவுமுள்ளஇவர் எமதுசங்க அங்கத்தவர்கள், தனிப்பட்ட முறையில் எந்தக் கட்சியிலும் பற்றுவைக்கலாம். ஆனால் சங்கத்தில் அரசியல் புகுத்துவது எங்கள் சங்கத்தின் நோக்கத்திற்கே விரோதமானதாகும். ஆனபடியால் எமது சங்கஅங்கத்தவர்கள் சங்கத்தைப்பொறுத்த மட்டில் அரசியல்பற்றி எதுவும் பிரச்னை கிளப்பார்கள்' என்றார்

முருகக் கடவுள்மீது அதிக பக்தி வைத்திருக்கும் இவர் தினமும் வேலை முடிந்ததும் நல்லூர் சென்று வணங்கிய பின்புதான் உணவருந்துவாராம்.

எதிர்காலத்தில் சிறந்த ஒரு புகைப்படக் கலைஞராக விளங்க விரும்பும் இவர், புகைப்படக்கலை பற்றிய நுணுக்கங்களை தீர அறிந்து கொள்ளவேண்டுமென்ற ஆசை கொண்டுள்ளார்.

ஆங்கிலப்படங்களை அதிகமாக இவர் விரும்பிப் பார்ப்பார். தமிழ் நடிகர்களில் சிவாஜி கணேசனில் இவருக்கு அதிக மதிப்பு. 'சிறந்த நடிகர் அவர்' என்கிறார் 'எம். ஜி. ஆர். ஆரம்பகாலந் தொட்டே சண்டைக் காட்சிகளில் நடித்துக்கொண்டிருக்கிறார். மக்கள் மனதை உருக்கும் சோகபாத்திரத்தை ஏற்று இனி அவர் நடித்தால் தான் அவர் திரைப்பட உலகில் நிலைக்கக்கூடும்' என இவர் சொல்கிறார்,

## செவிடர் குருடர் சங்கத் தலைவருடன் பேட்டி

''அகில இலங்கையிலுமுள்ளஎமதுசங்கத்தில்உள்ள அங்கத்தவர்கள் பல பலவிதமான தொழில்களைச் செய்து வாழ்க்கையைநடாத்துகிறார்கள். கொழும்பிலுள்ள சிங்கள நண்பரொருவர், கைத்தொழில் நிலையமொன்றையேநடாத்துகிறார். வேறு சிலர்அச்சகங்களில் மெஷின் மைன்டர்களாகவும், ஆங்கில அச்சுக்கோப்பாளர்களாகவும் திறமையாகப் பணிபுரிகின்றனர்'' என திரு. கெங்காதரம்பிள்ளை சொன்னார்.

''எங்காவது வாய்பேச முடியாதவர்களைக் கண்டால் நான் மகிழ்ச்சியடைகிறேன்'' என்றார்.

''அவர்களும் உங்களைப் போலும் என்று ஆறுதல் போலும்.''

''ஆமாம்; அவர்களும் எங்களைப் போல் பாக்கியசாலிகள்.''

வாய் பேசாத, காது கேளாத பிள்ளைகளைப்பெற்ற பெற்றோருக்கு அவர் கூறும் ஒரு யோசனை:

'வாய் பேச முடியாதவர்களைச் சிறு வயதிலேயேசெவிடர் குருடர் பாடசாலையிலேயே சேர்த்துவிடவேண்டும். அப்படிச் சேர்த்துஅவர்களுக்கு அறிவூட்டாமல் வீட்டோடு வைத்துக்கொண்டிருக்கும் பெற்றோர்கள், அந்தப்பிள்ளைகளின் எதிர்கால வாழ்வுக்கு முட்டுக்கட்டை போடுபவராவர்.''


எக்காலத்திலும்
எந்நேரத்திலும்
நற் சுகமளிப்பது
பேயாவ





ஒரு 'கிளாஸ்' பேயாவ— ஒளடத பானம், பிரபல மருத்துவச் செடிகளிலிருந்து உருவான கருச்சத்து பேயாவ. தடிமல், காய்ச்சல், ஜலதோஷம், இருமல் ஆகியவற்றிற்கு கைகண்ட ஒளடதம் பேயாவ. பேயாவ — எக் காலத்திலும், எந்நேரத்திலும் நற் சுகமளிக்கும் ஒளடத பானம்.

எலிபன்ட் ஹவுஸ்


GRANT 99 114 70


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'நிழல்'

# நாடக விழா

நிழல் நாடக மன்றத்தினரின் இரண்டாவது நாடக விழா யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் "அவளைக் கொல்லாமற் கொன்றவனுடன்" கோலாகலமாகக் கொடியேறி ஆரம்பித்து, இரண்டாம் நாள் விழாவில் "பாவிகளாகாமல்" தவறி, மூன்றும் நாள் கவிஞர் அம்பியின் "வேதாளம் சொன்ன கதை" யால் உச்சக் கட்டத்தையடைந்து நான்காம் நாள் 'கொலேகாரர்" ஞல் தாக்கப்பட்டு ஐந்தாவது நாளாகிய இறுதி நாளன்று பூங்காவனத் திருவிழா போன்று வெகுவிமரிசையாக நடத்தவேண்டியதற்குப் பதிலாக, வைரவர் கோயில் வேள்வியைப்போல் பறைகள் ஒலிக்கச் சன்னத ஆட்டங்களுடன் வந்து "வாடகைக்கு ஓர் அறை" எடுத்து விழா முடிவடைவதற்கு முன்னரே ஏற்றி வைத்த கொடியையும் இறக்கிவைத்துவிட்டார்கள்.



நாடகத் தயாரிப்பாளரும் நடிகருமான ஏ. ரகுநாதன்




ஒரு "திருவிழாச்" செய்வதே பெரும்பாடாக இருக்கும் இக்காலத்தில் தொடர்ந்து ஐந்து நாட்களாக ஒருவரே முன்னின்று விழா எடுப்பதாஞல் அது கலைத் தெய்வத்தின்மீது திரு. ரகுநாதன் வைத்திருக்கும் வற்ருத பாசமும் நம்பிக்கையுமே என நாம் அவரைப் பாராட்டாமலிருக்க முடியாது. ஆனுலும்—

தரமான நாடகங்கள தயாராகக் கைவசம் இல்லாதபட்சத்தில் முதல மூன்று நாள் விழாவுடன் நாடக விழாவை முடித்திருந்தால் அது புத்திசாலித்தனமாயிருக்கும்.

மூன்ரும் நாள் விழாவில் மேடையேற்றப்பட்ட "வேதாளம்சொன்னகதை" கவிஞர் அம்பியினுல் எழுதப்பட்ட கவிதை நாடகம். இந்நாடகத்தைத் தயாரித்ததன்மூலம் தயாரிப்பாளர் திரு. ரகுநாதனுக்கும் டைரக்டர் சுஹேர் ஹமீட்டுக்கும் பெரும் வெற்றி கிடைத்திருக்கிறது.

இந்நாடகத்தில் மன்னனுக நடித்த திரு. கே ஏ. ஜவாஹர் ஒரு திறமைவாய்ந்த நடிகர். அவரது பேச்சில் ஒரு குறை. "ல" கரமெல்லாம் "ள" கரமாகவும் "ன" கரமெல்லாம் "ண" கரமாகவும் உச்சரிக்கப்படுவதால் அவரின் நடிப்புத் திறமையில் முப்பது வீதம் புள்ளி குறைந்துவிடுகிறது. வேதாளமாக நடித்த திரு. ஏ. பிரான்சிஸ் தனது பாகத்தைச் சிறப்பாக நடித்து முடித்தார். அவர் பேச்சில் உள்ள சொற் சுத்தமும் 'கணீ' ரென்ற தொனியும், அவரது தோற்றமும் அவர் எவ்வித பாத்திரத்திற்கும் ஏற்றவர் என்பதைக் காட்டிற்று.

முனிவர், புலவர் ஆகிய இரு வேடங்களையும் ஏற்ற திரு. ஏ. ரகுநாதன் இரு பாத்திரங்களேயும் திறம்பட நடித்து தான் முன்னைய இரண்டு நாட்களிலும்விட்ட குறைகளை நிவர்த்தி செய்து கொண்டார் அமைச்சராக வந்த சிசு நாகேந்திராவுக்கு ஏற்ற தோற்றமில்லை உள் வளைந்த நெஞ்சு உடைகளிலும் கவனஞ் செலுத்தப்படாததால் தலைப்பாகையும் துண்டுகளுமாக ஒரு பாம்பாட்டியை ஞாபகப்படுத்தியது நடிப்பும் சோபிக்கவில்லை திரு கிருஷ்ணமூர்த்தி பிராமணஞக் பாத்திரமேற்று எதுவித குறையுமின்றி தன் பெயரைக் காப்பாற்றிக் கொண்டார். வேடப் பொருத்தமும்நன்கு அமைந்தது. தன் மகனைக்கூட்டிக் கொண்டுவரும் காட்சியில் மேடையின் இடது பாகத்திலிருந்து வரும்போது மகனைத் தனது வலது கைப் பக்கமாகக்கொண்டு வந்ததால் மேடையின்முன்பாகத்திற்கு வரும்வரை பையனைத் தெரியவில்லை. அவர் தனது இடதுகை வளத்தில் பையனைக் கூட்டிக்கொண்டு வந்திருத்தல்வேண்டும். மந்திரி பையனைக்கொண்டு வரும்பொழுதும்இதே தவறு ஏற்பட்டதை டைரக்டர் கவனித்தாரோ தெரியாது. திரு. கிருஷ்ணமூர்த்திசொந்தக் குரலில் பாடக்கூடிய வல்லமையிருந்தும் இவர் வாயசைக்கப் பின்னணியில் இவருக்காக ஒரு பாட்டுப் பாடப்பட்டது பலரது கவனத்தையும் ஈர்த்தது. பிராமணப்பெண்ணுக செல்வி ஜெயந்தி இயற்கையாக நடித்தார். சேலையைப் பிராமணப்பெண்கள் கட்டுவது போலக் கட்டியிருந்தால் இன்னும் அழகாய் இருந்திருக்கும். சித்திராதேவி என்ற "செல்வி" பாத்திரம் அவருக்கு நல்ல பொருத்தமானது நடிப்புத்திறமையைக் காட்ட நல்ல சந்தர்ப்பங்கள் கொடுத்து அவருக்கு மேலும் புகழைத் தந்தது. அனுயாசமாக வெகு கச்சிதமாக நடித்து நாட்டியமும் தனக்குத்தெரியும் என்பதையும் காட்டிவிட்டார். வெகு விரைவாக முன்னணிக்கு வந்துகொண்டிருக்கும் நடிகை அவர். சினிமாவில் நடித்துப் பெயர்பெற்ற லடிஸ் வீரமணி 'பசாசு' வேஷத்தை ஏற்றுச் சிறப்பாகச் செய்தார். இந்தப் பாத்திரத்தை அவர் ஏற்றுக்கொண்டது அவரது பெருந்தன்மையைக் காட்டுகிறது.



ஏ. பிரான்ஸிஸ்

ஒளி அமைப்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டிருந்தது. ஓடும் முகில்களும் சந்திரன் வானத்தில் தோன்றியதும் ரசிகர்களிடமிருந்து 'அப்ளோஸ்' வாங்கிய காட்சிகள்.

இசை அமைப்பு, கவிதை நாடகத்திற்கு ஏற்ற வகையில் பொருத்தமான வாத்தியங்கள் சேர்க்கப்பட்டது மிகவும் பாராட்டக்கூடியதாக இருந்தது. நாடகவிழாவின் உச்சக்கட்டமே இந்த நாடகந்தான் என்று சொல்லலாம்.

நான்காவது நாள் நிகழ்ச்சியாக மேடையேறிய 'கொலேகாரன்' 'பொத்'தென்று கீழே விழுந்துவிட்டது. கதையில் விறுவிறுப்போ வேறு ரசிக்கக்கூடிய அம்சங்களோ எதுவுமில்லை. வசனங்கள் "உப்புச் சப்பற்று" இந்தியப்பாணியிலும் இலங்கைத் தமிழிலும் கலந்திருந்ததைக் கவனிக்கக்கூடியதாயிருந்தது பொன்னம்பலமாக நடித்த ரி. ரகுநாதனும் மாணிக்கமாக நடித்த கே. ஏ. ஜவாகரும் வேலைக்காரச் சுப்பனுக வந்த ஏ. பிரான்சிஸ், ரேவதியாக நடித்த சித்திராதேவி முதலியோர் இந்தியப் பாணியில் பேச நாகேந்திரன் பாகமேற்ற கே. கதிர்காமத்தம்பி இலங்கைத்தமிழிலும் இழைப் பாறிய பொலிஸ் உத்தியோகத்தராக நடித்த ஏ. ரகுநாதன் இரண்டும் கலந்த ஒரு பாணியிலும் இரா. ஜெயசந்திரன் இரண்டும் கலந்த ஒரு புதிய பாணியிலும் பேசினர். திரு. ஏ. ரகுநாதனின் நடிப்பில் ஓரளவு களைகட்டியது வசனங்கள் தடுமாறியதால் எடுபடவில்லை தனி வசனம் அளவுமீறி நீண்டிருந்ததால் அலுப்புத்தட்டியது. திரு. ஏ. பிரான்சிஸ் வழமைபோல் நன்ருக நடித்துத்தான் ஒரு நல்லநடிகர் என்று காட்டினுர். பொன்னம்பலமாக நடித்த திரு. ரி. ரகுநாதனின் நடிப்பும் சோடை போகவில்லை. நாகேந்திரன் பாகமேற்ற திரு. கே. கதிர்காமத்தம்பி ஆரம்ப கட்டத்திலேயே சக்திமுழுவதையும் பிரயோகித்ததால் போகப்போக இன்னும் கூட்டத்தெண்டித்து இறுதியில் அகோர தாண்டவமாடி மிதமிதமான நடிப்பு என்று எல்லோரும் பேசக்கூடிய நிலையை ஆக்கிவிட்டார். கைகளை அசைக்காது, வாய்பேசாமலேயே கோபக்கட்டங்களை நடிக்கக் கூடியதாக இருக்கும்போது நீண்டவசனங்களைப் பேசும் போது ஆரம்பத்திலேயே ஆவேசங்கொள்வது நல்லதல்ல. ரேவதியாகச் செல்வி சித்திராதேவி சுமாராக நடித்தார். நடிப்பிற்கு இடமளிக்கப்படவில்லை.

கதை பின்னப்படவில்லை. திருப்பங்கள் ஒன்றுமில்லை. காட்சித் தொடர்புகள் இல்லை. "ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர் வரதன்மேல் அவரின்மாமன் மகள் காதல் கொள்கிருள். மாமனும் விருப்புகிருர். வரதனுக்கும் சம்மதம் ஆனுல் சில நாட்கள் சென்று முடிவு செய்வோம் என்றுசொல்லுகிருர். ரேவதி இறந்து விடுகிருள். உத்தியோகத்திலிருக்கும்போதுவரதஞல்சிறைக்கு அனுப்பப்பட்ட ஒரு 'ரௌடி'- மாணிக்கம் சிறையிலிருந்து தப்பிவந்து வரதனைச் சுட்டுப்பழி தீர்க்கிருன்." இதுதான் கதை.

தயாரிப்பாளரோ டைரக்டரோ அல்லது நடிகரோ தாம் எழுதிய கதைகளை மேடையேற்றி விடவேண்டுமென்னும் ஆசையைவிட்டு நல்ல கதைகளைத் தேர்ந்தெடுத்தல்வேண்டும். கதைகளை எழுதுவதற்கு எத்தனையோ எழுத்தாளர்கள் இருக்கிருர்களே! அந்தச் சுமையையும் ஏன் தாங்கிக் கொள்ளவேண்டும்?



சுஹேர் ஹமீட்

காட்சி அமைப்பில் வீட்டு விருந்தையின் அகலம் போதாததால் வந்த உறவினரில் சிலர் அதிக நேரம் வெளியே நின்றபடி பேசவேண்டிய கட்டம் ஏற்பட்டுவிட்டது. ஒளியமைப்பு நன்ருக இருந்தது. இசை, ஒப்பனைகளும நிறைவாகக் கையாளப்பட்டன. பொதுவாக முன்னைய நாடகங்களைவிட மட்டமாகவே கணிக்கக் கூடியதாக இருந்தது.

இறுதிநாள்விழா ஏதோ குப்பைகூளங்களையெல்லாம் கொட்டிக்குளப்பிக்கூத்தாடி இரசிகர்களின் பொறுமையைச் சோதித்ததுபோலிருந்தது. திரு. என். செல்லையாவின் "வாடகைக்கு அறை" என்ற இந்தநாடகம்எழுதித் தயாரிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. வெறுக்கத்தக்கசொற்பிரயோகங்களும் சிலேடைக் கருத்துக்களைத் தரக்கூடிய சிலவசனங்களும் வந்து-எழுதிப் பாடம் பண்ணுத சொந்தச் சரக்குகள் என்பதைக் காட்டிவிட்டன. ஹாஸ்ய நாடகமென்ருல் வாய்களைக் கோணிக்குதித்துக் கும்மாளம் போட்டுத் தாமும் சிரித்துத்தான்ரசிகர்களைச் சிரிக்கவைக்க வேண்டுமென்பது விதியல்ல நல்ல கருத்துக்களைக்கொண்ட கதைகளை அமைத்து நாசூக்கான வசனங்களைப் புகுத்தி இரசிகர்களைச் சிந்தித்துச் சிரிக்கவைக்கக் கூடியதாக ஹாஸ்யநாடகங்கள் அமையவேண்டும்.



நடிகை சித்திராதேவி

நாடகம் ஆரம்பமாகும் சமயம் மண்டபவாசற்பகுதியில் பரபரப்புக் காணப்பட்டது. என்னவென்று திரும்பிப் பார்த்தபோது முதற்காட்சியில் நடிக்க வேண்டியவர்கள் வேஷத்துடன் அங்கிருந்து கிளம்பி மண்டபத்திஞடாக ஆர்ப்பாட்டங்களுடன் வந்து மேடைமீதேறி நடித்தார்கள். நல்லவேளையாக மண்டபத்து நடுவே நின்று நடிக்கவில்லை. அப்படி அவர்கள் மண்டபத்தின் நடுவேநின்று நடித்திருந்தால் மேடையில் அவர்களுக்காகச் செய்யப்பட்ட ஒழுங்குகள் எல்லாம் வீணுகியிருக்கும். இரசிகர்கள் மேடையில் ஏறிநின்று பார்க்கவேண்டியும் ஏற்பட்டிருக்கும். "மினி-ஸ்கேட்" போன்று இது புதிதாக நாடகக்கலைக்கு வந்திருக்கும் ஒரு நாகரிகமாம். பண்பாடற்ற ஒரு நாடக 'யுக்தி'. முதற்காட்சியிலேயே 'களை' கட்டி மூன்ருவது காட்சியில் வந்த ஆபாசக் கருத்துக்கள் நிறைந்த சிலேடைவசனங்கள் பலரைமண்டபத்தினின்றும் வெளியேற்றின விட்டுக் கொடுக்கும்நோக்கமில்லாது தன் தன் கெட்டித்தனத்தைக்காட்டிவிட வேண்டுமென்ற நோக்குடன் சிலர் வாயில்வந்தபடி வசனங்களைச் சுயமாகப்பேசியதால் சபைக்கு ஏற்றது எது ஏற்காதது எது என்றுதரம்பிரித்துப் பார்க்க அவர்களுக்கு அவகாசமேது? வசனங்களை எழுதிப்பாடம் பண்ணிநடித்தால் ஆபாச வார்த்தைகள் வாயில்வரா. இராசையாவாக நடித்த திரு எம். சண்முகலிங்கமும் வேலைக்காரப் பையன் பாலனுக நடித்த டிங்கிரி கனகரத்தினமும் தவிர்ந்த ஏனையோர் யாவரும் தங்கள் நடிப்பைத்தாங்களே ரசித்துச் சிரித்ததால் பாத்திரங்களின் தன்மையை மறந்துவிட்டார்கள்

திரு. சண்முகலிங்கமும் டிங்கிரி கனகரத்தினமும்மிகவும் இயற்கையாக நடித்துப் பாத்திரங்களின் தன்மையிலிருந்து விலகாது தங்கள் திறமையைக் காட்டினர்.

அரங்க அமைப்பும் ஒளி அமைப்பும்கவரக்கூடியவை.

விமரிசனம் செய்பவர் - 'கே. கே. வி.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்துச்செல்வம்-1

## கடல்கோள், பூமியதிர்ச்சி... யுகப்பிரளயம்

புதிதாக சமுத்திரங்களைத் தோற்றுவிக்கவும் செயற்கை முறையில் பூமியதிர்ச்சியை வருவிக்கவும், காலசுவாத்தியத்தை விஞ்ஞான கூடத்தினின்று நினைத்தபடி மாற்றியமைத்துக் காட்டவும், இதெல்லாவற்றுக்கும்மேல் சந்திரமண்டலத்தையே சாடவும் விஞ்ஞானம் வியத்தகு வளர்ச்சியடைந்திருக்கிறது. சில ஆண்டுகளுக்கு முன் சைபீரியாவின் வடகோடியில் முன்னூறு மைல் நீளமும் ஐம்பது மைல் அகலமும் உள்ள நிலப்பரப்பொன்றை(ஏறக்குறைய இலங்கைத்தீவின் நிலப்பரப்புக் கொண்டது.) ரஷ்ய விஞ்ஞானம் கடல்நீரால் நிரப்பிக் கடல்பரப்பாக்கிவிட்டது. 1957-ல் நிகழ்ந்த இன்னொரு பரிசோதனை ஹிரோஷிமா முதல் அணுகுண்டுப் பரிசோதனை போல, யாவர்க்கும் திகைப்பையும், அச்சத்தையும் உண்டுபண்ணும் சாதனையாயிருந்தது. மொஸ்கோ நகருக்கருகாமையாக உஸ்பெக் பிராந்தியத்தில் ஒரு வனந்தரமுண்டு. அங்கு இருநூறுயார் விட்டமும் நூற்றிமுப்பது அடி ஆழமும் உள்ள குழியொன்றை அகழ்ந்து அதற்குள் ஆயிரம் தொன் நிறைகொண்ட வெடிமருந்தைப் போட்டு நிரப்பி குழியைச் செவ்வையாக மூடிவிட்டு மிக எட்டப்போய் நின்று அதற்கு நெருப்பு வைத்துவிட்டார்கள். அப்பொழுது அது வெடித்த அதிர்ச்சி இயற்கையாகச் சம்பவிக்கும் பூமியதிர்ச்சி போலிருந்ததாம். ஆயிரம் மைல் தூரத்துக்கப்பாலும் வெடியின் அதிர்ச்சியைக் கணிக்கக்கூடியதாகவிருந்தது. இந்த நிலவெடியின் உடனடி விளைவாகத் தோன்றிய பாதாளக்கிடங்கு இப்போதுபெரும் நீர்நிலையாக மாறி இவ்வளவு காலமும் வனந்தரமாகவிருந்த நிலப்பரப்புகளனியும் சோலையும் கொழிக்கும் ஜீவபூமியாகிவருகிறது. இப்பூமி அதிர்ச்சியால் எவ்வித உயிர்ச்சேதமாவது பொருட்சேதமாவது ஏற்பட்டதில்லை.

ஃ ஃ ஃ

## இரண்டாயிரம் ஆண்டுத்தீபம்

மெழுகுவர்த்தி தயாரிப்பில் புகழ்பெற்ற நியூயோர்க் அஜெல்லோ கம்பெனி இற்றைக்கு நாற்பது வருடங்களுக்கு முன் இருபெரும் மெழுகுவர்த்திகளைத் தயாரித்தது. அவற்றில் ஒன்று கொருசோ ஞாபகார்த்த தூபிக்காகச் செய்யப்பட்டது. அதன் நிறை ஒரு டன்; விலை மூவாயிரத்து எழுநூறு டொலர். மற்றொன்று டெக்சாஸ் இலாகா ஸ்டோருக்காகத் தயாரிக்கப்பட்டது. இதன் நிறை இரண்டு டன்; விலை பத்தாயிரம் டொலர். பதினெட்டு அடி உயரமும் ஐந்துஅடி சுற்றளவும் கொண்ட கெருஸோ தூபி மெழுகுவர்த்தி தொடர்ச்சியாக பதினெட்டு நூற்றாண்டுகளுக்கு நின்றெரியும் சக்தி வாய்ந்தது!

# இந்தியாவுக்கு வெளிநாட்டுப் ப... தேடித்தரும் முந்திரிக்கொட்டை...

முந்திரிக் கொட்டை இந்தியாவுக்குப் பெருமளவில் அந்நியச் செலாவணியைத் தேடிக் கொடுக்கிறது. தமிழ் நாட்டில் பெருமளவில் உற்பத்தியாகும் முந்திரிக் கொட்டை கேரளத்துக்குச் சென்று அங்குள்ள ஆலைகளில் பக்குவம் செய்யப்பட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது. இலங்கையிலும் மட்டக்களப்பு, மன்னார் மாவட்டங்களில் முந்திரிஉற்பத்தி செய்யப்படுகிறது. முந்திரிக்கொட்டை உற்பத்திக்குஊக்கமளிக்க நடவடிக்கை எடுக்கப்படுமென்று இங்கு பல தடவைகளிலும் கூறப்பட்டபோதிலும் போதிய ஊக்கமளித்துஅது ஓர் இலாபகரமான தொழிலாக்கப்படவில்லை. இலங்கையில் 'கஜு', 'ககுக்கொட்டை' என்றழைக்கப்படும் முந்திரிக் கொட்டை இந்தியாவில் எவ்வாறு பயன்தருகிறதென்பதையும் முந்திரிகைக் கொட்டையிலிருந்து என்னென்ன தயாரிக்கப்படுகிறதென்பதையும் இக்கட்டுரை விளக்கிக்கூறுகிறது.

இந்தியாவிலேயே முந்திரிக் கொட்டை அதிகமாக விளையும் மாநிலம் தமிழ் நாடுதான். இங்கு அது பயிராகும் நிலப்பரப்பு 2 1/2 லட்சம் ஏக்கருக்குமேல். மொத்த உற்பத்தி 25,000 தொன்னுக்கும் அதிகம். கன்னியாகுமரி, திருநெல்வேலி, இராமநாதபுரம், திருச்சி, தஞ்சாவூர், தென் ஆர்க்காடு முதலிய மாவட்டங்களில் முந்திரி பயிராகிறது.

தமிழ்நாட்டில் விளையும் முந்திரி பெரும்பாலும் கேரளத்துக்குச் சென்று, அங்குள்ள ஆலைகளில் பக்குவம் செய்யப்பட்டு, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது.

கேரளத்தில்தான் நெடுங்காலமாக முந்திரி உற்பத்தி ஒரு தொழிலாகவும். வாணிபமாகவும் நடைபெற்று வருகிறது. கொல்லம்தான் பன்னெடுங்காலமாக முந்திரித் தொழிலின் தலைநகர். இந்தியா முழுவதிலும் மொத்தம் 170 முந்திரி ஆலைகள் உண்டு. இதில் ஏறத்தாழ 150 ஆலைகள் கொல்லத்திலும் சுற்றுப்புறங்களிலும் இருக்கின்றன.

சணலுக்கு அடுத்தபடியாக இந்தியாவுக்குப் பெருவாரியாக அந்நியச் செலாவணி ஈட்டித்தருவது முந்திரிதான்.

முந்திரிப்பருப்பு என்றதுமே நாக்கில் யாருக்குத்தான் நீர் ஊறாது? கொட்டைப்பருப்பு வகைகளிலேயே சுவையும் ஊட்டச் சத்தும் மிகுந்தது. முந்திரி, கொழுப்புச்சத்துக் குறைவு; ஆனால் புரதச்சத்து மிகுதி எனவே உடல் உப்பிவிடுமென்ற பயமின்றி யாரும் உணவில் நிறைய முந்திரி சேர்த்துக் கொள்ளலாம.

# இலங்கையில் உற்பத்தி செய்ய வாய்ப்பில்லையா?

உலகம்முழுவதிலும்இன்று மக்கள் உண்ணும் முந்திரியில் பத்தில் ஒன்பது பங்கு இந்தியாவிலிருந்து ஏற்றுமதி ஆவதே.

முந்திரி இறக்குமதி செய்யும் நாடுகளில் முன்னணியில் இருப்பது. அமெரிக்காவே. நம் நாட்டின் மொத்த ஏற்றுமதியில் பாதி அமெரிக்காவுக்குத்தான் போகிறது. "அமெரிக்காவில் முந்திரிக்கு கிராக்கி பெருகிக்கொண்டே போகிறது. அங்கு இரண்டு மூன்று பெரிய நிறுவனங்கள் அவ்வளவையும் வாங்கி நாடு முழுதும் விற்பனைசெய்கின்றன. அவர்களிடம் வேண்டிய வசதிகள் உண்டு. இதே நிலைமை நீடித்தால், அமெரிக்காவின் தேவையை மட்டும் கூட நாம் நிறைவுசெய்வது கடினமாகிவிடும்" என்கிறார் ஜனார்த்தனன்பிள்ளை, தென்னிந்தியா முந்திரி உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் இவர்.

முந்திரியை 24 வகைகளாகத் தரம் பிரிக்கின்றனர். உப்பு காரம், இளம்வறுப்பு, முழு வறுப்பு என்று விருப்பத்துக்கும், வேளைகளுக்கும் ஏற்பப் பல சுவைகளில் இது கிடைக்கின்றது. பக்குவம் செய்யப்பட்ட முந்திரி, 25 ருத்தல் நிகர எடையுள்ள ரின்களில் அடைக்கப்பட்டு வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகிறது.

கேரளத்தில் இன்று முந்திரித் தொழில் அடைந்துள்ள வளர்ச்சிக்கு ... ஸ்ணபிள்ளை (என். என் ... ஆலைகள்), கே. பரமேசுவர... பிள்ளை(கே. பி. பி. ஆலைகள்) தங்கல் குஞ்சு முதலியா... முதலியோர் பெரும்ப... புரிந்துள்ளனர்.

1925-ல் கே. பி. பி. ஆ... கள் தொழில் தொடங்கின... கோவாவில் முந்திரி... தொழில் தொடங்குவதற்... ஜெனரல் ஃபுட்ஸ் ஆஃப் அமெரிக்கா' என்னும் நி... வனமே காரணம் என்... கூறுகிறார், என். கங்காதர... பிள்ளை. இவர் கே. பி... குழுவைச் சேர்ந்தவர். தம... ஏற்றுமதி வாணிபத்... மென்மேலும் பெருக்கு... தற்காக திரு. பிள்ளை அ... கடி அமெரிக்கா போய்வ...

[ ஈழநாடு பரிசு பெற்ற காவியம் — 2 ]

# தித்திக்கும் தேன் நிலவோ!

— கவிஞர் ச. வே. பஞ்சாட்சரம் —

## நச்சி பிறந்தான்!

பிறக்குமுன் வைத்த நேர்த்தி
பெருந்தொகை! பிறந்த பின்மெய்
மறப்பினில் வைத்த நேர்த்தி
வாழ்விடை முடித்துத் தீரா!
சிறப்புடன் வானச் சியனோ
தேன்மழை யாக வந்தான்!
குறிப்பிடும் வண்ணம் மேனி
குலவிடும் ஒளியின் வீச்சு!

பார்த்தவர் அழகிற் சொக்கிப்
பரவசப் பட்டார்! போற்றி
ஆர்த்தனர் கணிகள்! நல்ல
அமையத்திற் பிறந்தான் என்றார்;
ஊர்க்கொரு புதினம் அன்னான்
உதயமீர் மலடர்க் குள்ளே!
கார்த்திகை விளக்கீ டென்னக்
களிசொரிந் தானீன் றார்க்கு!

வானச்சி வளர்ந்தான்! கையில்
வளையணி சங்கி லிக்கு
நானென்ன செய்வேன்! ஆனால்
நட்டமொன் றில்லை! மைந்தன்
தானெண்ணிக் கேட்குங் கால
தரும்நிலை தருக என்று
தானுன்னி வைத்த நேர்த்தி
தம்மைநா கையர் தீர்ப்பர்!

அவன்சட்டை போல வேண்டும்
அவன் தொப்பி போல வேண்டும்
இவன் செருப் புப்போல் வேண்டும்
இவள்பொட்டுப் போல வேண்டும்
சிவன்கோயில் போக வேண்டும்
தெருச்சுற்ற வேண்டும் என்று
தவந்தரு புதல்வன் மெல்லச்
சங்கடம் விளைக்க லானான்!

கந்தையைக் கட்டிச் சாமைக்
கஞ்சியைக் குடித்துக் காலை
முந்தியே வேலைக் கேகி
முடுகியே நிறையச் செய்து
நொந்திட மேனி ஒவ்வோர்
நொடியுமே பாடு பட்டு
வந்ததைக் கொண்டு மைந்தன்
மனம்நிறைப் பார்நா கையர்!

ஓட்டமும் நடையு மாக
ஒன்பதாம் ஆண்டா யிற்று
ஈட்டினிற் பணந்தந் தோரோ
இனியும் நாம் பொறுக்க மாட்டோம்
மீட்கஇம் மாதம் இன்றேல்
விற்குவம் ஏலத் தென்றே
ஆட்டினார் பாம்பாய் ஈற்றில்
அறைந்தனர் பறையும் தட்டி!

மலடனைத் தந்தை யாக்கி
மைந்தனைத் தந்தோன்! பாலைக்
கலடினைக் கனித்தோப் பாக்கிக்
கருணைசெய் வள்ளல் இன்ப
அலகிலாச் சுடலை யாடி
அடியனைக் குடும்பத் தோடு
கலைபட வைப்பா னோநாம்
கட்டிய வீட்டை விட்டே!

ஆண்டவன் காப்பான் என்றே
அசைவின்றி நாகை யர்நெஞ்
சீண்டிய நம்பிக் கைக்கோர்
இழுக்குறு முன்னோர் நண்பர்
மீண்டந்த வீட்டைத் தம்பேர்
விளங்கிட ஈடாய்க் கொள்ள
ஆண்டவன் கருணை யாக
அங்கு வந்தடைந்தார் என்னே?

"கிடைத்திடும் தொகையை வாய்ப்பாய்க்
கிடைத்திடும் சமயம் தந்தே
அடைக்குக கடனை! ஈற்றில்
அழிக்கலாம் ஈட்டை!" என்று
கொடுத்தனன் நெருப்பை விட்டுக்
குதித்திடுஞ் சலுகை தன்னை!
வடித்தனர் இன்பக் கண்ணீர்
வானச்சி பெற்றார் கேட்டு!

நாளொடு பையும் போழ்தின்
நடையொரு நாலு மாக
வேளைகள் தவறா துண்டு
மிடுக்குற வளர்ந்தான் நச்சி!
காளைய னாகிப் பத்தாம்
கடைப்படி வகுப்பில் நின்றான்!
தோளுக்கு மிஞ்சிட் டாலும்
தொட்டிலிற் பிள்ளை போல்வான்

கேட்டதைக் கேட்ட வாறு
கிளர்வுட னவனுக் கீய்த்
தேட்டத்தின் சிறுமை, அன்னான்
தினஞ்செயுஞ் செலவின் வீக்கம்
ஈட்டிற்கு மாதாமாதம்
எடுத்திடும் தொகை விடாவே!
வாட் டத்தை ஒருவாறகத்
தவிர்க்கிறார் வயிற்றைக் கட்டி!

பெற்றதைக் கொண்டே ஆறும்
பெரும்பொறை மகனுக் கில்லை!
மற்றவர் செய்வ தெல்லாம்
மறுகணம் தானும் செய்ய
நிற்றலே இயல்பாய்ப் பெற்றான்!
நிலைமையை உணராப் பிள்ளை!
கற்றதன் பயனிவ் வாறோ
கடவுளே நாமென் செய்வோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணத்தை ...ாட்டை

...அந்நியச்
...நாட்டில்
...கேரளத்
...செய்யப்
...கையிலும்
...உற்பத்தி
...க்குஊக்க
...தடவை
...ந்துகஅது
...லிங்ஙயில்
...முந்திரிக்
...பதையும்
...தயா
...றுகிறது.

கிறார். (முதன்முதல் போர்த்துக்கீசர்களே பிரேஜில் நாட்டிலிருந்து இந்தியாவுக்குக் கொண்டுவந்து முந்திரி வளர்த்தார்கள்)

முந்திரித் தொழிலை அடிப்படையாகக் கொண்டு, ஒரு துணைத்தொழில் தோன்றி வளர்ந்து வருகிறது. இதுவும் அந்நியச் செலாவணி ஈட்டித்தருகிறது. முந்திரிக் கொட்டைத் தோட்டிலிருந்து எண்ணெய் எடுத்து ஏற்றுமதி செய்வதே இந்தத் துணைத்தொழில்.

முந்திரித் தொழிலின் முன்புள்ள பெரிய இடர்ப்பாடு என்ன? வெளிநாட்டுத் தேவைக்கு ஏற்ப உற்பத்தி பெருகாததே இந்த இடர்ப்பாடு. கடந்த சில ஆண்டுகளில் பிற நாடுகளிலிருந்து ஏராளமாக முந்திரிக் கொட்டை இறக்குமதி செய்து, தோடுஅகற்றி, தரம் பிரித்து பக்குவப்படுத்தி ஏற்றுமதி செய்ய வேண்டி வந்தது. பெரும்பாலும் கிழக்கு ஆப்பிரிக்காவிலிருந்தே இறக்குமதி செய்தார்கள். இந்தியாவில் முந்திரி உற்பத்தியைப் பெருக்க முழுமுனைப்போடு முயற்சிசெய்து வருகிறார்கள்.

நன்றி - அமெரிக்க றிப்போட்டர்

## ...த்தி ...லயா ?

...ர்ச்சிக்கு ...கிடு
...(என், என் சி.
...கே. பரமேசுவரன்
...பி, பி. ஆலைகள்)
...சு முதலியார்
...ர் பெரும்பணி
...னர்.

...கே. பி. பி. ஆலை
...ல் தொடங்கின.
...முந்திரித்
...தொடங்குவதற்கு
...ஃபுட்ஸ் ஆஃப்
...' என்னும் நிறு
...ாரணம் என்று
...என். கங்காதரன்
...இவர் கே. பி. பி.
...சேர்ந்தவர். தமது
...வாணிபத்தை
...ம் பெருக்குவ
...ரு. பிள்ளை அடிக்
...ரிக்கா போய்வடு

...ப்பாய்க்

...ன்

## பார் அப் புகையிலையின் பண்பு - 5

சயரோகம், சலரோகம் முதலிய நோய்களுக்கு இந் நாட்டில் 'கிளினிக்' வைத்து ஒழுங்கான சிகிச்சை அளிப்பதுபோல, புகைப் பழக்கம் என்னும் நோயைக் குணப்படுத்துவதற்குப் பிரிட்டனில் 'கிளினிக்' வைத்து நடாத்துகிறார்கள். புகைப் பழக்கத்தை மறந்துவிடுவதற்கு இங்கே வைத்தியர்களும் மனோதத்துவ நிபுணர்களும் பலவித முறைகளையும் ஆலோசனைகளையும் எடுத்துக் கூறுவார்கள்.

வருடமொன்றுக்கு 18000 சிகரெட் புகைத்துத் தள்ளி வந்த ஒரு பெண்ணின் அனுபவத்தைக் கேளுங்கள்:-

'காலையில் கண்விழித்தவுடன் சிகரெட் தடவுவது தான் என் முதல் வேலை. இரவில் கண்மூட முன்பு செய்யும் கடைசி வேலை சிகரெட்டை நசுக்கி நூர்ப்பது. டாக்டர் என்னை எச்சரிக்கை செய்தார். நண்பர் ஒருவர் சுவாசப்பை புற்று நோயால் அழுந்தி மாண்டார். எனக்கும் பயம் வந்துவிட்டது. கிளினிக்குக்குப் போவதென்று தீர்மானித்தேன்.

'கிளினிக்' டாக்டர் வந்தார். புகைக்கும் பழக்கம் எப்படி ஆரம்பித்தது; எப்பொழுது; ஏன் என்று பல கேள்விகளைக் கேட்டார். என்னுடன் கூட இன்னும் பதினொருபேர் இந்த கிளினிக்குக்கு வந்திருந்தார்கள். ஒவ்வொருவரும் தத்தம் வரலாற்றைக் கூறினோம். டாக்டர் சொன்னார்: ஆகாயத்தில் பறக்கும் ஒவ்வொரு எட்டு விமானங்களிலும் ஒன்று விபத்துக்குள்ளாகி நொருங்குகிறது என்று விமான நிலையத்தில் தெரிவித்தார்களானால் உங்களில் எத்தனை பேர் விமானம் ஏறுவீர்கள். இதுபோலத்தான் புகைப்பவர்களும் தங்களுக்கு வரக்கூடிய ஆபத்தையும் கருதாமல் புகைக்கிறார்கள். அடுத்தவாரம் இங்கு வருவதற்கு முன்பு நன்றாகச் சிந்தனை செய்து, உங்கள் உள்ளங்களைச் சோதித்து, புகைப்பதை நிறுத்துவதால் என்ன லாபம் உண்டாகுமென்பதை ஆராயுங்கள்.

அடுத்த வாரம் நாங்கள் எல்லோரும் போனோம். இந்த வாரம் தொடக்கம் நீங்கள் புகைக்கும் சிகரெட்டின்தொகையைக் கொஞ்சம்

# புகைப்பதை நிறுத்த ஒரு புதிய மார்க்கம்

கொஞ்சமாக குறைத்துக் கொள்ள வேண்டுமென்றும், தாம் அதைப்பற்றி ஒரு கணக்கு வைத்துக்கொள்ளப் போவதாகவும் டாக்டர் சொன்னார். எங்களில் ஒருவர் எழுந்து நின்று தான் ஏற்கனவே நிறுத்திவிட்டதாகக் கூறியபோது எல்லோரும் அவரை ஆச்சரியத்துடன் நோக்குகினோம், நான் சற்றே குற்றமுள்ள நெஞ்சுடன் எழுந்து வழக்கமாக ஒரு நாளில் புகைக்கும் ஐம்பது சிகரெட்டுகளை ஏழாக குறைத்துவிடுவதென்று உறுதி கூறினேன்.

டாக்டர் சில யோசனைகள் கூறினார். நீங்கள் விரும்பிப் புகைக்கும் இனத்தைக்கூடிய வரை தவிருங்கள் விரும்பாத ஓர் இனத்தை புகையுங்கள். புகைக்கும் ஆசை வரும்போது தெண்டித்து அதைப் பின்போடுங்கள். சாப்பிட்டவுடனே புகைக்கும் நேரத்தைக் கூடியவரை தள்ளிப்போடுங்கள். சிகரெட்டை எந்த நேரமும் கைக்கு எட்டாத தூரத்தில் வைத்திருங்கள்.

அன்றிரவு என்னிடமிருந்த நான்கு சிகரெட்டுகளை ஓர் அசட்டுத் துணிவுடன் துண்டு துண்டாக பிய்த்தெறிந்துவிட்டுப் படுத்தேன். ஆனால் விடியற்காலை ஐந்து மணிக்கு என்னால் தாங்கமுடியவில்லை. மெதுவாக ஒரு சிறிய துண்டை எடுத்து பற்ற வைத்துக் கொண்டேன்.

அடுத்தநாள் புகைக்கும் ஆசை வரும்போதெல்லாம் தரையில் உட்கார்ந்து தேகாப்பியாசம் செய்தேன். புத்தகங்களை ஒழுங்காக வைப்பேன். அலமாரியை சுத்தம்பண்ணுவேன். ஏதாவது செய்துகொண்டேயிருப்பேன் இந்த யுக்தி ஓரளவு வெற்றி தந்தது டாக்டருக்கு கொடுத்த உறுதியை நிறைவேற்றி விட்டேன்.

இப்படியே இன்னும் இரண்டுவாரங்கள் செல்ல, இனிமேல் முற்றாக நிறுத்த வேண்டிய காலம் வந்துவிட்டதென்று டாக்டர் ஒரு நாள் சொன்னார். எனக்கு திக்கென்றது. என்னால் அது முடியுமா? தைரியம் வருமா? தயக்கத்துடன்முற்றாகநிறுத்துவதென்று உறுதி கூறி விட்டேன்.

அந்த முதல் வாரம் நான் பட்ட கஷ்டம் கொஞ்சநஞ்சமல்ல, முதலாம் நாள் தலையெல்லாம் வலித்தது. கண் பஞ்சடைந்தது கைகாலெல்லாம் நடுங்கியது. எடுத்ததற்கெல்லாம் சினம்வந்தது. ஆயினும் நான் விட்டுக் கொடுக்கவில்லை. முட்டுத்தடிமனை சகித்துக்கொள்வதில்லையா? பல்வலியை சகித்துக்கொள்வதில்லையா? இதென்ன பெரிய பிரமாதம்!

நான் வென்றுவிட்டேன்! அன்றுமுதல் சிகரெட்டை நான்தொடவில்லை. புகைக்க வேண்டுமென்று ஆசைவரும் போதெல்லாம் சொக்லேட்டைவாய்க்குள்போட்டு உமிவேன். சாப்பிட்டவுடனே சும்மாயிருக்கமாட்டேன்; ஏதாவதொரு வேலையில் கவனத்தைச்செலுத்துவேன். எனக்கு நன்றாகப் பசியெடுத்தது. உடம்புமுழுவதும் புதிய உற்சாகம் ஏற்பட்டது.

— சுநாதன் —


(13 ம் பக்கம் பார்க்க

# மர்மம் நிறைந்த யானைத்தீவு

இந்தப் பூமியில் இன்னும் விஞ்ஞானிகளின் ஆராய்ச்சிக்கு உட்படாத ஒரு மர்மத்தீவொன்று தென்துருவத்தில் உள்ளது. இதன் பெயர் யானைத்தீவு. யானை போன்ற ராட்சத கடல் நாய்கள் இங்கு வசிப்பதால் இந்தத் தீவுக்கு இப்படிப் பெயரிட்டிருக்கிறார்கள்.

தென்துருவத்திலுள்ள செல்டன் தீவுகளில் இதுதான் மிகப் பெரியது. உயர்ந்த மலைகளால் சூழப்பட்ட இந்த யானைத்தீவு பனிப்படலத்தால் மூடப்பட்டிருக்கிறது. இதன் உட்பிரதேசத்தில் மனிதன் இன்னும் காலடி எடுத்துவைக்கவில்லை. இங்கு பயங்கரமான பனிப் பாறைப் பிளவுகளும், செங்குத்தான சறுக்குமலைச் சரிவுகளும் நிறைந்திருப்பதாக விமான ஆராய்ச்சிகளிலிருந்து தெரியவருகிறது.

புதிர்கள் நிறைந்த இந்த மர்மத்தீவில் ஓர் ஆராய்ச்சியை மேற்கொள்ளபபோகிறது ஒரு பிரிட்டிஷ் விஞ்ஞானக் கோஷ்டி. 14 பேர்கள் கொண்ட இந்தக் கோஷ்டியில் ஒரு நில அளவை நிபுணர், ஒரு வைத்தியர், ஒரு புவியியலாளர், ஒரு விலங்கியல் நிபுணர், ஒரு தாவரவியல் நிபுணர் ஆகியோரும் அடங்குவர். இந்தத் தூது கோஷ்டிக்கு கமாண்டர் மல்கம் பேர்லி தலைமைதாங்குவார். இவர் தென்துருவ பனிப்படல ஆராய்ச்சியில் அனுபவமுடையவர்.



நேரத்தை விரயமாக்காமல் இருப்பதற்காக, இக் கோஷ்டியில் இருக்கும் ஒவ்வொரு அங்கத்தவரும், மற்றவரது வேலை முறைகளை ஓரளவு அறிந்து. அதில்

# ஆராயச் செல்லும் வெள்ளையர்

பயிற்சி பெற்றிருப்பார். ஏற்கனவே இக்கோஷ்டியினர், ஸ்கொத்திலாந்தில் உள்ள கேய்ன்நோம் மலை தொடர்களில் தீவிர பயிற்சி பெற்றுவருகின்றனர். யானைத்தீவில் எதிர்நோக்கக்கூடிய காலநிலைகள் இந்த ஸ்கொத்லாந்து மலைத் தொடர்களில் காணக்கூடியதாக இருக்கிறதாம்.

இவர்கள் பிரயாணம் செய்யவிருக்கும் கப்பலின் பெயர் 'என்டியூரனஸ்'. இன்றிலிருந்து சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்னர் சேர் ஷக்கில்டன் என்ற ஆங்கில கப்பலோட்டி தென்துருவ யாத்திரை ஒன்றை மேற்கொண்டபோது அவரது கப்பல் யானைத்தீவுக்குச் சமீபமாக பனிமலைப்பாறைக்குள் சிக்கிக்கொண்டது. இதன் காரணமாக சேர். ஷக்கில்டனும் அவரது சகாக்களும் யானைத்தீவில் தஞ்சம்புக நேர்ந்தது. இவர்கள் இத்தீவின் கரையோரமாக சிறிது காலம் தங்கியிருந்து பின்பு சிறு படகு மூலம் 600 மைல்கள்வரை சமுத்திரத்தில் பிரயாணம் செய்து ஜோர்ஜியா பிரதேசம் சென்றடைந்தனர். எனவே முதல் முதலில் இத்தீவில் காலடி எடுத்துவைத்தவர் சேர். ஷக்கில்டனுவார். எனினும் இவர்கள் இந்தப் புதிர்கள் நிறைந்த தீவின் உட்புறம் சென்று ஆராய விழையவில்லை, தாம் வந்த கப்பலை இழந்துவிட்டதால் வசதிகள் எதுவுமின்றி நீண்டகாலம் இந்தப் பனிப்பிரதேசத்தில் அவர்களால் வசிக்கவும் முடியவில்லை.

கமாண்டா பேர்லியும் அவரது கோஷ்டியினரும் இந்த மாதத்தில் இந்த யானைத்தீவை வந்தடைவார்கள். இத்தீவு பனிமலைப்பாறைகள் நிறைந்த பிரதேசமாகையால் இவர்கள் பெரிய இயந்திரசாதனங்களையோ வண்டிகளையோ கொண்டு செல்லவில்லை. கால் நடையாகவே சென்று, கூடாரமடித்து இத்தீவில் ஆறு மாதங்கள் வரை வசிப்பதற்கு இவர்கள் திட்டமிட்டிருக்கிறார்கள். இத்தீவிலுள்ள விசித்திரமான மிருக இனங்கள், பறவைகள், தாவரவகைகள்போன்றவற்றையும் இத்தீவின் நிலவமைப்புபற்றியும் இவர்கள் ஆராய்ச்சி நடத்துவார்கள்.

(சேர். ஷக்கில்டனின் கப்பல் பனிப்படலத்தில் சிக்குண்டு இருப்பதை இப்படத்தில் காணலாம். இப்படம் 1916-ம் ஆண்டு எடுக்கப்பட்டது.)

''துயரங்கள் துன்பம் பட்டுச்
சுகமெலாம் மறந்து பெற்றே
உயிரெனப் போற்றும் பிள்ளை
ஒருவேளை செத்தால் ஐயோ?''
மயங்கினள் தலையைப் பற்றி
மடைப்பள்ளி அறைய மர்ந்தாள்!
சுயநினை வின்றிச் சோர்ந்தாள்'
சுடலைக் கேகிரையா வாளோ?
(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மாணவ மாணவிகளே!

இவ்வார மலரில் பிரபல எழுத்தாளரும் விமரிசகருமான இரசிகமணி கனக செந்திநாதன் அவர்களின் சிறுவர்கவிதை பற்றிய விளக்கம், மாணவர்களின் சிந்தனைக்கு விருந்தாக சிந்தனைச்சுருள் ஆகிய புதிய அம்சங்கள் இடம்பெற்றுள்ளன, இவைகள் தொடர்ந்து வரும் என மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

—விமலா அக்கா

சிறுவர் கவிநயம் 1

# 'காற்று மாமா கருணை செய்குவீர்

அன்புள்ள தம்பி,

தங்கைகளே!

முப்பதுவருட காலமாக, பெரியவர்கள் வாசிக்கக் கட்டுரைகளையும், சிறுகதைகளையும், நாவல்களையும் எழுதிய நான் இப்போது உங்கள் பக்கம் திரும்பியிருக்கிறேன். வளரும் பயிர்களாகிய உங்களுக்கு ஏதாவது என்னால் செய்ய முடியுமா என்று பார்ப்பதற்குத்தான் சில வாரங்களுக்கு உங்களால் பாடிமகிழக்கூடிய பாடல்களை அறிமுகம் செய்துவைக்கப்போகிறேன்.

இந்தப் பாடல்கள் ஏழு எட்டுவயதுடைய தம்பி தங்கைகளுக்கும் அதற்குக்குறைந்த வயதுள்ளவர்களுக்கும் நிச்சயம் பயன்படும் என்று எண்ணுகிறேன். இப்படியான பாடல்கள் அடங்கிய இலக்கிய மஞ்சரி நூல்களை ஏற்கெனவே இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னே எழுதினேன். அவை இப்போதும் ஈழத்திலுள்ள சில கல்லூரிகளிலும், பாடசாலைகளிலும் படிப்பிக்கப்பட்டு வருகின்றன. எனினும் பாடப்புத்தகத்தில் உள்ளவற்றைவிட இவை சிறிது வேறுபடவே செய்யும்.

நான் எழுதப்போகும் பாடல்களிற் சில ஈழத்துக் கவிஞர்களாற் பாடப்பட்டவை. தமிழ்நாட்டுக் கவிஞர்களாற்பாடப்பட்டவை. தமிழ்நாட்டுக் கவிஞர்களாற் பாடப்பட்டவை சில நல்ல குழந்தைப் பாடல்கள் என நான் எண்ணும் இருபத்தைந்து பாடல்களை வாராவாரம் உங்களுக்கு அறிமுகப்படுத்தப்போகின்றேன்.

நவாலியூர் தங்கத்தாத்தா சோமசுந்தரப் புலவரின் குழந்தைப் பாடல்களையும், கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையவர்கள் பாடியுள்ள கற்கண்டுபோன்ற சிறுவர் பாடல்களையும் நீங்கள்படித்திருப்பீர்கள். துள்ளிக் குதித்திருப்பீர்கள். சிலருக்கு அழ. வள்ளியப்பா என்ற குழந்தைக்கவிஞரின் சில பாடல்களும் தெரிந்திருக்கலாம். ஆனால் இவர்கள் பாடியவற்றை மாத்திரம் படித்தால் போதாது. புதிது புதிதாகப் பாடித் துள்ளி நீங்கள் மகிழவேண்டும் என்பது என் ஆசை

ஏழு, எட்டு வயதுடைய தம்பி தங்கைகளுக்கு மாத்திரம் எழுதுவதால் மற்றவர்கள் — பெரியஅண்ணன், அக்கா போன்றவர்கள் — நமக்கெதற்கு? என்று எண்ணிச் சும்மா இருந்துவிட வேண்டாம். நீங்களும் வாசித்துப் பாடிமகிழுங்கள், தம்பி தங்கைகளுக்கு இப்பாடல்களைச் சொல்லிக் கொடுங்கள். அவர்கள் பாடுவதைக் கண்டு நீங்கள் ஆனந்தம் கொள்ளுங்கள். பெற்றோர்களையும் நான் பணிவோடு கேட்டுக்கொள்வது இதுதான். உப்புச் சப்பற்ற பாடப்புத் தகங்களோடு நின்றுவிடாமல் குழந்தைகளின் இரசனையை வளர்க்கும் நல்ல பாடல்கள் கதைகள் என்பவற்றையும் அவர்களுக்குப் படிக்கக் கொடுங்கள். நீங்களே பாடிக்காட்டுங்கள். ஆபாச சினிமாப் பாடல்கள் வரும்வாயில் தேனினுமினிய நல்ல பாடல்கள் கேட்கட்டும். அதற்கு நான்காட்டும் பாடல்கள் துணைசெய்தால் அதுவே எனக்குத் திருப்தி! இந்த வாரமே ஒரு பாடலை அறிமுகப்படுத்தியிருக்கிறேன். வாசித்துப் பாருங்கள்- பாடி மகிழுங்கள்;

வணக்கம்

— கனக. செந்திநாதன்

## இரசிகமணி கனக செந்திநாதன்

ஓர் ஏழையின் குடிசையில் எரிந்துகொண்டிருந்த ஒரு சிறிய 'குப்பி' விளக்குகாற்றுடன் பேசியது. பேசியதா? இல்லை மன்றாடியது. செல்வர்வீட்டு மின்சார விளக்கென்றால் காற்றை இலட்சியமே செய்யாது. காற்றைப்பார்த்து 'எப்படிச் சுகம்'? என்றுகூடக் கேட்டிருக்கும். இதுவோ ஏழை வீட்டு விளக்கு. 'குப்பி' விளக்கு. காற்றுக் கொஞ்சம் பலமாக வீசினாலும் அணைந்துபோகக்கூடிய விளக்கு. ஆனபடியால் உறவுமுறைகூறிப்பேசத் தொடங்குகிறது,

காற்று மாமா
காற்று மாமா
கருணை செய்குவீர்
ஏற்றி வைத்த
சோதி என்னை
ஏன் அணைக்கிறீர்?

சின்னஞ்சிறு குடிசைஇது. நான் அதிகநேரம் எரியக் கூடப்போவதில்லை. எண்ணெய்வாங்க இந்தவீட்டு ஏழைப் பெண்ணிடம் காசுகூட இல்லை. கொஞ்சநேரம் தான் எரியப்போகிறேன். என்பொன்னிறத்துச் சுடரினாலே சிறிதுநேரம் இக்குடிசையைப் பொலியச் செய்வதுகூடஉனக்குப்பிடிக்கவில்லையா? போகட்டும். எனக்காகவேண்டாம். அந்த ஏழைச்சிறுவனைப் பார். சின்னஞ்சிறு பையன். ஏழையாய் இருந்தாலும் படிப்பில் எவ்வளவு ஊக்கம்? படித்து முன்னேறவேண்டும் என்று எவ்வளவு ஆர்வம்? அவனுக்காகவாவது என்னை அணைத்துவிடாதே என்று விளக்கு மீண்டும் மன்றாடுகிறது.

ஏழைச் சிறுவன்
என்னை நம்பிப்
பாடம் படிக்கிறான்
ஏழும் மூன்றும்
பத்து என்று
எழுதிக் கூட்டுறான்.

அந்தச்சிறுவனின் தாயைப் பார். மகனின் படிப்பிலே அகமகிழ்ந்து காலைநீட்டிஒய்யாரமாக அமர்ந்திருக்கிறாளா? ஐயோ! பாவம். அவள் தினக்கூலி. அன்றாடம் ஏதாவது கூலிவேலை செய்தால்தான் பசியைப் போக்க முடியும். தன்குழந்தையை காப்பாற்றமுடியும். பகல் முழுவதும் பாடுபட்டு கூலிகொண்டு இப்போது தான் வந்தாள். தேகம் முழுவதும் ஒரே அலுப்புத்தான்; என்றாலும் மகனின் பசியைநினைத்தவுடன் அலுப்பெல்லாம் போய்விட்டது. பானையை வைத்துக் கஞ்சி காய்ச்சத் தொடங்கிவிட்டாள். அவளைப் பார். என்னஆச்சு? என்ன ஆச்சு? என்று அடிக்கடி பானைக்குள்ளே எட்டிப்பார்க்கிறாள். அவள் மகன்மேல் கொண்ட அன்பு அவ்வளவு? இதைப் பணக்கார வீடுகளில் உன்னால் பார்க்க முடியுமா?

அன்னை அதோ
அடுப்பை மூட்டிக்
கஞ்சி காய்ச்சுறாள்
என்ன ஆச்சு
என்று பானைக்
குள்ளே பார்க்கிறாள்

அந்த ஏழைத்தாய் எப்படி அவதிப்படுகிறாள் பார்த்தீர்களா? அந்தச் சிறுவனும் அடிக்கடி அடுப்பைப் பார்த்தவண்ணமே இருக்கிறான். அவன் வயிற்றுள் பசி. காலையில் ஏதோ அகப்பட்டதைச் சாப்பிட்டு விட்டுப் போன பையனுக்கு இந்தக் கஞ்சி தான் வயிறுநிரப்பும்உணவு. அதனால்தான் அடிகொருதரம் அடுப்பைப் பார்க்கிறான். ஆம், ஏழையின் வீட்டில் பசிக்கும், படிப்புக்கும் போராட்டம். இது எப்போதுதான் தீரப்போகிறதோ?

படிக்குஞ் சிறுவன்
வயிற்றுக் குள்ளே
பசி துடிக்குது
அடிக்கொரு தரம்
அவனது முகம்
அடுப்பைப்பார்க்குது.

காற்று மாமா நான் நிலைமையைத் தெளிவாகச் சொல்லிவிட்டேன். கொஞ்சமாவது இரக்கம் காட்டு. அவள் கஞ்சிப்பானையை இறக்கிவிட்டாள். பையனும் குடிக்க ஆயத்தமாகிவிட்டான்

காச்சுங் கஞ்சி
குடிக்க வெளிச்சம்
காட்ட வேண்டா மா?
ஆச்சு இதோ
ஆச்சு என்னை
அணைத்து விடாதே.

விளக்கின் வேண்டுகோளாகிய இந்த ஐந்து பாடலையும் ஒருசேரப் பாடிப்பாருங்கள். ஏழ்மையை விளக்கின் மூலம் உருக்கமாகக் காட்டிய கவிஞரின் பெயர் கிருஷ்ணதம்பி. அவரது நூல் யானை என்ன யானை?

காற்று மாமா காற்று மாமா
கருணை செய்குவீர்
ஏற்றி வைத்த சோதி என்னை
ஏன் அணைக்கிறீர்?
ஏழைச் சிறுவன் என்னை
நம்பிப்
பாடம் படிக்கிறான்
ஏழும் மூன்றும் பத்து என்று
எழுதிக் கூட்டுறான்
அன்னை அதோ அடுப்பை
மூட்டிக்
கஞ்சி காய்ச்சுறாள்
என்ன ஆச்சு என்று பானைக்
குள்ளே பார்க்கிறாள்
படிக்குஞ் சிறுவன் வயிற்றுக்
குள்ளே

சிந்தனைச்சுருள் [1]

# நல்லவன்

இது சகல பண்புகளும் கூட்டுச்சேர்ந்த ஒரு புனிதமான சொல்!

இந்த நல்ல பெயரைக் கேட்க வேண்டுமாயின் எத்தனையோ போராட்டங்களை எத்தனையோ படிப்பனைகளை—கடமை—கட்டுப்பாடு—கண்ணியங்களை, ஒழுங்குசால் பண்புகளைப் பெற வேண்டியிருக்கிறது.

கெட்டவன் என் என்று பெயர் எடுக்க ஒரேயொரு விநாடி போதுமாயிருக்க நல்லவன் என்று பெயரெடுக்க நாம் வாழ்நாள் பூராவும் போராட வேண்டியிருக்கிறது. முயன்றால் முடியாதது தொன்றுண்டா?

'தெய்வத்தால் ஆகா
தெனினும்
முயற்சிதன் மெய்வருந்தக்
கூலிதரும்''

''முயற்சி திருவினையாக்
கும்!''

என்றெல்லாம் நம் பெரியோர் சும்மாவா சொல்லி வைத்தனர்,

அந்த முயற்சியைப் பின்பற்றுவதற்கு முன் நம்மை நாமே நம் அன்றாடக் கடமையில் ஒழுங்குடன் கட்டுப்படுத்தவேண்டும்!

மாணவராகிய நாம் எமது இன்றைய கடமையைச் சரிவரச் செய்து வருவோமெனில் பிற்காலத்தில் நாட்டில் நல்ல பிரஜையாக நம்மை உருவாக்கிக்கொள்வதில் எத்தனையோ ஆர்வம் கொண்டவர்களாகவோ நமக்கும் நாட்டின் எத்துணை பங்குண்டு என்பதை உணர்ந்தவராவோம். அதற்கு நாம் இப்பொழுதிருந்தே எம்மைத் தயாராக்கிக் கொள்ளவேண்டும்.

## குறித்த நேரத்தில் குறித்த கடமை

ஒரு நாள்—!

ஆம், 1440 நிமிடங்கள்!

ஒவ்வொரு நிமிடமும் நமக்குப் பொன்னான நேரம். அப்பொன்னான நேரம் கடந்துவிட்டால் திரும்ப வரப் போவதில்லை. எனவே அப்பொன்னான நேரத்தை மண்ணாக்காமல் பயனுள்ள பொழுதாக கழிக்கப் பழக வேண்டும். இதற்கு நாம் ஒரு முறையை வகுத்துக் கொள்ளவேண்டும்,

முதலில் நமது அன்றாடக் கடமையை மனதில் நிறுத்திக்கொள்வோம். நமக்கு நாமே செய்துகொள்ளும் சங்கற்பம் நாளடைவில் தன்னம்பிக்கையையும் விடா முயற்சியையும் ஒழுங்கையும் நம்மிடையே ஏற்படுத்தும். அவையே நம்வாழ்க்கைக்கு ஆதாரமாகவும் அமையும். வருங்காலத்தில் எக்காரியத்தையும் ஓர் ஒழுங்குமுறைக்குட் படுத்தி வரம்பு மீறாமல் செவ்வனே செய்ய இன்றே நாம் வித்திட்டவராவோம்!

— 'நீலா'

பசி துடிக்குது
அடிக்கொருதரம் அவனது
முகம்
அடுப்பைப் பார்க்குது
காய்ச்சும் கஞ்சி குடிக்க
வெளிச்சம்
காட்ட வேண்டாமா?
ஆச்சு இதோ! ஆச்சு என்னை
அணைத்து விடாதே.

# தெரிந்துகொள்ளுங்கள்

(1) கிறீன்லாந்து, சைபீரியா போன்ற வடதுருவப் பிரதேசங்களில் வெள்ளைநிறமுள்ள கரடிகள் வாழ்கின்றன; இவற்றிற்கு துருவக் கரடிகள் என்று பெயர். சீல், மீன்கள் முதலியவற்றை உண்டு இவை சீவிக்கின்றன.

(2) ஐதரசன் வாயு மாகறீன் என்னும் தாவர வெண்ணெய் செய்வதற்கும் மற்றும் நிலக்கரியிலிருந்து (COAL) பெற்றோலைப் பிரித்தெடுப்பதற்கும் இரசாயன முறையில் பயன்படுகின்றது. இதை விட வேறு முறையில் பல அத்தியாவசியமான வேலைகளுக்கும் இவ்வாயு பயன்படுகின்றது.

(3) நோர்வே, சுவீடன், பின்லாந்து ஆகிய மூன்று நாடுகளும் சேர்ந்து ஸ்காண்டிநேவியா என்று சொல்லப்படுகின்றது.

(4) கரும்புலிகள் அதிகமாக தென்அமெரிக்காவைச் சேர்ந்த அமேசன் நதிக் காடுகளில் காணப்படுகின்றன.

(5) அமெரிக்க சுப்ரீம்கோட் நீதிபதிகளுக்கு ஓய்வு பெறும் வயது இல்லை; ஆனால் பத்து ஆண்டு காலம் பணியாற்றிவிட்டால் 70 வது வயதிலும், 15 ஆண்டுகாலம் பணியாற்றிவிட்டால் 65 வயதிலும் அவர்கள் விரும்பினால் ஓய்வு பெறலாம்.

(6) கிரிக்கெட் அமெரிக்காவில் முக்கிய விளையாட்டல்ல, கோடைக்காலத்தில் வாரஇறுதிநாட்களில் பெரு நகர்களில் விளையாடப்படுகிறது. நியூயோர்க் நகரில் பல கிரிக்கெட் குழுக்கள் உள்ளன. கிரிக்கெட் விளையாடப்படும் நாடுகளிலிருந்து படிக்க வந்துள்ள மாணவர்கள் அவ்வப்பொழுது கல்லூரித் திடல்களில் கிரிக்கெட் விளையாடுவதுண்டு,

(7) ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் மாணவர்கள் புத்தகம் வாசிக்கும் பழக்கம் மிகுதியாகக் காணப்படுகிறது. இந்நாட்டில் 17,200 பொது நூலகங்கள் உண்டு. அவற்றில் கோடிக்கணக்கான நூல்கள் உண்டு நூலகங்களில்லாத குக்கிராமங்களுக்கு வான்வண்டிகளில் கொண்டு சென்று புத்தகங்களை விநியோகிக்கின்றனர். புத்தகங்கள் கட்டணமின்றி இரவலாகக் கொடுக்கப்படுகின்றன.

— ரஞ்சன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேலை நாட்டு நாகரிகம் நமது நாகரிகத்தைப் பாதிக்கிறதா?

செல்வி. யோகேஸ்வரி சுப்பிரமணியம்

ஒரு நாட்டின் கலாச்சாரம், பண்பாடு, சிற்பம், ஓவியம், உடை நடை பாவனை, பேச்சு வார்த்தைகள் யாவும் அடங்கிய முறையில் அதனைப் பிரதிபலித்துக்காட்டும் சொல்லே ''நாகரீகம்'' எனப் பொருள்படும். மேற்கூறிய சிறப்பு மிக்கத் தன்மைகள் ஒருவரிடத்துக் காணப்படுமிடத்து அவர் நாகரிகமானவர் என்றும், குறைபாடுடைய தன்மைகள் காணப்படுமிடத்து அவர் அநாகரிகமானவர் என்றும் கணிக்கிறோம். நாகரிகம் என்னும் கருத்தாழமிக்க இச் சொல்லின் பொருளை இக்கால மக்களிற் பலர் தப்பான முறையில் விளங்கிக்கொள்கிறார்கள். அதாவது நாகரிகம் என்று கருதும்போது உடையலங்காரத்தை மட்டும் நாகரிகம் என்று அர்த்தம்கொண்டு கணிக்கிறார்கள் அங்ஙனம் கணிப்பது தவறு. நாகரிகம் என்ற பொருளாழமிக்க இச் சொல்லினை ஆங்கிலத்தில் (Civilization) என்றும், அநாகரிகம் என்ற சொல்லினை (Uncivilization) என்றும்வழங்குகிறார்கள்.

**நாகரிகத்தின் இன்றியமையாமை**

ஒரு சமுதாயம் தனது உச்சநிலையை அடைவதற்கு நாகரிகம் ஓர் இன்றியமையாத அம்சமாக அமைந்துள்ளது. ஒவ்வொரு நாட்டின் வெப்ப தட்ப நிலைமைகளுக்கும், சுவாத்திய வேறுபாடுகள், அவரவர்களின் பழக்க வழக்கங்கள், பண்பாடுகள் சம்பிரதாய முறைகள் ஆகியவற்றிற்கும் ஏற்ப வளர்ந்துவருகிறது.

ஆயின் பொதுவாகப்பார்க்கும்போது, எந்நாட்டு நாகரிகமாயினும் சரி, அந்நாட்டு மக்களுக்கு உகந்த வகையில் சந்தர்ப்பச் சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு... நெகிழ்ந்து கொடுக்கக்கூடிய தன்மையாக இருப்பது ஏற்கத்தக்கது. சில நாகரிக முறைகள் மாற்ற முடியாத வகையில் மக்களிடையே உறுதியாகப் பரம்பரையாக வளர்ந்து ஒன்றிவிட்டன. சுருக்கமாகக் கூறின் எந்த ஒரு சமூகத்தினரிடையேயும் அல்லது தனிப்பட்ட நபரிடையேயும் காட்டுமிராண்டித்தனம் அல்லது சில கெட்ட குணங்கள் இருப்பின் அவற்றை ஒழித்துச் செம்மையாக வாழநினைத்து வாழ்ந்து காட்டுவதுதான் நாகரிகம்.

**ஆன்மீக அடிப்படையிலானது**

நம் நாட்டு நாகரீகம் பெருமளவில் ''ஆன்மீகப் பண்புகளை'' அடிப்படையாகக்கொண்டு சமய ஒழுக்க நெறிகளுக்கு ஏற்ப அமைந்ததான ஒரு நாகரிகம் என்றுதான் கூறவேண்டும். ஆனால் மேலை நாட்டு நாகரிகத்தில் ஆன்மீகப் பண்புகளுக்கு இடமளித்திருப்பதனை மிக்க அரிதாகவே காணலாம்.

பெரும்பாலும், உலகின் எல்லாப் பாகங்களிலுமுள்ள மக்களிடையேயும் வேரூன்றியுள்ள நாகரிகத்தின் அம்சமாக விளங்கும் ஒரு வகையான விசேட ஆசாரமுறை வளர்ந்திருப்பதை நாம் கண்ணூரக் காண்கின்றோம். அதாவது எச்சமயத்தவராயினும், அச்சமயத் தலைவர்களையும் போற்றுதற்குரிய பெருமை வாய்ந்த மகான்களையும் கைகூப்பிக் கரங்குவிக்கும் ஆசாரமுறை வளர்ந்திருப்பதைக் காண்கின்றோம் பண்டைக்காலந்தொட்டு இன்றுவரைக்கும் அழிந்தொழிந்துபடாது வளர்ந்துவருகின்றது. அத்தகைய ஆசாரமுறை. பெரியோர்களைக் கைகூப்பிவணங்கும் இத்தகைய ஆசார முறை ஆன்மீகப் பண்பாட்டை அடிப்படையாகக் கொண்டெழுந்த வழிபாட்டுக்குரிய நாகரிகமுறை என்றுதான் நாம் கருத வேண்டும்.

ஆயின், மக்களிற்சிலருக்கு விஞ்ஞான அறிவு வளர்ந்து வருகின்றது. தாம்விஞ்ஞான யுகத்தில் வாழுகின்றோம் என்று தமக்குள் எண்ணிப் பெருமிதம் அடையும் வேளையும் இதுவரை வளர்ந்து வந்த ஆன்மீகப் பண்புகளைத் தங்கள் அறியாமையினால் தகர்த்தெறிய முற்பட்டும் அதனைப் புறக்கணித்து நடக்கவும் முயலுகின்றார்கள். ஆதிகாலந்தொட்டு ஒரு வகை ஆசாரமுறைகளுக்கும் பழக்கவழக்கங்களுக்கும், பயபக்தியுடன் அடங்கி ஒடுங்கி நடந்த மனிதன் திடீர் எனத் தன்அறியாமையினால், அத்தகைய கட்டுக்கோப்பினின்றும் விலகி நடக்க எத்தனிக்கிறான். அங்ஙனமாக விலகி நடக்க எத்தனிக்கும் வேளையில்,- சமூகத்திற்கு முரண்பாடான வகையிலும், சமய அநுட்டானங்களுக்கு ஒவ்வாதவகையிலும் ஆன்மீகப்பண்புகள் அழிந்தொழியக்கூடிய நிலையிலும், இன்னும் தான் இடர்பாடான நிலைக்குள்ளாகப் போவதையும் அவன் செம்மையாக உணரிவதில்லை. பெரியோர்களை மதிப்பிற்குரியவர்களைக் கண்டதும், ஆசனத்தினின்றும் எழுந்து அவர்களுக்கு வணக்கம் செலுத்தும் முறையும்இன்று நாளுக்குநாள் மடுவிவருகின்றது. இன்றையநாட்களில் சிறுர்கள் வளர்ந்து, வாலிபநிலை அடைந்ததும், கல்லூரிகளிலும், பொது இடங்களிலும், காரியாலயங்களிலும், தொழில்புரியும் இடங்களிலும், மற்றும்ஸ்தாபனங்களிலும், வழிபாட்டிற்குரிய இடங்களிலும், வீடு வாசல்களில் விருந்தினர்களை வரவேற்கும்போதும், மதிப்புக்கொடுத்து அங்ஙனமாக உபசரிப்பது 'அநாகரிகம்' எனக்கருதி விலக்குகின்றனர். உண்மையிலேயே நாகரிகமிக்க செயலை 'அநாகரிகம்' எனக்கருதாது அதுநாகரிகம் தான் எனக்கருதி, அதற்கு ஏற்ற இடமளித்துப் பாதுகாப்பது. நம்நாட்டுமக்களின் கடமையாகும். மேலை நாட்டு நாகரிகத்தைப் பின்பற்றியதால், பொதுவாகச் சமூகத்திலுள்ள எத்தகைய மக்களையும் பாதிக்கும் ஒரு குறைபாடுடைய பண்பாக இஃது அமைந்துள்ளது.

**நாகரிகம் மிக்க செயல்**

அடுத்து, குறிப்பிட்ட ஒரு சில மக்களையும், மதத்தினரையும் பாதிக்கும் வகையில் சில நாகரிக முறைக்குரிய அம்சங்கள் பாதித்திருக்கின்றன. குறிப்பாக இந்துக்கள் தமது மேன்மைமிக்க 'சைவ சிவ சின்னங்களை' முறையே அணிகின்றார்களா எனப் பார்க்குமிடத்து. அவ்விடங்களில் பெரும்பாலும் மன வருத்தம்தான் ஏற்படுகின்றது. சைவ சிவசின்னங்களாகப் போற்றப்படும் தூய வெண்ணீறும், குளிர்மை மிக்க சந்தனப்பொட்டும், அல்லது குங்குமப்பொட்டும் மிளிரவேண்டிய நெற்றியில், சைவமக்களைப் பொறுத்த மட்டில் பவுடரும், பெரும்பாலான மக்கள் பொட்டில்லா நெற்றியுமாகவே காணப்படுகின்றார்கள். இவை யாவும் மதஆசாரப் பண்புக்கு ஒவ்வாதவை. ''நீறு இல்லா நெற்றிபாழ்'' என்ற இந்த வாக்கியத்திலிருந்தும், இதன் மகிமையை உணரலாம். இத்தகைய பெருமைவாய்ந்த பண்பு எதற்காக மருவி வர வேண்டும்?......ஆழ்ந்துசிந்தித்தால் ஆடம்பரமிக்க பகட்டான பொருட்களையும், வாசனைத் திரவியங்களையும் உபயோகிக்கும்கால், தங்கள் அறியாமையினால் மேன்மை மிக்க சைவசிவ சின்னங்கள் ஆடம்பரப் பொருட்களுக்குச் சரிநிகரற்றவை என எண்ணி அணிந்து கொள்வதற்குப் பின்னிற்கின்றார்களோ என்றுகூடக் கற்பனை செய்யவேண்டியிருக்கின்றது. எனவே நாகரிகத்தின் உயர்சின்னத்தின் ஒவ்வொரு கூறுகளாக விளங்கும் இத்தகைய ஆசார ஆன்மீகப் பண்புகள் புறக்கணிக்கப்படுமிடத்து ஆங்கு அநாகரிகம் தலைதூக்க இடமளிக்கும், ஆகையால் குறையை உணர்ந்து நிறையாக்கி நடப்பதுதான் மனிதப்பண்பும், நாகரீகமிக்க செயலுமாகும்.

**அநாகரிகத்தின் உயர் சின்னங்கள்**

மேலைநாட்டு நாகரீக உடைகள் நம் நாட்டுக்கும் ஏற்றன என எண்ணி இக்கால மாதர்களிற் சிலர் மிக்க அவலட்சணமான முறைகளில் உடை உடுத்தியும் தலைசீவியும் வருகிறார்கள். அவலட்சணமிக்க மினி உடையும், தலைவிரிகோலமாகக் காட்சியளிக்கும் தலை முடியும் 'அநாகரிகத்தின் உயர் சின்னங்களகே' யன்றி அவை நாகரிகமென்று கொள்ள முடியாது. மினி உடை அணிவதும், சிகரெட் பிடிப்பதும் நம் நாட்டு மாதர்களுக்குரிய நவநாகரீகம் என்பதைப் பெரும்பாலானோர் விரும்பி ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதுதான் எம் கருத்து.

மேலும் எம்மில் பெரும்பாலோர் பாதரட்சை அணிகிறோம். தலையில் தொப்பி அணிகின்றோம். ஆயின் சமய ஆசாரப் பண்புக்கு ஏற்ப இந்துமதத்தைத் தழுவும் ஒருவன் பாதரட்சை அணிந்துகொண்டு ஆலயத்திற்குள் நுழையவோ அன்றியும் இலக்குமி குடியிருக்கும் தன் வீட்டினுள் புகவோ விரும்பமாட்டான. ஆனால் கிறிஸ்தவ மதத்தனர் பாதரட்சை அணிந்துகொண்டே தேவாலயத்திற்குள் சென்று வழிபடுகின்றனர் சுத்தம், சகாதாரமுறை சமய ஆசார முறைக்கு ஏற்ப இறைவன் சந்நிதானத்தில் பாதரட்சை அணிந்து சென்று வழிபடுவதைப் பெரும்பாலும் எம்மதமும் விரும்புவதில்லை. கிறிஸ்தவ மதத்தில்கூட இதற்கு ஒரு சான்று உள்ளது. அதாவது, மோசஸ், நீ நின்றுகொண்டிருக்கும்நிலம் புனித நிலமாக இருப்பதால், உன் பாதரட்சைகளை உன் பாதங்களிலின்றும் அகற்றிவிட்டு நீ இங்கே அருகில் வருவாயாக — என்று ஒரு முட்புதரின் நடுவே தானகப் பற்றிஎரிந்த தீப்பிழம்பில் தோன்றிய ஜோவாவின் வனதேவதை மோசஸ் என்பவருக்குச் சொல்லியது'.

சான்று விவிலியநூல், எக்ஸாடல் அதிகாரம் 3. வரி வசனம் 1-5 வரை.

இதிலிருந்தும் பரிசுத்தமானதெனப் போறறப்படும் இடங்களிலெல்லாம் பாதரட்சை அணிந்து செல்வது விரும்பத்தக்கதல்ல என்பதே இதன் உட்பொருளாம். இங்ஙனமாக கிறிஸ்தவ மதத்தினருக்கும், இந்து மதத்தினருக்குமிடையில் பாரம்பரியமாக பாதரட்சை அணிந்து வழிபடும் முறையில் வேற்றுமை இருப்பதைக் காண்கிறோம். மேலை நாட்டு மக்கள் எத்தகைய இடத்திலும் பாதரட்சை அணிந்து செல்லும் வழக்கம் உடையவர்களாகையாலும், கிறிஸ்தவ மதத்தைத் தழுவியவர்களாகையாலும் அவர்கள் பாதரட்சை அணிந்து வழிபாட்டு இடங்களில் நுழைந்ததுமட்டுமன்றி— தென்கிழக்காசிய நாடுகளிலும் உள்ள கிறிஸ்தவ மக்களிடையே விட்டுச்சென்ற குறைபாடுடைய பாரம்பரி

(13-ம் பக்கம் பார்க்க)

## குடும்பச் சுடர்

தயாரிப்பு: குணம்

## குழந்தைகளின் உயிர் காக்கும் உணவுகள்

புரதம் மிகுதியாக இருக்கும் புதிய உணவுகள் உலகின் பல பகுதிகளில் தயாரிக்கப்பட்டுள்ளன. புரதம் பற்றாக் குறையினால் உடல், உள்ளத் தீங்குக்கு எளிதில் இலக்காகும். குழந்தைகளின் உயிரை இந்த உணவுகள் காப்பாற்றுகின்றன.

எடுத்துக்காட்டாக 'சூப்பெராமின்' என்று ஒரு உணவு இருக்கிறது. ஐ. நா. உணவு வேளாண்மை நிலையம், உலகஉடல்நலநிலையம், ஐ. நா. குழந்தைகள்நிதி ஆகியவை அல்ஜீரிய அரசாங்கத்துடன் சேர்ந்து இந்த உணவைத் தயாரித்தன. ஐந்து அல்ஜீரிய கிராமங்களில் ஓராண்டு இந்த உணவுப் பொருள் இலவசமாக வழங்கப்பட்டது. விளைவு: குழந்தைகளின் சாவு பாதியாகக் குறைந்தது. எதியோப்பியாவில் ஃபாஃபா என்ற உணவு சேய்களுக்கு உணவூட்டப் பயன்படுத்தப்படுகிறது.

சேய்களுக்கு ஊட்டக் குறைவு வராமல் தடுக்க வேறு புதிய உணவுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. தென்னாபிரிக்காவிலே 'புரோ-நியூட்ரோ' என்ற ஒரு உணவு வழங்கப்படுகிறது.

மத்திய அமெரிக்காவில் 'இன்கபாரின்' என்ற உணவும், கொலம்பியாவில் 'கொலம்பிகர்ன்' என்றஉணவும் சோயா மொச்சையில் தயாரிக்கப்பட்ட ''விடஸாய்' என்ற பானம் ஹாங்காங்கிலும் 'புமா' என்ற பானம் கயானாவிலும் வழங்கப்படுகின்றன.

உத்தரவாதமுள்ள தங்க - வைர
நகைகளைப் பெற்றுக் கொள்ள
நம்பிக்கை வாய்ந்த ஸ்தாபனம்
எஸ். எல். எம். தீபி அன் சன்ஸ்
நகைகள் — வைர வியாபாரிகள்
கன்னுதிட்டி (R. G. பில்டிங்) யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளி மல்லிகை

## அ. செ. மு.

## ஆகா! ஹாஹ்... ஹாஹ்... ஹா!

ஆறுவது சினம்' என்ற முதுமொழிக்கு கோபம் தணியுங்கள்' என்பதுதானே பொருள். கலைவாணர் என். எஸ். கே. இதற்கு ஒரு புதுக் கருத்து கூறுகிறார் ஒரு படத்தில் அதாவது சினத்துக்குத்தான் ஆறும் இயல்பு உண்டாம். அதனால் ஆறுவது சினம் என்றாயிற்றாம்.

பொங்கும் கடல்தானே வற்றுகிறது. துள்ளிய காளை தானே பொதி சுமக்கிறது. என். எஸ். கே. கூறும் ஆறுவது சினம் இப்படி ஒன்றுதான் போலும். 'குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி கணமேனும் காத்தலரிது' என்று திருக்குறளிலும் 'சாதுமிரண்டால் காடு கொள்ளாது' என்று மற்றொரு முதுமொழியிலும் கூட கோபமும் சீற்றமும் 'டிகிரி' ஏற்றப்பட்டு கொலுவிருக்கும் அழகே அழகு!

என். எஸ். கே. புதினப் பத்திரிகை படிக்கிறார். எப்படித் தெரியுமா? எழுத்தெழுத்தாகச் சொற்களைச் சேர்த்து 'ஒருவருக்குப் பெருங்காயம்' என்று அவர் உரத்து வாசித்த குரல் கேட்டு சமையல்காரன் ஓடி வருகிறான். பெருங்காயமா எங்கே கிடைக்குதாம் ஐயா. என்ன மார்க் பெருங்காயம். எப்படிக் கொடுக்கிறானுகளாம். பவுண்டா, பக்கெட்டிலையா?' என்று கேட்டுக் கூப்பாடு போடுகிறான். 'பெருங்காயம்' என்று பத்திரிகைத்தமிழ் விளக்கமாக, சுத்தமாக இருக்கவேண்டும் என்பதைத்தான் என். எஸ். கே. இவ்வாறு கிண்டலாகக் கூறுகிறாரோ, இருக்கலாம்.

புத்தகப் படிப்பில் ஆழ்ந்து போயிருக்கும் கிழவனாரை அவரது பேரப்பயல் தன்னோடு பொழுது போக்க அழைக்கிறான். தாத்தா அவனைக் கடிந்து கொள்கிறார். 'அப்போ நான் என்ன செய்யத் தாத்தா?' என்று சிறுவன் சிணுங்கியதற்கு 'என் தலையிலே தீயை வை' என்று வாய்ப்பழக்கமாகச் சொல்லிவிட்டு புத்தகப்படிப்பில் மீண்டும் ஆழ்ந்து போகிறார். கௌரவத் தலைப்பாகையிலே தீ பற்றிவிட்டது. கிழவனாரோ அதை அறியாமலே புத்தகம் படித்துக் கொண்டிருக்கிறார். அவ்வேளை அந்தப்பக்கம் தற்செயலாக வந்த வேலையாட்கள் பார்த்துவிட்டுக் கூச்சல் போடுகிறார்கள். அப்படியும் அவர் அதைத் தெரிந்து கொள்ளவில்லை. காப்பி கொண்டுவந்து கொடுக்கிறான் ஒருவன். காப்பித்தம்ளரைக் கிழவனாரிடம் நீட்டும்போது அவர்தலைப்பாகையிலே தீ கொழுந்துவிட்டு எரிவதைப் பார்த்து விட்டு மனம்பதறி 'என்ன ஐயா பேசாமலிருக்கிறீர்களே, சுடல்லியா?' என்று வாய் குளறி கை உதறியபோது காப்பிதானே! ஊகூம் சுடல்ல, சரியாயிருக்கு' என்று நிரம்ப அமைதியாய்ப் பதிலளித்துக் கொண்டே காப்பியை வாங்கி அருந்துகிறார் கிழவனார். இந்நிலையில் அவரைப் பார்த்தவர்கள் எல்லோரும் ஓட்டம் பிடிக்கிறார்கள். 'எதற்காக இவங்க எல்லாம் என்னைக்கண்டு இப்படி ஓடுகிறார்கள்: நானென்ன வேஷமா போட்டிருக்கேன். — கிழம் தனக்குள்ளாகக் கேட்டு விழிக்கிறது.

இந்த மட்டில் அவர் தலைப்பாகை பாதி எரிந்தபிறகு நல்ல காலமாக தலைக்குத் தீ பரவாமல் வெள்ளைக்காரர் சூட்டிய தலைப்பாகைத் தலை காப்பாற்றப்படுகிறது. தலைக்கு வந்தது தலைப்பாவோடாகி தலை தப்பியது தம்பிரான் புண்ணியம் ஆகிறது.

'குழந்தைப் பிள்ளைகளிடம் நாம் என்ன பேசவேண்டும், என்ன பேசக்கூடாது என்பதைப் பல சமயங்களில் மறந்துபோய் விடுகிறோம்' என்று அது சமயம் கௌரவத் தலைப்பாகைக் கிழவனாருக்குப் புத்தி புகட்டுகிறான் ஒரு பணியாள்.

குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே என்பார்கள், ஆதலால் குழந்தைகளிடம் மட்டுமல்ல, நாம் கொண்டாடிய தெய்வத்திடமும் கூடத்தான் கன்னு பின்னு என்று பேசுவதும் தெய்வத்தைப் பழித்துரைப்பதும் நிந்திப்பதும் நிதான சிரத்தையாக தவிர்க்கப்படவேண்டிய காரியங்கள் என்க. பழையநாளில் போலவா இன்றைய சிறிசுகள்? நாம் வாழும் சமூக சூழலில் எல்லாமே பல்கிப் பெருகிப் பெரும் மாற்றம் சூழ்ந்திருப்பதைப் பாலத்தான் குழந்தைகளின் மனப்பாங்கும் கிரகிக்கும் விவேகமும் விரிவடைந்திருக்கிறது.

அதனால் அவர்பால் பெற்றோருக்குள்ள பொறுப்பும், கடமையும் முன்னெக்காலத்தையும்விட இன்றெல்லாம் மிகப் பெரிதானதொரு வீட்டுக் கடமையாகியிருக்கிறது...

சிரிப்பூட்டிக் கொண்டே நல்லதொரு படிப்பினைக் கருத்தையும் இலகுவாகச் சொல்லிவிடுகிறார் என். எஸ். கே.

வெள்ளைக்காரர் நம் ஆட்கள் தலையைத் தடவி இது மாதிரி எத்தனை தலைப்பாகைகளைச் சுற்றி வைத்து வசப்படுத்தினார்கள். அதெல்லாம் தானு இந்தப் பாடுபடுகிறது. காந்திமகான் தோற்றுவித்த சுதந்திரப் பரம்பரையின் தளிர்க் கரங்களிலே!

இப்படியும்கூட எண்ணத் தோன்றுகிறது சிரிப்பு நடுவே.

ஆகா!

ஐயா வீட்டுக்காரரே உங்களிடம் ஒரு பொண்ணுதான் ஆருமற்ற அனாதை என்று சொல்லிக்கொண்டு புதுசா வேலைக்கு வந்திருக்கிறாளா? அவள் பேச்சை ஒப்புக் கொள்ளாதீர்கள். எல்லாம் 'டூப்'. சுத்தப்பொய். அவளுக்கு ஊரிலே மலைபோல ஓர் அப்பா இருக்கிறார். அவள் தன் கள்ளக்காதலனோடு கூடிக்கொண்டு ஓடி வந்திருக்கிறாள். அவனைத் தினமும் சந்தித்துப் பேசுவதற்காகத்தான் உங்கள்வீட்டில் தஞ்சம் புகுந்திருக்கிறாள். அவளுடைய காதலன் கூட இவ்வூர் சத்திரத்தில் வந்து ஒதுங்கியிருக்கிறான். காளையும் கன்னியும்இரண்டு பேரும் கூடி எல்லாம் முன்னேற்பாடாய் 'பிளான்' போட்டிருக்கிறாக. அவன் தினமும் ஆண்டிப்பண்டார வேஷத்திலே தம்பூரா மீட்டிப் பாடிக்கொண்டு பிச்சைக்கு வருவான். கையிலே தன் பெயரைப்பச்சைகுத்தியிருப்பான் உங்க வீட்டுக்கு வேலைக்கு வந்திருக்கும்புதுப் பொண்ணு அவனிடம் மனமிரங்கி அரிசிதானம்போடும்போது அரிசிக்குள்ளே சில்லறைக்காசும்வைத்து அவன் துணிப்பைக்குள்ளேகொட்டி விடுவா. இப்படி எத்தனை நாளைக்கு இந்த காதல் நாடகம் உங்க வீட்டிலே நடக்குமோ! ஆதலால், எதற்கும் சற்றே விழிப்பாயிருங்கள்.

ஐயா, பெண்ணைப் பெற்ற தகப்பனாரே! உங்களிடத்தே ஒரு பொண்ணு எப்பொழுதாவது மனம் பிசகிவீட்டிலிருந்து ஓடிப்போய் மறுபடியும் திரும்பி வந்துநல்லகுணமாகவீட்டிலேஇருக்கிறாளா? அவள்மேல் ஒரு கண் வைத்துக் கொள்ளுங்கள். ஏனென்றால் உங்க பொண்ணுக்கு ஒரு காதல்காளை அகப்பட்டிருக்கிறான். அதுதான் இரகசியம்.

''நிசமாகவா?''

சத்தியமாக. நான் கண்ணால் பார்த்தேனே. அவன் நீங்கள் வீட்டில் இல்லாதசமயம் உங்கவீட்டு வைக்கோற்போருக்குள்ளே புகுந்து ஒழித்துக்கொள்வதும் அவா வந்து சந்திக்கிறதும் ... அப்

(13-ம் பக்கம் பார்க்க)

# சிறுகதை

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பெண்ணை அவன் காப்பாற்றாது விட்டிருந்தால் இன்று அவளை உயிருடனே யாரும் பார்க்க முடியாமலே போயிருக்கும். அவன் பாவம் வேகமாக வந்த கார் அவனது வலக்காலைப் பதம்பார்த்து விட்டது. உடனே ஆசுப்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டான். ஒரு மாதத்தின்பின் ஒரு கால் இல்லாது இடக்காலுக்குஉதவியாக இரண்டு தடிகளின் உதவியுடன்வெளிவந்தான். அவனது பெருமுயற்சியால் பட்டதாரி வகுப்பும் சித்தியடைந்து விட்டான். தன் பெண்ணைக் காப்பாற்றியவனுக்கே அவளைக் கல்யாணம்செய்து கொடுப்பதாக முன்பு வாக்களித்திருந்த தந்தை மனம் பிற்பாடு தன் பெண் நொண்டிக்குவாழ்க்கைப்பட மறுத்த போது வேதனைப்பட்டது. அவரால் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியவில்லை. பாவம் அவர் என்ன செய்வது? அந்தப்பெண் சம்மதித்தால்தானே.

இவ்வாறு ராணி கூறிய போது எனக்கும் சிறிய வயதில் நடந்த சம்பவம் ஞாபகத்திற்கு வந்தது எனது மனம் துடிதுடித்தது. பதறியது இவளவு பெரிய குற்றத்தைச் செய்துவிட்டு இன்னமும் உயிருடன் வாழ்கிறேனே என்று ஏங்கியது. உடனே ஓடினேன் அப்பாவிடம். நடந்ததைக் கூறினேன். அவருக்கு ஒரே ஆனந்தம்.

அப்பா உங்களுடைய வாக்கைக் காப்பாற்றுகிறேன் என்று கூறியபோது அவர் என்னைத் தலைமேல் தூக்கி வைத்துக் கூத்தாடினார். அப்பா இப்போதே மாமாவிடம் சென்று இந்த விஷயத்தைக் கூறிவிட்டு வருகிறேன் என்று எழுந்தேன். இரவாக இருந்தபடியால் காலை போகும்படி கூறினார். அதனால் இன்று அதிகாலை ஓடிவந்தேன். இப்போது கூறுங்கள் நான் செய்த பிழைக்காக உங்கள் காலில்விழுந்து மன்னிப்புக் கேட்கிறேன்' அழுதபடியே லீலா கூறினாள், லீலா. ஓர் அளவில் மகிழ்ச்சியும் இறுமாப்புங்கொண்ட குருசாமி எதற்கும்ரங்கன் வரவேண்டுமென்று கூறிவிட்டார். அவரை இகழ்ந்ததால் அவருடைய முகத்தில் எப்படி முழிப்பது என்று ஏங்கியபடி 'எங்கே மாமா சென்றுவிட்டார்?' என்று கேட்டான்' 'இன்றுவெள்ளிக்கிழமை பக்கத்தில் உள்ள பிள்ளையார் கோவிலுக்குச் சென்றிருப்பான். இனிமேல் வந்துவிடுவான் என்று கூறிமுடிக்கையில் வாசலில கார்வந்துநின்றது. ரங்கன் தனது ஊன்றுகோலின் உதவியுடன் படிகளால்ஏறி உள்ளே சென்றுகொண்டிருந்தான். 'ரங்கன் இங்கே வா அப்பா, இந்தக்கதிரையில் உட்கார். இந்தப்பெண் ஏன் வந்திருக்கிறது தெரியுமா? எல்லாம் உனக்காகத்தான்' என்று குருசாமி கூறியபோது 'நீங்கள்தானே கதைத்துக் கொண்டிருக்கிறீர்கள் உங்களுக்குத் தெரியுந்தானே' என்று ரங்கன் கூறிவிட்டான். இல்லையப்பா இதுவரைகாலமும் அந்தப்பெண்ணுக்கு ஒன்றும் தெரியாதாம். அதனால்தானும்அன்று அப்படி உன்னை உதாசீனம் செய்தாள். இப்போ தானுல் எல்லா விஷயமும் தெரிந்து கொண்டு வந்திருக்கிறாள்' என்றார். 'அப்பா உங்களுடைய வாக்கைக் காப்பாற்ற இந்தப் பெண்ணைத் தவிரவேறுபெண்இல்லையா?' என்று எடுத்த எடுப்பிலே கேட்டான் ரங்கன். 'நான் எனது வாக்கைக் காப்பாற்ற எவ்வளவுக்குக் கஷ்டப்படுகிறேனோ அதைப் போலத்தானப்பாஇப்பெண்ணைப்பெற்ற சின்னத்தம்பியரும் அன்று எனக்குத் தந்த வாக்கைக் காப்பாற்றத் துடியாய்த் துடிக்கிறார்' என்று அவர் கூறிமுடிப்பதற்குள் 'எதற்கும் இந்தப் பெண் அனுமதித்தால்தானே?' என்று புன்முறுவலுடன்கூறினான் ரங்கன், இதுவரையும் நடந்த சம்பாஷணையை உற்றுக் கேட்டுக்கொண்டிருந்த லீலா தனக்கு வெற்றிகிடைக்கும் என்ற நம்பிக்கையில் 'எதற்கு இந்தப்பெண் இங்கு வந்திருக்கிறாள் என்று தெரியாதுபோலும்! என்று சிரித்தமுகத்துடனே கூறினாள்.

(யாவும் கற்பனை)




குளிர்மையான,
மெந்தோல் பில்டர் முனை
சிகரெட்டுக்கள். தற்கால நவீன
புகையின்பத்திற்கு
பசுமையுடன் உங்களை
அழைத்துச்செல்வன

நீடிய
குளிர்மையான
மறுமலர்ச்சி
மெட்டஹோன்

சிலோன் டுபாக்கோ கம்பனி லிமிட்டெட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சாமிர்தம்

## இறுதி வணக்கம்

“ஆண்டவா!”
குரோதமுள்ள இடத்தில் அன்பையும்,
குற்றமுள்ள இடத்தில் சகிக்கும் தன்மையையும்,
வேற்றுமையுள்ள இடத்தில் ஒற்றுமையையும்,
பொய்யுள்ள இடத்தில் மெய்யையும்.
அநவம்பிக்கையுள்ள இடத்தில் நம்பிக்கையையும்,
சோர்வுள்ள இடத்தில் தெம்பையும்,
இருளுள்ள இடத்தில் ஒளியையும்.
துக்கமுள்ள இடத்தில் மகிழ்வையும்,
உண்டு பண்ணும் பொருட்டு.
என்னை உன் கருணை வெள்ளத்தின் வாய்க்காலுக்கு,
இறைவா!
நேசிக்கப்படுவதைவிட நேசிப்பதும்,
தேற்றப்படுவதைவிடத் தேற்றுவதும்,
புரியவைப்பதைவிடப் புரிந்து கொள்வதும்,
என் குறிக்கோளாயிருக்க அருள் செய்!
ஏனென்றால்,
ஈவதால்தான் ஒருவன் ஈயப்படுகிறான்
தன்னை மறப்பதால்தான் ஒருவன் தன்னையறிகிறான்
மன்னிப்பதால்தான் ஒருவன் மன்னிக்கப்படுகிறான்.
இறப்பதால்தான் இறப்பிலா வாழ்வு பெறுகிறான்.

— மரணத்தறுவாயில் அர்ச். பிரான்சிஸ்ஸின் பிரார்த்தனை

0 0 0 0

## சமாதான மணி

ஐக்கியநாடுகள் தலைமைக் காரியாலயத்திலிருந்த சமாதானமணி தற்சமயம் ஜப்பானிலுள்ள ஒஸாக்கா நகரில் நடைபெறும் எக்ஸ்போ- 70 உலகக் கண்காட்சியில் பார்வைக்குவைக்கப்பட்டிருக்கிறது.

இரண்டாவது உலகமகாயுத்தம் முடிந்த பின்பு இனிமேல் உலகத்து நாடுகள் எல்லாம் சமாதான வாழ்வு வாழவேண்டுமென்ற நல்லெண்ணத்துடன் இப்படி ஒருமணியை ஐ. நா. வில் வைக்க வேண்டுமென்று ஜப்பான் யோசனை கூறியது. அதைத் தொடர்ந்து அச்சமயம் ஐ. நா.வில் சேர்ந்திருந்த அறுபது நாடுகளின் செலாவணி நாணயங்களும் இதர நாடுகளின் நாணயங்களும் சேர்க்கப்பட்டன. பரிசுத்த போப்பாண்டவர் தம் வசமிருந்த பதக்கங்கள் சிலவற்றை கொடுத்துதவினர். இவையாவும் சேர்த்து உருக்கப்பட்டு இந்தமணி வார்க்கப்பட்டது. 1954 ஜூன்மாதம் அது ஐ. நா. வுக்கு ஜப்பானால் கொடுக்கப்பட்டது.

ஐ. நா. காரியாலயத்திற்கு விஜயம் செய்பவர்கள் அதன் இனிய கிண்கிணி நாதத்தைக் கேட்டு இன்புற்றனர்.

சென்ற டிசம்பர் மாதம் சமாதான மணியை ஐ. நா. காரியதரிசி யூதான்ட் ஜப்பானிய ஐ. நா. பிரதிநிதியிடம் கையளித்தார்.

எக்ஸ்போ- 70இல் ஒலித்தபின்பு அது மறுபடியும் நியூயோர்க்கிலுள்ள ஐ. நா. காரியாலயத்துக்கு அனுப்பப்படும்.

0 0 0 0

## அவர் பேசிய தமிழ்

செருமனி ஆங்கிலச் செருவில் இலங்கைவாழ் தமிழர் தலையிடல் தகுமோ சாற்றே என்பது கேள்வி.

‘கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பம் ஏன்? என்பார் சிலர். நாம் தவளைகள் அல்லேம் நாம் மக்கட்கட்கு, ஆகவே உயர்திணைப்பொருள் நம்மைத் தவளை தவளை எனஇழித்து எண்ணுவதும்பேசுவதும் நமக்கு அடாது.

நாம் மக்களாகையால், மக்கள் எந்நாட்டினராயின் என், எச்சாதியாராயின் என், எவரோடும் நமக்குத் தொடர்பு இயற்கையில் உண்டு. இப்படி எண்ணுவது புத்திமார்க்கத்துக்கு மட்டும் உரியதன்று. வியாபாரம், கைத்தொழில், விவசாயம் முதலிய எல்லாத்துறைகட்கும் உரியதே. ‘அங்கிலர் செருமனி நாட்டாரை அடக்க எண்ணிப் போர்செய்யத் துணிந்தது இலங்கையரை நம்பியோ’? என்பார் வேறு சிலர். கனதம் (Canada) அவுஸ்ரேலியம் (Australia) முதலிய பெருநாடுகள் பலவற்றை நம்பியன்றோ? இலங்கையராகிய நம்மையும் பொருட்படுத்தி எண்ணினரோ? எனின், ‘துரும்பும் பல்லுக்குத்த உதவும்’. ‘ஆயிரம் மாகாணி அறுபத்திரண்டரை’. ‘பல துளி பெருவெள்ளம்’ என்பன எல்லாம் முதுமொழி. நம்மாலும அங்கிலருக்கு நன்மை வரலாம். வராது என யார் சொல்வார்?

அன்றியும் நம்மையின்றி அங்கிலருக்கு வெற்றி வருமாயின், அந்நாளில் நமக்குப் புகழுண்டோ?

-- 16-1139இல் வண. கிங்ஸ்பெரி தேசிகர் வானொலியில் பேசியது.

0 0 0 0

## ‘முத்தான முத்தல்லவோ!’

உலகிலேயே மிகப்பெரிய முத்து கண்ணீர்த்துளி வடிவத்தில் மூன்று அங்குல நீளமும் சுமார் இரண்டு அங்குல பருமனும் கொண்டது. பாரசீக முத்துக் குளிப்பவர்கள் இதை 1628-இல் கண்டெடுத்தார்கள். தாஜ்மஹால் மாளிகையைக் கட்டிய முகலாய சக்கரவர்த்தி ஷா ஜஹான் இதையும் தன் ஆசை மனைவி மும்தாஸுக்காக வாங்கினான். சுமார் நூறாண்டுகள் கழித்து ‘ஆசிய முத்து’ என்ற பெயருள்ள இந்த இரத்தினம் சீனத்து மஞ்சு சக்கரவர்த்தி சியென் லுங் என்பவரின் அரண்மனையை அலங்கரித்தது. 1799இல் அவர் இறந்தபோது அவருடைய உடலுடன் ‘ஆசிய முத்து’வும் புதைக்கப்பட்டது.

1900த்தாம் ஆண்டு கள்வர்கள் சமாதியை உடைத்து அதைக்கவர்ந்து சென்றார்கள். பதினெட்டு வருடங்கள் கழித்து அது மீண்டும் ஹொங்கொங் நகரில் தோற்றப்பட்டது ஐரோப்பிய கத்தோலிக்க சபையினர் ஒரு கடனுக்காக அதை அடைமானமாகப் பெற்றனர். கடன் கொடுபடாதபடியால் அது இரண்டாவது உலக மகாயுத்தம் முடிந்த பின்பு பாரிஸ் நகரில் இனந்தெரியாத ஒருவருக்கு சுமார் அரை லட்சம் டாலர்களுக்கு விற்கப்பட்டது. தற்சமயம் அது எங்கிருக்கிறது என்பது எவருக்கும் தெரியாத மர்மம்.

0 0 0 0

## உணர்ச்சி மிக்க கேள்வி

நடிப்பு என்பது சுட்டுப் போட்டாலும் வராத ஒரு நாட்டிய மங்கை சினிமாவில் நடிக்கப்போனாள். டைரக்டர் எவ்வளவோ சொல்லிக்கொடுத்தும் பலனில்லாமல் போய்விட்டது. பொறுமை இழந்தவராய், ‘கொஞ்சமாவது உணர்ச்சியைக்காட்டி நடிக்கமுடியாதா, அம்மா!’ என்று கத்தினார்.

அதற்கு அப்பெண், நீங்கள் என் முகத்தை மட்டுமே படம் பிடித்துக் கொண்டிருந்தால் நான் எப்படி உணர்ச்சி காட்டுவது?’ என்று மறுகினாள்.

தயாரிப்பு: வி. என். பி.

# ஆகா!

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

பப்பா, இரண்டு பேரும் என்ன கூத்தடிக்கிறாக.

“என்னால் நம்ப முடியவில்லையே.”

“நம்ப மாட்டீர்கள். காலம் அப்படிக்கெட்டுப் போய்க்கிடக்குசாமி. வயதடைந்த பசங்களை அடிக்கடி சினிமாவுக்குப் போகவிடாதீங்க. அந்த ஆள் இருக்கிறானே மகா பொல்லாத பயல். நீங்க வயல்காட்டுப் பக்கமாக எருமைமாட்டைக் கட்டி இழுத்துக்கொண்டு போகிறப்போ வழியிலே காத்துநின்று உங்களுக்குத் தெரியாமலே பின்னாலே வந்து...”

“ஐயையோ, என்ன பண்ணிப்புடுவான்?”

“மாட்டை அவுத்து துரத்திவிட்டு கயிற்றை தன் கழுத்திலே மாட்டிக்கொள்வான்.”

“எதுக்காக அப்படிச்செய்கிறான்? அப்படியேஇழுத்துக் கொண்டுபோய் உழவிலே கட்டி அடிக்கச் சொல்லியா? அல்லது கண்ணுக்கு முன்னை கத் துடிதுடித்து மூச்சுத் திணறி செத்து மடிஞ்சு தொலைகிறதற்கா?”

“அதெல்லா மில்லைக் காணும் நீர் என்ன உலகமே தெரியாத மனுஷனாயிருக்கிறீர். எல்லாம் உமக்குச் சரியானபடி குல்லாப் போட்டு உமது வீட்டுக்குள்ளே நுழைகிறதற்கான உபாயம், ஒய்! மாடுதான் பின்னாலே வந்துகொண்டிருக்கிறதென்ற நினைப்புடனே நடந்து போவீர். பாதி வழியிலே திருப்பிப் பார்த்து மாடு மனிதனாக நிற்கும் அதிசயத்தில் திகைத்துநிற்பீர். அது சமயமாகப் பார்த்து அந்தப் போக்கிரிப் பயல், தான் துவாபரயுகத்து மனுஷனென்றும் கோபாலகிருஷ்ணன் தன் தோழனென்றும் இந்தக் கணம்வரை தான் மாடாகவிருந்து சாபவிமோசனம் அடைந்திருப்பதாயும் இல்லாததுபொல்லாததுஎல்லாம் புழுகி தேவலோகப் பாஷைகூடப்பேசி உம்மை முழுசாக நம்பவைத்து தன் காலில் விழும்படி கிறங்கப் பண்ணிவிடுவான்.”

“அடடேஅப்படியாசேதி. அவனை என்ன செய்கிறேன் பார்!”

“செய்கிறதென்னஇருக்கு இனிமே.‘எருமைமாட்டை’ வீட்டிலேயே கட்டிப்போட்டிடும்!”

0 0 0

ஆகா! ஆகா!

ஹா...ஹா...ஹா!

# மேலை நாட்டு நாகரிகம்

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

யமான முறையே அஃது என்றும் ஆழ்ந்து நோக்குமிடத்துப் புலனாகும்.

### காலநிலைக்கு ஏற்ற உடைஉணவு

மேலும் மேலை நாட்டினர் தமது சீதோஷ்ண நிலை, சுவாத்தியநிலைகளுக்கு ஏற்ப தமது உணவு வகைகளையும் உடைகளையும். குடிக்கும் பானங்களையும் தெரிந்தெடுத்தார்கள் தங்கள் நாட்டின் காலநிலை மாறுபாடடையும் போழ்து. வெப்பதட்பநிலையைச் சமாளித்துக்கொள்வதற்காக ஆங்கு அவர்கள் பலமிக்க மதுபானங்களை உபயோகித்து வருகிறார்கள் என்பதை நாம் மறந்து, அது ஒருவகையான நாகரிகம் எனக் கருதி அநாவசியமாகக் களியாட்ட விழாக்களிலும், பொது வைபவங்களிலும் நம்நாட்டு மக்களும் மெய்மறந்து, மலதிகமாகப் பலமிக்க மதுபானங்களை நடைமுறையில் உபயோகித்துவருகிறார்கள்.

தொகுத்துக் கூறுமிடத்து. மதிப்புக்கருதி எழுந்துவணக்கம் தெரிவிக்கும் முறைக்குப் பதிலாக மேலைநாட்டுப் பழக்கத்தைப் பின்பற்றி ஆசனத்திலேயே இருந்தவண்ணம வணக்கம் செலுத்துவதும், அல்லது வணக்கம் செலுத்தாமலே விடுவதும், பாதரட்சையுடன் தேவாலயத்தினுள் நுழைந்து வழிபாடு செய்வதும். சமய ஆசாரமுறைகள் மருவி வருவதற்கு ஏதுவாக நடக்க முற்படுவதும், தவறான முறையில் மதுபானத்தை விரும்பி அருந்துவதும், அவலட்சணமான முறைகளில் மாதர்கள் ‘மினிஉடை’ அணிவதும், மேலைநாட்டு நாகரிக முறையைப் பின்பற்றியதால் நம்நாட்டுநாகரிகம் பாதிக்கப்படுவதற்கு மேற்குறிப்பிட்ட அம்சங்கள் முக்கிய காரணங்களாக அமைந்துள்ளது என்பது சொல்லாமலே விளங்கும்.

அதற்காக மேலைநாட்டு நாகரிகம் முற்றிலும் நம் நாட்டுநாகரிகத்தைப் பாதிக்கின்றது என நாம் கருத முடியாது, பெரும்பாலான இடங்களில், மேலைநாட்டு நாகரிக் முறைகளைத் தழுவி நடந்தமையால், நாம் உன்னதநிலையை அடைந்திருக்கிறோம் என்றுதான் சொல்ல வேண்டும் மேலைநாட்டு நாகரிகம் சிற்சிலஇடங்களில் நம் பண்பாட்டுக்கு ஒவ்வாத வகையில் மிக்கமுரணாக அமைந்துள்ளமையால், நம் நாட்டு நாகரிகத்தை அவை பாதிக்கின்றன என்பதை மேற்கூறிய ஒருசில உதாரணங்கள் மூலம் அறியலாம். ஆகையால், மேலை நாட்டு நாகரிகத்தில் உள்ள நமக்கு ஏற்ற நன்மை அளிக்கும் பண்புகளைப் பின்பற்றிக் கொண்டு, நமக்கு ஒவ்வாதவற்றைப் புறக்கணித்துவிடுவதுதான் சாலச்சிறந்த முறையேயன்றி, மேலை நாட்டு நாகரிகத்தின் மீது நாம் பழிசுமத்துவது உசிதமன்று.

# புகைப்பதை..

(8ம் பக்கத்தொடர்ச்சி)

எல்லாவற்றிலும் மேலாக புகை அரக்கனை வென்று விட்டேனே என்ற ஒரு பரம திருப்தி நெஞ்சு முழுவதும் நிறைந்தது.

இதுதான் அப்பெண்மணியின் சரிதை.எங்கள்நாட்டில் மேற்கூறியது போன்ற கிளினிக்குகள்இல்லைஆயினும்சன சமூக நிலையங்கள், விளையாட்டுக் கழகங்கள் போன்ற பொதுஸ்தாபனங்களில் சேர்ந்துள்ளவர்கள், புகைப்பதை நிறுத்த விரும்பின், தங்களுக்குள்ளேயே கிளினிக் அமைத்துக்கொள்ளலாம். அப்படியில்லாவிட்டால் புகைப்பவர்கள் ஒன்று சேர்ந்து புகை எதிர்ப்புசங்கங்களை’ அமைத்துக்கொள்ளலாம் எதற்கும் மனமுண்டானால் இடமுண்டு.

# வளரவே...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

போட்டு சினிமாவைத் தயாரிக்க முன்வருவதில்லை. இதனால் பல கலைஞர்கள் தமது ஆற்றலை வெளிப்படுத்த முடியாமலிருக்கின்றது. இதற்கு தடைவசதி அளிக்கும் என்பதை யாம் ஒப்புக் கொள்ளவேண்டும். ஆனால் நம்மைநாம் வளர்த்துக் கொள்வதற்கும் கலாசாரத் தொடர்பு நீடிக்கவும் வசதி செய்யும் வெளிநாட்டுப் படங்களுக்கு கட்டுப்பாடு இருக்கக்கூடாது

சோ கனகரத்தினம்
(டிங்கிரி) நகைச்சுவை நடிகர்
34, யாழ்வீதி யாழ்ப்பாணம்

## கற்கால மனிதனின் உபகரணங்கள் கண்டுபிடிப்பு

உஸ்பெகிஸ்தான் விஞ்ஞானப் பேரவையின் ஆதரவின் கீழ் தொல்பொருள் ஆராய்ச்சி நிறுவனமொன்றை ஸ்தாபிக்க உஸ்பெக் குடியரசு தீர்மானித்துள்ளது.

மத்திய ஆசியக் குடியரசின் பண்டைய வரலாற்றை ஆராய்ந்தறிய இது பேருதவியாய் இருக்கும்.

ஏற்கெனவே, ஸமர்காந்தின் 2800 ஆண்டு பூர்த்தியையொட்டி பரவலான ஆராய்ச்சிகளை அறிஞர்கள் நிறைவேற்றியுள்ளனர்.

அங்கே பண்டைய அஃப்ரஸியாப் பிராந்தியத்தில் கண்டுபிடிக்கப்பட்ட 7-ம் நூற்றாண்டு சுவரோவியங்கள் உலக அறிஞர்களின்கவனத்தைப் பெரிதும் ஈர்த்தது.

முஹலாய சக்கரவர்த்தி பாபரின் பிறப்பிடமான ஃபர்கானாவிலும் ஆராய்ச்சிகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

கற்காலத்தைச் சேர்ந்த குல்புலாக் பிரதேசத்திலும் ஆராய்ச்சிகள் ஆரம்பமாகும்.

தாஷ்கந்திலிருந்து 100 கிலோமீட்டர் தூரத்திலுள்ள இவ்விடத்தில் அக்ஷுலியன் நாகரிகத்தைச் சார்ந்த பண்டைய மனிதனின் கற்கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இது சோவியத் நாட்டிலேயே மிகத்தொன்மையான ஸ்தலமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருட பலன்

# இன்று பிறந்த தினமா?

## 15-9-1970

அடுத்த பிறந்ததினம்வரை நடக்க இருப்பது என்ன? கோள்கள், எண்கள், அமைவுகொண்டு பலாபலன் தரப்படுகின்றது.

வாழ்க்கையில் சலிப்புற்றுத்தான் காணப்படுகின்றீர். பழையகால வாழ்வை மறந்துவிடவும். 1970 கார்த்திகை மாதத்திலிருந்து வியாழ சுபம் பெற ஏது உண்டு. 1971-ம் ஆண்டு ஆனி மாதத்தில் யாத்திரை போகும் வாய்ப்புத் தென்படுகிறது. இவ்வருட இறுதியில் மாதாவழி மறைவையும் எதிர்நோக்கவேண்டிவரும், வெள்ளியின் ஆதிக்கம் காணப்படுவதால் பெண்கள் உறவு நிரம்ப உண்டு.

இத் தேதிப்பிறப்பு நபர் பலரின் கையிலும் விதி ரேகைக்கும் ஆயுள் ரேகைக் குமிடையில் அதே போக்கில் ஒருசிறுரேகை தோன்ற இடமுண்டு. இப்படியானவர்க்கு பேரதிர்ஷ்டம் கிட்டும் என்பது உறுதி. பொதுவில் அதிர்ஷ்ட இலாபச்சீட்டு வகை ஈடுபாடு நன்று.

3-2-7-6 எண்கள், இவ்வெண் கொண்ட தேதிகள், ஆண்டு பூராவும் அதிர்ஷ்டம் கொடுக்கும். 1 எண் எதற்கும் தவிர்த்துக் கொள்ளவும்.

# உங்கள் இராசி பலன்

15—9—1970 — 21—9—1970

**மேடம்**

அரசியலாருடன் ஈடுபாடு காணலாம். வாரநடுப்பகுதியில் தொழில் விஷயமாய் ஏமாற்றம் காத்திருக்கின்றது. தெய்வசிந்தனை ஓரளவு சாந்தி கொடுக்கும். பெரிய திட்டங்கள் உண்டு. ஆயினும் அவற்றைச் செயல்படுத்துவதில் சிக்கல் பல தோன்றும். குடும்பத்தில் இன்பச் சூழ்நிலை காணப்படாது. குடல்சம்பந்தமாய் நோய்கள் உண்டாகலாம்.

**இடபம்:**

வாழ்க்கைப் பாதை கடினமானமையேதான். குடும்பத்தில் பிளவு தோன்றலாம். எதிராளிகள் தொல்லை குறைவுபடும். பலர் தாம் எதிர்பார்த்தபடி பூமிப்பேறு காணிக்கொள்வனவு நிறைவேறுதபடி இன்னல் காண்பர். திடீர் விபத்து சம்பவிக்கலாம். தூரதேசப் பிரயாணம் தவிர்த்தல் நன்று. குடும்பப்பெரியார் ஒருவரின் நல்வாக்கும் பலிதம் காட்டும்.

**மிதுனம்:**

தேவைக்குப் பணம் கிட்டும். பொருள்நிரம்பஉண்டு. ஆயினும் செய்வதறியாது திகைப்பீர். மனதில் கிலேசமுண்டு. நிம்மதி கிடைப்பதில்லை காதல் வாழ்வு தேடி அலையநேரும். பெண்களை நம்பி மோசம் போகநேரும். தொழில் கருதியபிரயாணம் இடைப்பகுதியில் தடைப்படலாம். தோல் சம்பந்தப்பட்ட நோய்கள் தோன்றலாம்.

**கடகம்**

தேசிய லொத்தர் வகையிலோ வேறு வகையிலோ இவ்விராசிக்காரர் பலருக்குஅதிர்ஷ்டம் காத்திருக்கின்றது. குடும்ப சல்லாபத்திற்குக் குறைவேயில்லை. உல்லாசப் பிரயாணங்கள் உண்டு. புத்திரர் நோய் வாய்ப்பட ஏது உண்டு. கமத்தொழில் விருத்தி குன்றும். தொழில் வகை அபிவிருத்தி காணலாம்.

**சிங்கம்:**

கொலைக் குற்றத்திற்குரியவராகவோ. உடந்தையாளராகவோ மாட்டப்பட ஏது உண்டு இதற்காய உத்திகள் இவ்விராசிக்காரர் பலரின் கையின் செவ்வாய் ரேகை மூலம் தென்படலாம். தேவையற்ற வாக்குவாதம் தவிர்க்கவும். காதல்ஈடுபாடு கஷ்டபலனையே கொடுக்கும். பிதுர்வழி மறைவும் எதிர்நோக்கலாம்.

**கும்பம்**

தருமசிந்தையுடன் வாரம் ஆரம்பமாகும். பல காலமாக உம்மை ஆட்டிவைத்த தோஷநிலை தீர்வுகாணும். தெய்வத்தில் நம்பிக்கை வைக்கவும். உணவில் விஷமிகள் நஞ்சுபோடவும் எத்தனிக்கலாம். தேவையற்ற சினேகம் வேண்டாம். குடும்பத்துடன் யாத்திரை மேற்கொண்டால் வெற்றிகள் பல எதிர்நோக்கும்.

**தனு:**

சொல்லிலுமன்றிச்செயலிலும்வெற்றிகாணலாம். பலருக்கு உதவிபுரியச் சந்தர்ப்பம் உண்டாகின்றது. விஷமிகள் எதிராளிகள்வெட்கித் தலைகுனியும்படி மிளிருவீர். அரசியல் தலைவருடன் ஊடாட்டம் உண்டு. பங்குதாரர்க்குப் பணப்பெருக்கும், வியாபாரிகள் பாரிய கொள்வனவில் ஈடுபாடும் காண்பர்.

**விருச்சிகம்:**

இவருக்கு இவ்வாரமும் சுபபலன்நடக்க ஏதுஉண்டு மாணவர்க்குச் சோதனை வகை சித்தியுண்டு. குடும்பப் பிளவு சிறுகஉண்டெனினும் தொல்லை கொடுக்கமாட்டாது. தூரதேசப்பிரயாணமும் தொழில் உயர்ச்சியும் உண்டு. பணநிலை சீர்பெற இடமுண்டு. எவருடனும் சினேகமனப்பான்மை கொள்வீர்.

**துலாம்:**

பலகஷ்டநிலைகளைத்தாங்க வேண்டியிருக்கும். விவாக விஷயமாய் ஈடுபாடும், சிறு பிரயாசையுடன் வெற்றியும் உண்டாகும் தெய்வ வழிபாடு தேவை. வார இறுதியில் சொத்துச்சேர வாய்ப்புண்டு. கடினப்பொருள் வியாபாரம் நற்பலன் கொடுக்கும். வாய்வுக் கோளாறு கால்கை நோவு ஏற்பட ஏது உண்டு.

**கன்னி**

உடலில் பலவீனம்உண்டு. திடீர்நோய் தோன்றலாம். சில முன்னேற்ற விஷயங்கள் பாதிப்புக்காணும். காதல் வாழ்வு கிட்டும். பலர்க்குக் குடும்பத்தில் மங்கலகருமங்கள் இடம்பெறும் பணப்பேறு தொழிலபிவிருத்தி உண்டு. தூரத்திலுள்ள உறவினரிடமிருந்து சுபசெய்தி கிட்டும்.

**மகரம்**

விடாமுயற்சி வேண்டும். நாளைமறுநாள் எனப் பின்போடல் தீது. வார நடுப்பகுதியில் அதிஷ்டம் பெறும் வாய்ப்பு உண்டு. கூடுதலாகத் தனிமையில் இன்பம் காண்பீர். உறவினர் உதவி புரிய ஏது உண்டு. வியாபாரிகள் கூடுதலாகப் பொருள் கொள்வனவில்பணமுடக்கம் செய்யவேண்டாம் இருதயம் சம்பந்த வியாதிகள் கடினநிலை காட்டலாம்.

**மீனம்:**

ஒரே யோசனை. வாழ்வில் சிக்கல் பல தலைகாட்டும். ஆடம்பர வாழ்க்கைவேண்டாம். சிக்கன வாழ்வைக் கடைப்பிடி. பணம் பல வகையிலும் விரயமாகிச் செலவிற்கும் பணமில்லா நிலை. வார இறுதியில் தோன்றலாம். உம்மை நேசித்துப் [illegible] குறுக்கிடுவாள் அவ்வழி அதிஷ்டப்பேறுவரும் காலமும் விரைவில் உண்டாகும்.

ஜோதிஷவாணி மேல்காரை
காவ. சிவப்பிரகாசன்

# தமிழ்நாடு கண்ட

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

சில் பண்டிதநேருவும்மயங்கியிருக்கிறார். ஏன் பாரத நாடே மயங்கிற்று.

தைபிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள். வாழ்வில் எத்தனையோ தைகள் பிறந்தன. தமிழருக்கு வாழ்வுதான் பிறக்கவில்லை. இந்த ஆண்டு தை தமிழோடுபிறந்தது. தமிழ்நாட்டோடு பிறந்தது. 'தமிழ்த் திருநாடுதன்னைப்பெற்ற தாய் என்று கும்பிடடி பாப்பா, அமிழ்தில் இனியதடிபாப்பா —எங்கள் ஆன்றோர் தேசமடி பாப்பா' என்று பாரதி பாடிய தமிழகத்தின் தானைத்தளபதி அண்ணன் வங்கத்தில் ஓடிவரும் நதியின்மிசையால் மையத்து நாடுகளை வளம் படுத்துவோம்' என்ற பாரதியாரின் கனவை பாரதநாட்டு மத்தியஅரசின் கவனத்துக்குக் கொண்டுவந்து கங்கை நதியைக் காவேரியோடு கலக்க வைக்கும் திட்டத்தின் மூலம் 'கங்கைதனைப் புணர்ந்தாலும், காவேரியை மணந்தாலும் வாழி' என வாழ்த்துரைபாடிய இளங்கோவின் கனவை நினைவாகவும் அண்ணன் முனைந்தார். அவர் எண்ணங்கள் எத்தனை எத்தனையோ.

முதலாவது உலக தமிழாராய்ச்சி மகாநாட்டிற்கு நான் மலேஷியா சென்றிருந்தசமயம் சிங்கப்பூர் தி.மு.க. பணிமனையில் அண்ணா ஆற்றிய சொற்பெருக்கை நாவலர் நெடுஞ்செழியனும் நானும் கேட்டோம். 'திரு அண்ணாதுரை சிங்கப்பூர் வந்தபோது நானும் கூட்டத்திற்குச் சென்றிருந்தேன். என்ஆயுளில் இதற்கு முன் இவ்வளவு தமிழர்கள் ஒன்றுக்கூடியிருந்ததை நான் பார்த்தறியேன். தமிழ் ஒரு இனிய மொழி. ஒரு தமிழர் தமிழ் மொழியில் ஈடுபட்டால் அவர் உள்ளம் பறிகொடுத்து மகிழ்ச்சியில் திளைக்கிறார். பிற்பகல் 2மணி தொடக்கம் நள்ளிரவுவரை மக்கள் அவருக்காகக் காத்திருந்தனர்' என்று சிங்கப்பூர் பிரதம அமைச்சர் லீ பேசியதை நான் கேட்டேன்.

அண்ணன் மலேஷியா செல்லுமுன் அங்கு வாழும் தமிழ் மக்கள்மீது குறிப்பாக கழகத்தின்மீது ஆட்சியாளருக்கும் அரசியல் வாதிகளுக்கும் சந்தேகம் இருந்து வந்தது. அண்ணன் அதனைப் போக்கடித்தார். 'மலேஷியா வாழ் தமிழ் மக்கள் மலேஷிய நாட்டுக்கு விசுவாசம் உடையவர்களாக வாழ வேண்டும். இதுவே உங்கள் தாய்நாடு. இந் நாட்டின் உயர்ச்சிக்கும் பெருமைக்கும் நீங்கள் உழைக்க வேண்டும். அழகான சேலைக்கு மேலும் அழகூட்டும் கரைபோல் தமிழ்மக்கள் மலேஷிய நாட்டுக்கு அழகும் அரணும்உள்ளவர்களாயிருக்க வேண்டும். வெற்றிலைக்குச் சுண்ணும்புபோல் தமிழ்மக்கள் விளங்கவேண்டும்' என்று அவர் அளித்த விளக்கமும் கூறிய புத்திமதியும் அவர் சிறந்த உள்ளமும் கண்ட மாற்றுக் கட்சியினர் தம் மனதிற் கொண்டிருந்த களங்கத்தைப் போக்கிக் கொண்டனர். கழகத்தைப் பற்றிக் கொண்டிருந்த தவறான கருத்தையும் மாற்றிக் கொண்டனர். ஆயிரம் மைலுக்கு அப்பாலிருந்த மலேஷியாவுக்கு அண்ணன் போகமுடிந்தது. கூப்பிடு தூரத்திலே இருந்த இலங்கைக்கு அவர் வரமுடியவில்லை என்ற கவலை என் மனதை விட்டு என்றுமே மாறப்போவதில்லை.

# அளவெட்டி இசைவிழா

**இன்றைய நிகழ்ச்சிகள்**

யாழ்ப்பாணம், செவ்வாய் அவவை இசைக்கலை மன்றத்தின் இசைவிழா இன்று மாலை திரு எம். பி. பாலகிருஷ்ணனின் குழுவினரின் நாதஸ்வர இசையுடன் ஆரம்பமாகின்றது.

இறுதிநாளான இன்றைய நிகழ்ச்சிகளுக்கு இளைப்பாறிய நிரந்தரக்காரியதரிசி திரு. எம். ஸ்ரீ காந்தா தலைமை வகிக்கிறார். செல்வி தனலெட்சுமி முருகேசு, செல்வன் ஏ. திலகேஸ்வரன், ஆகியோரின் இன்னிசைக் கச்சேரியும்நடைபெறும். அதையடுத்து இறுதி நிகழ்ச்சியாக இசைமேதை திரு. சித்தூர் சுப்பிரமணிய பிள்ளையின் இன்னிசைக் கச்சேரி இடம்பெறும்.

# இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

## 15-9-70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-15 நாதாஞ்சலி. 6-25சைவநற்சிந்தனை, 6-30 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை 7-30 திரைகானம், 7-45 இவ்வாரப் பிரமுகர், 8-00 பௌத்த நற்சிந்தனை, 8-15 ஞானாமிர்தம். 8-30 சைவ நீதி.

9-30 முஸ்லிம் நிகழ்ச்சி, 10-00 சொல்லம்பு, 10-30 படத்திலிருந்து. 11-15 சிறுவர் மலர், 12-00 எமது அதிதிகள், 1-00 குங்குமம்.

மாலை 4-25 கல்வி மறு ஒலிபரப்பு 5-00 பிறந்ததின வாழ்த்து, 5-30 பாட்டு, 6-15 பாமாலை, 6-30 துதிப்,பாடல்கள், 7-00 தாள வாத்தியக் கச்சேரி, 7-30 விவேகச் சக்கரம் 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி. 9 30 நிகழ்ச்சி தொகுப்பு, 9-45 பாட்டு, 10-30 செய்தித்தொகுப்பு.


## பரியோவான் கல்லூரி

யாழ்ப்பாணம்:

# பிரவேச விண்ணப்பம்-1971

1. பின்வரும் வகுப்புக்களில் மாத்திரம் இடவசதியுண்டு.
   முதலாம் வகுப்பு (1-6-65—31-12-65)
   நாலாம் வகுப்பு (31-12-61)
   ஆறும் வகுப்பு (31-12-59)
   க. பொ. த. (சாதாரணம்)
   முதலாம் வருடம் (31-12-57)
   க. பொ. த. உயர்தரம்
   முதலாம் வருடம் (31-12-54)
2. அனுமதி கோரும் மாணவன் வகுப்புக்குரிய குறிப்பிட்ட திகதிக்குப் பின் பிறந்தவனாக இருத்தல் வேண்டும்.
3. விண்ணப்பப்பத்திரங்கள் 25-9-70க்கு முன் சமர்ப்பிக்கப்படல்வேண்டும். கல்லூரிக் காரியாலயத்திலிருந்து பெற்றுக்கொண்ட பத்திரங்களிலேயே விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பப்பத்திரத்துக்கு எழுதும் பொழுது முத்திரை ஒட்டிய காகித உறையில் உமது சரியான விலாசத்தையும் எழுதி அதனையும் சேர்த்து அனுப்பி வைக்கவும்.
   பிரவேசப் பரீட்சைத் தினம் 13-10-70 (வகுப்புக்கள்)
4. 4, 6, 9, 11)
5. பரீட்சையில் அதிக திறமையுடன் சித்தியெய்தும் மாணவர்களுக்குச் சலுகைகள் சில உண்டு.

கே. பூரணம்பிள்ளை
அதிபர்.

பரியோவான் கல்லூரி,
5—9—70.

2438

"லீடன்" LEYDEN
தயாரிப்புகள்
★ பெனியன்
★ ஸ்போட் சேட்
★ ரி சேட்
★ ரெறி சேட்
★ ரெறி பிளவுஸ்
★ பேபி வெஸ்ட்
★ கால்மேஸ்
(Nylon & Cotton)

லீடன் காமென்ஸ்
74A, கே. கே. எஸ். றேட், யாழ்ப்பாணம்.
போன்: 330


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் அமைப்பில் அடிப்படை உரிமைகள்

## இன்று நடைபெறும் தமிழர் மாநாடு சமர்ப்பிக்கும் மகஜர்

அ. புதிய அரசியல்யாப்பை மலரச்செய்வதில் இன்றைய வரலாற்று முக்கியத்துவம்

ஒரு தேசிய இனம் தனக்குத்தானே ஒரு புதிய அரசியல் யாப்பை அமைத்துக் கொள்ள முடிவு செய்யும் போது அச்செயல் தேசிய விடுதலை பெற்றமைக்கு அடுத்தபடியாகவே முக்கியத்துவம் வாய்ந்தது. இக்கூட்டத்தில்தான் புதிதாக விடுதலை பெற்று வளர்ச்சியடையும் தேசிய இனங்களின் தலைவர்கள் புரட்சி வழியில் நாட்டை அமைக்கும் வீரத்தையும் பேச்சுத்திறனையும் கைவிட்டு நாட்டு ஆககத்தில் தோன்றும் அளப்பரும் சிக்கலான பிரச்னைகளில் கருத்துச் செலுத்த வேண்டும். பெரும் சமுதாய மாற்றங்களும் தொழில்நுட்ப மாற்றங்களும் ஏற்பட்டுள்ள இக்காலத்தில் நாட்டின் புதிய அமைப்பைக் கட்டியெழுப்புவதற்கு நல்ல அரசியல் யாப்பே உறுதி வாய்ந்த அடித்தளமாகும். நல்ல முறையிலே எழுதப்பட்ட யாப்பு ஒன்று கடந்தகாலத்தில் பற்ற பலன்களைப் பதிந்துகொண்டு வருங்காலத்திற்குரிய குறிக்கோள்களை உறுதிப்படுத்தும் புதிய யாப்பைப் படைப்பது என்றால் வரலாற்றை எழுதுவதும் ஆககுவதும் என்ற இரண்டுமாகும்.

முன்னேற்பாடாய் உள்ளதாக எந்தத் தேசிய இனமும் காணப்படவில்லை. சாதி மத இனங்களைக் கொண்ட மத்தியகால சமூகத்தினராகவே நம்மில் பலர் இருக்கும்போது விசேஷமாக நமது நாட்டில் தேசிய இனத்தை முன்னேற்பாடாகக் காண முடியாது. என்றாலும். பல நூற்றாண்டுகளாக நமது வழியை ஒளி பெறச் செய்ததும் நம் மரபு உரிமையாகப் பெற்றதுமான மதிப்பற்ற ஒரு நாகரீகத்தை நாம் கொண்டுள்ளோம். மேலும் இப்பேறு மனிதர் எல்லோரும் சரிநிகர் என்ற கருத்து அடிப்படையில் தோன்றிய சட்ட முறையிலும் சனநாயக முறையில் அமைந்த நிறுவனங்களிலும் ஆங்கிலேயர் ஆட்சியின்கீழ்பெற்ற அனுபவத்தால் வளம்படுத்தப்பட்டு உள்ளது. இவ்வாறு புதிய அம்சங்களை நமதாக்கி அவற்றைத் தொகுத்து வேற்றுமையில் மெய்ம்மையான பொதுத்தன்மையைக் காண்பதுவும் நமது சிறப்புத் திறமைக்கு ஏற்ற தொன்றாகும். இவ்வாறு நம் காலத்தில் ஆசியாவிலும் ஆபிரிக்காவிலுமுள்ள பல நாடுகளில் ஜனநாயகத் தடங்கல்களை எண்ணிப் பார்க்கும்போது நமது நாட்டிலே கடந்த 22 வருடங்களில் நடைபெற்ற ஒவ்வொரு பொதுத் தேர்தலுக்குப் பின்னரும் அமைதியாக ஏற்பட்ட அரசியல்மாற்றங்கள் நமது இலங்கை நாட்டு மக்கள் ஜனநாயக செய்முறையின் கருத்தை நன்கு விளங்கிக் கொண்டுள்ளனர் என்பதனை உறுதிப்படுத்துகின்றது.

ஆகவே வருங்காலத்தில பல நூற்றாண்டுகட்கு தேசிய இலத்தின உரிமைப்பத்திரமாக இருக்கக்கூடிய புதிய தற்கால அரசியல் யாப்பொன்றை நமக்கு நாமே அமைத்துக்கொள்ளும் வரலாற்று முக்கியத்துவம் உடையதாக இக்காலத்தைக் கருதுவது நன்று.

யாப்பை அமைக்கும்முறை முக்கியமானது

நமது யாப்பிலே நாம் எழுதப் போவதைக் காட்டிலும் வரலாற்று முக்கியத்துவம் பெற்ற இச்செயலில் இறங்கும்முறை எந்தவிதத்திலும் முக்கியத்துவம் குறைந்ததன்று. 1946-1949 ஆம் ஆண்டுகளில் ஜவகர்லால் நேருவின் சிறந்த வழிகாட்டும் தலைமையில் யாப்பு அமைப்பு நடைபெற்ற முக்கியத்துவம் வாய்ந்த அந்நேரத்தில் இந்தியநாடு தறுவாய்க்குஏற்ப உயர்ந்த நிலையிலிருந்து செயலாற்றியதை இங்குநினைவுபடுத்திக் கொள்ளலாம். நமக்குள்ள அனுகூலங்கள் அனைத்துடனும் புதிய யாப்பொன்றை மலரச் செய்வதோடு மட்டுமல்லாமல் யாப்பமைக்கும் கலைக்கே குறிப்பிடக்கூடிய நான்கு வழிகளில் நமது ஈழநாடு தனது எனச் சொந்தமான வழிவகைகளைக் கொடுக்கக்கூடியதாகக்கே (Nation hood) வலிமை தரும் என்பதை மனதில் கொள்ள வேண்டும். மூன்றாவதாக, பிரதானமான எல்லாவிடயங்களிலும் முடிவுகள் பெரும்பான்மை வாக்கினால் அன்றி ஒருமனப்பட்ட தன்மைப்படியே என்றால் (by concensus) யாப்பு தேசிய யாப்பாக அனைவராலும் இயற்கையானதாகவே ஏற்றுக கொள்ளக்கூடியதாகலாம். இது பண்டைக் காலத்தில் நம் மக்களின் அரசியல் சிறப்புத் திறமையினால் ஏற்படுத்திய பழங் காலத்து கிராம சபைகள் தொழிற்பட்ட மனநிலைக்கு ஒத்ததாகும். அந்தக் கிராம சபைகளில் கட்சிமுறை இல்லை; வாக்களித்தல் இல்லை; முடிவுகள் எல்லாம் ஒரு மனப்பட்ட தன்மையாலே எனவே 'ஐவரின் குரலே ஆண்டவன் குரல்' என்றபழமொழி. நமது யாப்பை அமைப்பவர்கள் தேசிய இன முழுவதின் நலனையும் அசையாத குறிக்கோளாகக் கொண்டு பெருமளவு ஒருமைகளிலும், சிறிய பெரிய நாடுகளின் சம உரிமைகளிலும், உள்ள நம்பிக்கையை மீண்டும் உறுதிப் படுத்துவதே ஐக்கியநாட்டு மக்களின் குறிக்கோள்களில் சிலவென்று நமதுநாடும் அங்கம் வகிக்கும் ஐக்கியநாட்டு ஸ்தாபனத்தின் உரிமைப் பத்திரம் கூறுகின்றது. மேலும் மனித உரிமைக்கும், சாதி, பால் மொழி, மதம் என்ற வேறுபாடுகளின்றி எல்லோருக்கும் உரிய அடிப்படைச் சுதந்திரத்திற்கும் மரியாதை செய்வதைவளர்ப்பதுவும் ஊக்கப்படுத்துவதும் இதனில் அடங்கும். 25 ஆண்டுகட்கு முன் இந்த உரிமைப்பத்திரத்தை ஏற்றுக்கொண்டதில் இருந்து இன்றுவரை மனித இனம் தனது வரவாற்றில் புதிய நிலையை அடைந்துள்ளது பல ஆவணங்களில் அடிப்படை மனித உரிமைகளும் சுதந்திரங்களும் வளர்ந்து பொறிகள் கூறப் பெற்றிருக்கின்றன. எனவே அடிப்படை உரிமைகளின் ஒரு மாதிரி

**புதிய அரசியல் அமைப்பில் சிறுபான்மையினரின் உரிமைகளுக்குப் பாதுகாப்பளிக்கக்கூடிய அம்சங்களையும் இணைத்துக் கொள்ளக்கோரி, தமிழ்த் தலைவர்களின் ஒரே கருத்துக் கொண்ட மகஜர் ஒன்றை இன்று யாழ். நகரமண்டபத்தில் அழைப்பின் பேரில் கூடும் மகாநாடு, அரசியல் அமைப்பு அலுவல்கள் அமைச்சருக்கு அனுப்பிவைக்கவிருக்கிறது. இந்த மகஜரின் முழுவிபரமும் இங்கு தரப்படுகிறது.**

**"அடிப்படை உரிமைகள் நீதிமன்றத்தினால் பாதுகாக்கப் பட்டால்தான் அவை தமது நோக்கத்தை நிறைவேற்ற முடியும். இவற்றை மீறுவதைத் தடுப்பதற்கே யாப்பில் விதி இல்லை என்றால், அடிப்படை உரிமைகளால் பயனில்லை. அடிப்படை உரிமைகளை நீதிமன்றங்கள் பேணுவதற்குத் துணைசெய்யும் வழிகளை ஆக்க வேண்டும்" என்று மகஜரில் வலியுறுத்தப்பட்டுள்ளது.**

இருக்கவேண்டும். முதலாவதாக, மக்கள் பிரதிநிதிகள் சபையே தன்னைத்தான் யாப்பு அமைக்கும் சபையாக்கிக்கொண்டதனால். இச்சபையில் நாட்டின் புகழ் பெற்ற புதல்வர் பலர்இடம் பெருத இந்நிலையில் யாப்புப்பற்றிய கலந்துரையாடலுக்கு மதிப்பு உள்ள கருத்துக்களைக் கூறக்கூடியவர்களையும் இதுகாறும் பிரதிநிதித்துவம் பெருதவர்களின் சார்பில் பேசக்கூடியவர்களையும் ஆலோசனைக் குழுக்களில் பணியாற்றச் சேர்த்துக் கொள்வது வேண்டற்பாலது. இரண்டாவதாக யாப்புஅமைப்புப்பற்றிய சிந்தனையில் தேசியஇனம் முழுவதையும் தொடர்புபடுத்திக் கொள்வதற்கு வழிகளைக்கண்டு நமக்கென ஒரு புதிய முறையில் செல்லலாம். இது உண்மையில் கைகூடவேண்டுமாயின் யாப்பின் இறுதிநகலை எழுதுவதற்கு முன்கூட்டியே குறுகிய ஒருகாலவெல்லை வரையறுக்கப்படக்கூடாது. யாப்பு அமைப்பில்தேசியஇனம்முழுவதுமே பங்கு கொள்வது நமது தேசிய இனத்திலைப்பாடு மனதாக யாப்பை அமைப்பார்கள் என்றால் தேசிய இனத்தை ஒன்றுபடுத்துவதற்கு இதைவிட வேறு ஒன்றும் காணமுடியாது. கடைசியாக விட்டுக்கொடுக்கும் நெறியும் நமது பழங்காலச் சொத்து. நமது சமயநோக்கின் பண்பாக விருந்த தொகுடுபாற்றல் பிற துறைகட்கும் விரிந்தது. ஒத்து இயலக்கூடாதவை என்று தோன்றும் குடியரசுவாதத்திற்கும் முடியாட்சி சாம்ராஜ்யத்தின் ஓர் அங்கத்திற்கு இடையேயும் சமஷ்டி ஆட்சிக்கும் ஒற்றைஆட்சிக்கும் இடையேயும் அரச சோஷலிஸத்திற்கும் சனநாயக சோஷலிஷத்திற்கும் இடையேயும்மையவதிகாரத்திற்கும் பன்முகப்படுத்தப்பட்ட அதிகாரத்திற்கும் இடையேயும் சமரசம் செய்யக்கூடிய ஏதோ ஒருவழியை இன்று நாம் காணமுடியும்.

2, அடிப்படை உரிமைகள்,

சமத்துவ உரிமை

அடிப்படை மனித உரிமையிலும், மனிதனின் மேன்மையிலும். பெறுமானத்திலும், ஆண் பெண் சம உரி அத்தியாயத்தை நமது யாப்பில் சேர்த்துக்கொள்ளும் சாதகநிலை நமக்கு உண்டு

உத்தரவாதமாகிய அடிப்படை உரிமைகள் நல்ல ஒரு யாப்பிற்கு - தேசிய இனத்தின் நிலைபேற்றை உறுதி செய்வதற்கும் யாப்பிற்கே நீடித்தற்கும் பண்பைக் கொடுப்பதற்கும்- அடிப்படையானவை நிர்வாகிகள் அதிகாரத்தைத் தவருகப் பயன்படுத்துவதை விலக்குவதற்கும் சட்டசபையால் ஏற்படக்கூடிய கொடுங்கோன்மையைத் தடுப்பதற்கும் மாற்றமுடியாதவாறு போற்றிப் பதித்துவைக்கப்பட்ட இவ்வுரிமைகள் ஏற்ற பாதுகாப்பாகும். இவ்வுரிமைகள் நமது சமுதாயத்தைப்போன்ற பல மக்கட் தொகுதிகளைக்கொண்ட சமுதாயத்தில் சிறுபான்மைச் சமுகங்கட்கு விசேட பாதுகாப்பாகும்.

தனிஆட்கள் சமுக உறுப்பினராய் அன்றி. தனியாட்களாய்ப்பெறும் சமத்துவமே யாப்பில் அடிப்படை உரிமைகளைச் சேர்த்துக் கொள்வதனுல் இனவகுப்புவாதத்தை அரசியலிலிருந்து நீக்கவோ, குறைக்கவோமுடியும். சமத்துவ உரிமையையும் சமமான சட்டப்பாதுகாப்பையும் மத. இன, மொழி, சாதி, பால், பிறப்பிடம் ஆகிய அடிப்படையில் ஓரம்காட்டுதலைத் தடுத்தல் நிறைவுபடுத்துகின்றது. சமத்துவ உரிமை சமமதிப்பில் இருந்து தோன்றுகின்றது; எதிர்மலையாக இது சுரண்டப்படாத சுதந்திரத்தில் இருந்து தான்றுகின்றது. இன்னும் வெளிப்படையாகச்சொன்னல் சட்டத்தின்முன் அனைவரும்சரிநிகர் தேர்தலிலும் பொதுஇடங்களிலும் சமுதாயத்தில்தோன்றும் பதவிகளை வகிப்பதிலும் எல்லோரும் சம உரிமை உடையவர். கல்வித்துறையில் சமகல்வி நிலையங்கட்கு சமமான உரிமை உண்டு என்பதாகும். ஐக்கிய நாடு அறிக்கை கல்வியில் ஏற்படும் ஓரம்பற்றி 'இத்துறையில் ஓரச்செயல்கள் சட்டத்தின் முன்னிலையில் சமநிலையை மறுப்பதாகும்'' என்று கூறுகிறது தனி ஆளின் தகுதியை விட்டு சமுக விகிதப்படி கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்க்கும் செயலை ''தேசிய இனக் குறிக்கோளையும் சனநாயகக் குறிக்கோளையும் இல்லை என்று மறுப்பதாகும்'' என இராதாகிருஷ்ணன் விளக்கியுள்ளார். மறுபுறத்தில் அரசாங்கத்தை மட்டுமன்றி சமுதாயத்தையும் கட்டு படுத்தும் அடிப்படை உரிமைகள் பொதுப் பிரசை என்ற கருத்தை வளர்த்து தேசிய ஒருமைப் பாட்டைத் தரவல்ல ஒரு பெரும் சக்தியாக விளங்கும். மனிதனுக்குச் சுதந்திரம், மனிதனுக்கு மதிப்பு என்ற உயர் நோக்கங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்ட இக் காலத்தில் சாதி, சாதிக் கேடு அல்லது உயர்ந்தசாதி தாழ்ந்த சாதி என்ற ஊழல் புண் மாற்றப்பட வேண்டி உள்ளது. எந்த விதத்திலும் தீண்டாமையை நடைமுறையில் கடைப்பிடிப்பதைத் தண்டனைக்குரிய குற்றமாக்கினல் அடிப்படை உரிமை அத்தியாயம உண்மையிலேயே அடிமைத்தனத்தில் இருந்து விடுவிக்கும் உரிமைப் பத்திரமாகும். முக்கியமாக சாதிப்பாகுபாடுள்ள நமது சமுதாயத்திலே அடிப்படை உரிமைகளில் ஒரம் செய்வதைத் தடுப்பதில் விசேட சலுகைகளை உரிமை குறைந்தவர் ஏனைய மக்களின் நிலைக்கு வருவதற்காக அவர்களுக்கு மட்டும் அளிப்பதற்கு விதி விலக்குச் செய்யப்பட வேண்டும். அவர்களுக்கு அரசாங்க சேவையிலும் உயர்கல்வி நிலையங்களிலும் சில இடங்களை-வரும் 20வருடங்கட்கு ஒதுக்கி அவர்கள் தமக்குள்ளே தாம் போட்டியிடத் தக்கதாக அடிப்படை உரிமைகளில் புறநடை செய்ய வேண்டும். இதனல் இவர்களிடைய தோன்றும் புதிய லைமையால் முன்பு சாதி காரணமாகத் தோன்றிய தடங்கல்களால் நலிவுற்ற தம் இனத்திற்கு நாட்டிலும் சமுதாயத்திலும் சம இடத்தை வென்று கொடுப்பதற்கு வழியாகும்

அடிப்படை உரிமைகள் நீதிமன்றத்தினல் பாதுகாக்கப்பட்டால் தான் அவை தமது நோக்கத்தை நிறை

(16 ம் பக்கம் )

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அடிப்படை உரிமைகளுக்கு சட்டப்பாதுகாப்பு

(15-ம் பக்கத் தொடர்ச்சி)

வேற்றமுடியும்; இவற்றை மீறுவதைத் தடுப்பதற்கே யாப்பில் விதி இல்லை என்றால் அடிப்படை உரிமைகளால் பயன் இல்லை. அடிப்படை உரிமைகளை நீதிமன்றங்கள் பேணுவதற்குத் துணைசெய்யும்வழிகளை ஆக்க வேண்டும்.

**3. கலாச்சார உரிமைகளும் மொழியுரிமைகளும்**

''சட்ட ஆட்சியென்பது இயக்க ஆற்றல் சார்ந்த ஒரு கருத்து. இதன் விரிவிற்கும் நிறைவிற்கும் சட்டவல்லுநரே முக்கியமாகப் பொறுப்புள்ளவர்கள் இதனை சுதந்திரம் பெற்ற ஒரு சமுதாயத்தில் தனி ஆளின் சமூக உரிமைகளையும் அரசியல் உரிமைகளையும் பாதுகாத்து வளர்ப்பதற்கு மட்டுமல்லாமல் சமுதாய, பொருளாதார, கல் கலாச்சார நிலைகளில் அவருக்கு சட்டப்படி அமைந்துள்ள ஆர்வங்களையும் மதிப்பையும் பெறுவதற்காகப் பயன்படுத்த வேண்டும்''-டில்லியில்நடைபெற்ற அகில உலக சட்டவல்லுநர் பிரகடனம், (1959).

ஒரு புறத்தில் சமூக அரசியல் உரிமைகளில் தனிப் பிரசையின் சமத்துவத்தை அடிப்படை உரிமைகள் வறபுறுத்துவதோடு கலாச்சார உரிமைகளைப்பொறுத்த வரை மக்கள்தொகுதிகளின் சமத்துவத்தையும் வற்புறுத்துகின்றன. நமது கூட்டு மரபு உரிமையை வளமுள்ளதாக்குவதற்கு பல காலங்களில் பல மரபுகள்பிணைந்து வளர்ச்சியுறும் ஓர் தொகுதியாகவே இலங்கை வரலாற்றை நோக்குவது பொருத்தமுடையதாகும். ஆனல் மக்கட் தொகுதிகள் அனைத்தையும் சரிநிகராகக் கருதாவிடின் மேலே கூறிய நமது இத்தொலை நோக்கு திரிபடைந்து போய்விடும். ''புறநிலை மெய்ம்மை நோக்குடைய வரலாறு எதுவென்றால் மக்கட் தொகுதிகள் அனைத்தையும் சமமாகக் காண்பதேயாகும்''-(ஆனல்ட் ராயின்பி) ஆகவே பிரசைகளில் சொந்தமாகத் தனிப்பட்ட மொழியும் கலாச்சாரமும்உடையபகுதியினர் அவற்றைப்பாதுகாப்பதற்கு அடிப்படை உரிமைகள் உடையவர்கள் என்பது பெறப்படும். உண்மையிலே தேசியமக்களின் பிரிவுகள் ஒவ்வொன்றின் தனித்துவம் வாய்ந்த பங்கு இல்லையென்றால்தேசியவாழ்வுவளமுள்ளதாக அமையாது. நமது அரசியல் வல்லுநர் மொழியை ஆதிக்கம் செலுத்துவதற்கு கருவியாகப் பயன்படுத்துவதன்றி, பல மக்கட் தொகுதிகளைக் கொண்ட சமுதாயத்தை ஒரு தேசிய இனமாகக் கையாள்வதிலே நாட்டின் நிலைபேறு தங்கியுள்ளது.

பொதுப் பரிபாலனத்தில் ஒரு மொழிக்கே முக்கியத்துவம் கொடுப்பது பிரசைகள் சிலரைச் சரிநிகரற்றவராக்கும் அவப்பேறு உடைய விளைவை உண்டாக்கலாம்; தேசிய இனத்தைப் பிரிப்பதாக்கலாம். எஸ், கே' சட்டர்ஜி அவர்களின் கருத்துப்படி இது இலங்கையில் இரண்டு தரமுள்ள பிரசைகளை எதிர்பார்க்காதவகையில் படைப்பதாகும். ஒருதரத்தினர் சிங்களத்தை மொழியாகக்கொண்டவர்; தமது மொழியினல் மட்டும்விசேட உரிமைகளைப் பெறுபவர்கள் இரண்டாம்தரத்தினர்தமது மொழி தமிழாகையால் நிரந்தரமாகக் கஷ்டங்களை அனுபவிப்பவர். மக்களுக்கு ஆற்றும் சேவையில் தேசிய மொழிகள் இரண்டையும் பயன்படுத்தும்படி சில ஆயிரக்கணக்கான அரசாங்க ஊழியர்களைக்கேட்கவிடுப்பமில்லாதமையே சிங்களத்தைப்பேசும் எண்பத்தைந்து லட்சம் மக்களுக்கும் தமிழ் பேசும் ஏனைய மக்கட்கும் இடையே மொழி அடிப்படையில் பிரிவுஏற்படுத்தும் என்றால் நாம்ஒரு தேசியஇனமென்பது பொய்யாகிவிடுவதாகும். மறுபுறத்தில் பொது பரிபாலனங்களிலும் சமூக வாழ்விலும் சிங்களம்-தமிழ் ஆகிய இரு மொழிகளையும் கையாள்வதைவிட நாட்டு ஒற்றுமைக்கும் குடிமக்களின் சமத்துவத்திற்கும் திட்டமானவழி வேறு இல்லை. பதிவேடுகளைஎழுதும் சிக்கலான பிரச்சினைகளைப் பொறுத்த மட்டில் நன்மைவாய்ந்த சில மரபுகளை மேற்கொள்ளலாம். எடுத்துக்காட்டாக, இருமொழி பேசும் இடமொன்றில் ஐந்தில் ஒரு வீதத்தினர் அப்பகுதியிலுள்ள பெரும்பான்மையினர் பேசும் மொழியைவிட வேறு ஒரு மொழி பேசுகின்றார்கள் என்றால் பதிவேடுகள் அவர்களது மொழியிலும் பெரும்பான்மையினரது மொழியிலும் எழுதப்படவேண்டும். ஆனல் பிறப்பு, இறப்பு, திருமணம் போன்ற சில பதிவேடுகள் எங்கும் இரு மொழிகளிலும் இருப்பதே மிகச்சிறந்தது

நீதிமன்றங்களிலும் சிங்களவர்கட்குச் சிங்களம் எவ்வாறே அவ்வாறே தமிழர்கட்குத் தமிழ் என்ற நெறி பின்பற்றப்படவேண்டும். வழக்கொன்றில் இருதரப்பினரும் ஒரேமொழி பேசுபவர்கள் என்றால் நீதிமன்ற நடவடிக்கை அவர்கள் மொழியிலே இருக்கவேண்டும்; அவர்கள் வெவ்வேறு மொழி பேசுபவர்கள் என்றால் நீதிபதியே தம்விருப்பின்படி எம்மொழி(கள்) பொருத்தமென முடிவு செய்யவேண்டும். சட்டமும் இறுதியில் சிங்களத்திலும் தமிழிலும்எழுதப்படவேண்டும்

பாடசாலைகளில்கல்விபயில்வதற்குத் தாய்மொழியே இன்றியமையாதஅடிப்படை வாயிலாகவேண்டும். தனி ஆட்களுக்கும் மக்கள் தொகுதிகட்கும் ஆக்க வாழ்வளிப்பதற்குதாய்மொழியே சக்திவாய்ந்த கருவியாக வேண்டும். ஆனல் எல்லவற்றிற்கும் தாய்மொழிமட்டும் போதாது. நமது நாட்டிலும் வேறு நாடுகளில் இடுப்பதைப்போல மும்மொழி வாய்பாட்டைக் கைக்கொள்வதைவிட பின்பற்றுவதற்கு வேறு நல்ல வழி இல்லை. சிங்களம்—தமிழ் என்ற இருமொழி அறிவு மூலம் தான் பிரிவின்றிச் சிங்களவர்களும் தமிழர்களும் பிரிவினையற்ற இலங்கையை தமக்குத் தாம் ஆக்கிக் கொள்ளமுடியும். ஆனல் ஆங்கிலம்போன்ற உலக மொழி அறிவு இன்றி தற்காலத்தில் வாழ்வது செயல்முறையில் கல்விஅறிவு இல்லாமத இருப்பதாகும். ஆனல் தாய்மொழியில் பெறும் அறிவுத்தரம் ஏனைய இரு மொழிகளிலும் இருக்க வேண்டுமென்பது இங்கு கருத்தன்று.

**4: பேச்சு உரிமை ஆகியவை**

கருத்துக்கொள்ளும் உரிமையும் கருத்து வெளியிடும் உரிமையும் மக்கள் உடன்பாட்டின்படி இயங்கும் அரசாங்கத்திற்கு நிறைவு தருவது. எல்லாச் சுதந்திரங்கட்கும் உரைகல்லாக அமைந்திருக்கும் இந்த அடிப்படை மனித உரிமைகள் உலக மனித உரிமைகளின் பிரகடனத்தில் 19-வது இலக்கத்தில் மதிப்புடன் பதித்துவைக்கப் பட்டுள்ளது. இது இந்திய அரசியல் யாப்பிலும் தற்செயலாக இதே இலக்கத்தில் அமைந்துள்ளது. அரசாங்கத்தின் தலையீடு எதுவும் இன்றி வாய்மொழியிலோ எழுத்திலோ, அச்சிலோ, கலை மூலமோ, காட்சி மூலமோ ஏற்ற அனுமதிபெற்ற கேள்வி மூலமோ கருத்துக்களையும், செய்திகளையும் திரட்டுவதும் ஏற்பதுவும் கொடுப்பதுவும் கருத்துச் சுதந்திரத்திற்கும் செய்திச் சுதந்திரத்திற்கும் உட்பட்டவை. பொதுமக்களோடு தொடர்பு கொள்வதற்கு உள்ள வேறு எவ்வாயிலைக் காட்டிலும் வானெலியே சிறந்து நிற்கும் இக்காலத்தில் சக்திபெற்ற இவ் வானெலி வாயில மனித மனத்தை அடிமைப்படுத்துவதற்குப் பயன்படுத்தாது மனித உரிமைகளை விரிவுபடுத்துவதற்குப் பயன்படுத்தப்படுமென்று உத்தரவாதப்படுத்தவேண்டும். பேச்சுச் சுதந்திரத்தையும் வேறுவழியில் கருத்துவெளியிடும் சுதந்திரத்தையும் மையமாக வைத்து அமைதியான முறையில் மக்கள் கூட்டம் கூடும் உரிமையும் சங்கங்களையும் மன்றங்களையும் அமைக்கும் உரிமைகளும் சுதந்திரமாகத் திரியும் உரிமையும் வசிக்கும் உரிமையும் தொழில் சுதந்திரமும் விளக்கமாக அமையவேண்டும். இச் சுதந்திரங்களில் கல்வி பயில்வதற்கும் கல்விநிலையங்கட்கும் உரிய சுதந்திரங்களின் தரம் குறைந்தது அன்று. அறிவுச் சுதந்திரத்தைப் பாதுகாப்பதில் அக்கறை உள்ள ஆசிரியர்கள் நீதிபதிகளைக் காட்டிலும் சுதந்திர முடையவர்கள் என்று விநோபாவே வாதாடித் தமது கொள்கைக்குப் பூர்வீக இந்தியாவின் அறிவுச் சுதந்திரப் பெரும் மரபில் இருந்து ஆதரவுபெற்று இருக்கின்றார்

**5. அரச கொள்கைக்கு வழிகாட்டும் நெறிகள்**

நாம் அடிப்படை உரிமைகளைப் பற்றி மேற்பகுதிகளில் கூறியதைப் போன்ற உரிமைப் பத்திரத்தை மட்டும் வற்புறுத்தவில்லைஆனல் நாம் ஒன்றாகத் திரண்டு புதிய சமுதாயம் ஒன்றில் நல்வாழ்வை அனைவர்க்கும் உரியதாக்குவதற்குச் செய்ய வேண்டிய கடப்பாடுகளைக் கண்டுகொள்ள வேண்டும். பசி, ஏழ்மைநிலை, அறியாமை, பிணி, சோம்பல் ஆகியவற்றிலிருந்து பிரசைகளைக்காப்பாற்றுவதே நலன் கருதும் அரசின் மூதற் கடப்பாடாகும். ஆனல் ஓர் உறுப்பியல் சமுதாயத்திலேதான் (Organic Society) பிரசைகள் உரிமைகளைத் துறந்து ஓய்வுச் சம்பளம் பெறுபவர்களைப் போலல்லாமல் அரசிலே பங்காளிகளாக இருக்க முடியும். உண்மையான சோஷலிசத்தை மேலிருந்து திணிக்க முடியாது; அதனை மக்கள் விருப்புடன் ஏற்றுக்கொள்ள வேண்டும். உண்மையான பொதுநல அரசு ஒன்று பொதுநல சமுதாய அடிப்படையில் அமைய வேண்டும். ஏ. டி. லிண்ட்ஸேகூறியவாறு சமூகத்தை மேலும் நல்ல சமுகம் ஆகவும் ஜனநாயக சமுகமாகவும் ஆக்குவதே அரசின் அடிப்படையான கடமையாகும். சமுதாய நீதி சுதந்திரம், சமத்துவம், சகோதரபான்மை இருக்கக்கூடிய சனநாயக சமுதாயத்தை தேடுவது சமுதாயத் தோற்றத்தை மாற்றுவதற்கு தாக்க மயக்கமுடைய மக்களிடையே புரட்சிவாய்ந்த விருப்பு ஒன்றைப் படைப்பதோடுதான் விரைவுபடுத்தப்படும் இலங்கையின் யாப்பில் உள்ளடக்கிய அரச கொள்கைக்கு வழிகாட்டும் நெறிகளில் இடம்பெறத்தக்க ஆண்டுகட்கும் பின்வரும் பத்துப்பத்து ஆண்டுகட்கும் அரசு மேற்கொள்ளும் கொள்கைக்கு ஆக்க நகல் கொள்கை விளக்க அறிவிப்பாகக் கொள்ளலாம். எங்கும் சமுதாயத்தின் சமத்துவத்தை அழிப்பதும் வடக்கில் சமுதாயத்தை மிகப் பாதிப்பதுமான சாதிப் பாகுபாட்டால்தோன்றிய குறைகளையும் தடங்கல்களையும் ஒழித்துக்கட்டும் திட்டச் செயலுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும். நாம் இங்கு பெரும் சமரசச் செயலையே எதிர்பார்க்க வேண்டும். மறுபுறத்தில் மக்கள் தொகுதி எதுவும் நாட்டின் எப்பகுதியிலோ பிரிவை வளர்ப்பதற்கு ஈடுபடுத்தும் பொருள் ஒன்று தம்மிடம் உண்டு என்பதால்தாம்அதிகாரத்தைப் பெறுவதற்கு உதவியாகச் சாதிப் பாகுபாட்டைப் பயன்படுத்தினுல் அது தேசிய இனத்திற்கே செய்யும் துரோகமாகும். சாதிப் பாகுபாட்டு ஒழிப்பில் பற்றுக்கோள் உடைய பல தரத்தினரைக் கொண்ட குழு ஆக்கத்திட்டம் ஒன்றைத் தொடக்கி நடத்தலாம். எவ்வாறு இருப்பினும் மனிதன் மனிதனே என்ற பற்றுக்கோள் வரையக்கூடிய ஒடுங்கியல் பாடசாலையே (Integrated School) பல பகுதிகளை இணைத்து முழுமையுள்ள சமூகத்தை கட்டி எழுப்புவதற்கு மிக முக்கியமானதாகும்.

தேசிய இனத்தில் மூழ்கிப் போய் இருக்கும் ஆறில் ஒரு பகுதியினரைக் காப்பாற்றுவதில்தான் ஹரிசனர்களின் மேம்பாடு தங்கியுள்ளது. ஆனல் சமுதாயம்முழுவதையும் நோக்கும் போது நாட்டின் ஒவ்வொருபகுதியிலும் இன்னும் நல்வாழ்வில் போதிய பங்கு இன்றி நல்வாழ்வைத் தேடிக்கொள்வதைத் தூண்டக்கூடிய போதிய கல்வியின்றி மரபுரிமை இழந்த சமுதாயமே பெரும்பான்மையாக உள்ளது என்றால் இது மிகையாகாது. உண்மையானசோஷலிச சமுதாயத்தை உருவாக்குவதில அரசிற்கு மிகத் துணையாக இருக்ககூடியது எதுவென்றால் தன்விருப்பார்ந்த சனநாயககூட்டுறவு இயக்கமே. இதற்கு நமது அரசறிஞர் கூட்டுறவுச் சனநாயகத்தின் அமைப்பிலும் நெறிகளிலும் அக்கறை செலுத்துவது முக்கியமானது. இதன் பொருளாதாரத்தகவுஒருபுறம் இருக்க இது அரசின் கொள்கைக்குப் புதிய துணை உதவலாம்.

புதிய சமுதாயத்தின் பொருட்டு உயர்ந்த கல்விக் கொள்கை ஒன்று பெருமளவில் வழிவகை செய்யலாம். அகிலஉலகக்கல்விஆண்டாக விளங்கும் இந்த 1970ஆம் ஆண்டிலே உலக முழுதளாவிய கல்வியையும்கட்டாயக் கல்வியையும் பாடசாலைகளை விட்டவர்களுக்கு வாழ்நாள் முழுவதும் கல்விகற்பதற்கு வசதிகளையும் எதிர்நோக்குவதும் கல்வியின் புதிய குறிக்கோள்களை வரையறுத்து விளக்குவதும் இவற்றை நிறைவேற்றுவதற்கு வழிவகைகளைக் கூறுவதுமான தற்காலக்கல்விச் சட்டம் ஒன்று இன்றி நம் நாடு இருக்கின்றதுஎன்பதை நம்பமுடியவில்லை.

சுதந்திரம் பெற்றஆண்டிலிருந்து கீழ்நோக்கி எண்ணும்போது அதிகாரபீடங்களில் அமர்ந்து இருப்பவர்களுக்கு மட்டும் என்றில்லாமல்தேசியஇனம் முழுவதின் அக்கறைக்கும் கல்வி உரியதாகும் எனச்செய்யும் கல்வி பற்றிய ஆலோசனைமுறையைப் பயன்படுத்துவதை வரவரக் குறைத்துக்கொண்டமை முரண் நகைச்சுவை உடைத்து. நமது யாப்பில் கல்வியின் அடிப்படைக் குறிக்கோள்கள் வரையறுத்து விளக்கப்படுமாயின் அது அனைவர்க்கும் உள்ளுயிர்ப்பு அளிப்பதாகும். ''உயர்கல்வி பெற்ற இனங்களுக்கே உலகின் வருங்காலம்.''-(உவின்சன் சேர்ச்சில்)

**6. கிராம அடிப்படையில் சனநாயகத்தைத் திருத்தி அமைத்தல்**

கிராமஅடிப்படையில் சனநாயகத்தை எவ்வாறு திருத்தி அமைக்க முடியும் என்பதைப் புதிதாக ஆய்வு செய்வதாலேதான் அரசாங்கக் கலைவளர்ச்சிக்கு நமது நாடு தனக்கு உரித்தான வழியில் ஆக்கம் தரமுடியும். இன்றும் இலங்கை பெரும்பாலும் கிராமங்களைக் கொண்ட ஒருநாடே. காந்தியடிகள் இந்தியாவைப்பற்றிக் கூறியதை நமது நாட்டிற்குக் கூறுவதென்றால் நமது கிராமங்கள் அழிந்தால் இலங்கையும் அழிந்துவிடும். உண்மையான சனநாயகம் மையத்திலே இருபதுபேர் இருப்பதால் மட்டும் நடைபெறுது என்றார் காந்தியடிகள். குடியேற்ற ஆட்சிக்காலத்து இருந்த முதன்மை நகருக்கு Primate City) எதிராக அவர் எச்சரித்தார். இதேபோல அவர் பெரும்பான்மை அல்லது வகுப்பு பற்றி மேலைநாட்டுக் கருத்துக்களையும் இவற்றுக்கு வேண்டிய அரசதிகாரத்தையும் ஏற்க மறுத்தார். அவருடைய குறிக்கோள் எல்லோரின் நலன்களையும் கொண்ட சர்வோதய சமுதாயமே. ஜெயப்பிரகாஷ் நாராயண் காட்டியதுபோல் கட்சியின்றி ஒடுக்கியன்று, நமது அரசியலின் அடிப்படை அலகாக அமையவேண்டிய சமுகத்தின் சனநாயகத்திலே இதனைக் காணவேண்டியுள்ளது உரிமையில் குறைந்த தொகுதிகட்கு ஓரளவு கூடிய பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவதற்கு கவனம் செலுத்திக் கிராமத்தில் உள்ள எல்லாக் குடும்பத் தலைவர்களும் கிராமசபையைத் தெரிவதற்கு ஒன்றாகக் கூடவேண்டும். இச்சபையை தெரிவதற்கு ஒன்றாகக் கூடவேண்டும். இச்சபைகளின் தலைவர்கள் அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள்) தம்மை உறுப்பினராகக் கொண்ட தொகுதிச் சபை (Electoral Council) அமைப்பார்கள். இச்சபைகளின் தலைவர்கள் அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மாவட்ட சபையை அமைப்பார்கள். தனித்தனி வாக்காளர்களால் பெரும் சபைகளையும் பாராளுமன்றத்தையும் தெரிவதில் பொதிந்திருக்கும் அரசிர் உறுப்பமைதி அற்ற கருத்தை தனியாரின் கூட்டுக்கணக்கு என்று மேலைநாட்டு அரசியல் சிந்தனையாளர் மடாரிகாவும் (Madariga) மறுக்கிறார். இருவரும் மாவட்டசபைகளுக்கு ஆகவே வாதாடுகின்றார்.

ராஜா சக்தியின் இடத்தில் ஜனசக்தியைவைக்கவேண்டுமென்றால் நாம் மாவட்ட சபைகளால் அனுப்பிய பிரதிநிதிகளைக் கொண்ட தேசிய பாராளுமன்றத்தை முழுமையாக அமைக்கத் தயங்கினுலும் தொடக்க முதல்நிலைகளிலும் இரண்டாம் நிலைகளிலும் வாக்களிப்புடைய சனநாயகத்தை விட அனைவரும் பங்குகொள்ளும் சனநாயகத்தை ஆக்கிக்கொள்ள வேண்டும்.

அதிகாரம் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளூர் சபைகளில் நின்றுவிடக்கூடாது. இயன்றளவு பலருடன்

(17-பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அரசியல் அமைப்பில் ...

(16-ம்பக்கத்தொடர்ச்சி)

சேர்ந்து உரையாடல் நடைமுறைகளையும் முடிவு செய்யும் முறைகளையும் ஆலோசனைகளை செய்வதில் தான் பங்குகொள் சனநாயகத்தின் சாரம். உள்ளது, இலண்டன் மாநிலக் கழகம் தேர்ந்தெடுக்கப்பெற்ற 129 உறுப்பினர்களையும் இளர்களால் சேர்த்துக் கொள்ளப்பெற்ற 21 மூத்தோரையும் உடையது. இக்கழகம் ஏற்படுத்திய ஆயிரத்துக்கு மேற்பட்ட குழுக்களும் உட்குழுக்களும் இலண்டன் மாநிலக் கழகத்தின் நகராட்சியில்உள்ள 800 க்கு மேலதிகமான பிரஜைகள் எல்லோரையும் கழகச் சிந்தனையிலும் கொள்கை அமைப்பிலும் தொடர்புகொள்ளச் செய்கின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட சபைகளால் தேர்வு செய்யப்பட்ட இத்தகைய ஆலோசனைக் குழுக்களே உண்மையில் மக்கள் சபையாகும். இவை தாமாகவோ மேலாணையால் திணித்தோ தோன்றக் கூடாது.

கிராமத்தின் பல உறுப்பியன்ற ஒற்றுமையை மீண்டும் காண்பதோடுதான் ஈழம் இழந்த ஒற்றுமையை நாம் வெளிப்படுத்திக் காட்டத் தொடங்குகிறோம். இத்தகைய அடிப்படையில் நமது நாட்டில் உள்ள இந்தப் பூர்வீக மண்ணிலே ஓரமைப்போடு புதிய நாகரிகம் ஒன்றைக் கட்டி எழுப்பத் தொடங்குகின்றோம்.

**7. இருகூட சட்ட மன்றம்**

மக்கள் விருப்பைப் பதிவு செய்து கொள்வதற்கு பாராளுமன்றமே தகுந்த கருவி என்று வைத்துக் கொண்டாலும் எத்தனையோ சந்ததியினரைப் பாதிக்கக் கூடிய விஷயங்களில் முடிவு செய்வதையும் பொது வாழ்வின் மெய்ப் பொருளைக் காண்பதையும் அச் சட்ட சபையில் உள்ள நிலையில்லாத பெரும்பான்மையினர் கையில் விட்டு விட முடியாது. ஒரு கட்சியால் ஆதிக்கம் செலுத்தப்படும் பாராளுமன்றம் ஒன்றில் பெரும்பான்மையினரின் தீர்ப்பு என்றால் அது மக்களின் விருப்பும் ஆம் என்றே சொல்லுவது எளிதாகும், அரச விருப்பைச் சமுதாய விருப்போடு சமரசம் செய்வதற்காக சனநாயக நாடுகளில் ஏற்படுத்திய கூர்மதி வாய்ந்த தடுப்பமைவுகளிலும், சமநிலை செய்யும் முறைகளிலும் ஆலோசனை முறைகளிலும் முதற் கூடத்திலிருந்தும் வேறான முறையில் தேர்ந்தெடுக்கப் பட்ட இரண்டாவது கூடமும் ஒன்றாகும். பங்கு கொள் சனநாயகத்தைப் பற்றி முன்பு கூறியவற்றோடும் நடைமுறை சார்ந்த பிரதிநிதித்துவம் பற்றிய தற்கால கருத்தோடும் பின்வரும் திட்டம் போன்றதொன்று பொருந்துவதாகும். இரண்டாவது கூட்டத்தின் உறுப்பினர் தொகை கிட்டத்தட்ட முதற்கூட உறுப்பினர் தொகையின் சரிபாதியாக இருக்கவேண்டும். மாநில அடிப்படையில் மூன்றிலொரு பிரிவினர் கிராம சபைகளின் பிரதிநிதிகளைக் கொண்ட தொகுதிச் சபையில் இருந்துவரும் பிரதிநிதிகளை உறுப்பினராகக் கொண்டமைந்த தேர்தல் கழகங்களால் தேர்ந்தெடுக்கப்படலாம். மூன்றில் மற்ற ஒரு பிரிவினரையும் முதற் கூட உறுப்பினரே மாநில அடிப்படையில் வாக்களித்துத் தேர்ந்து எடுக்கலாம். மூன்றில் எஞ்சிய பிரிவினரை அகில இலங்கைத் தேர்தல் கழகங்களால் தேர்ந்து எடுக்கலாம் இத்தேர்தல் கழகங்களில் ஒரு பாதி உறுப்பினர் முக்கிய தொழில்களுக்குப் பிரதி நிதித்துவம் செய்வதாகவும் மற்றப்பாதி உறுப்பினர் தொழிற் சங்கங்களுக்குப் பிரதி நிதித்துவம் செய்வதாகவும் வேண்டும்.

இவ்விரண்டு ஆண்டுகளுக்குப் பின் உறுப்பினர்களில் மூன்றிலொரு தொகையினர் ஓய்வுபெற்று இரண்டாவது கூடத்தை ஒரு நிரந்தர கூடமாகச்செய்வது விரும்பற்பாலது. இரண்டாவதுகூட உறுப்பினர்கள் குறைந்தபட்சம் முப்பது வயதுள்ளவர்களாக இருக்கவேண்டும். ஏனைய தகுதிகள் மற்றக்கூட உறுப்பினர்களுக்கு வேண்டிய தகுதிகளேயாகவேண்டும்.

**8. சனாதிபதியின் பணித்துறை**

இங்கு குறிப்பிட்ட இருகூட சட்டமன்றத்தை ஏற்பதோடு சனாதிபதியைப் பாராளுமன்றத்தின் இரு சபைகளும் இணைவாகத் தேர்ந்தெடுக்கலாம்.

இலங்கைப் பிரசையாகவும், நாற்பதுவயதுக்கு மேற்பட்டும், சட்டசபைக்குத் தேர்ந்தெடுப்பதற்கு உரிய தகுதிகளைப்பெற்றும் இருந்தாலன்றி ஒருவரும் சனாதிபதியாகத் தேர்வுபெறத் தகுதியடையமாட்டார். சனாதிபதி பதவி வகிக்கும் காலஎல்லை ஐந்து ஆண்டுகளாகும். ஆனால் மீண்டும் ஒரு பருவத்திற்குத் தேர்த்தெடுக்கப்படும் தகுதி உண்டு. பதவி விட்டபின் பொதுச் சேவையில் பதவி எதுவும் வகிக்கும் உரிமை இருக்கக்கூடாது.

**9. உச்ச நீதிமன்றமும் (Supreme Court) நீதிமுறை ஏற்பாடுகளும் (Judicial Provisions)**

நீதித்துறையின் சுதந்திரம் பாராளுமன்றத்தின் கையில் கட்டுப்படாததாக இருப்பதற்கு யாப்பிலே நீதித்துறை ஏற்பாடுகளைச் சேர்த்துக் கொள்ளும் அறிவு நுட்பத்தைப் பிறநாடுகளின் அனுபவம் சுட்டிக்காட்டுகிறது. குறிப்பாக உச்சநீதிமன்றத்திற்கு யாப்பின் உட்பொருளை விளக்குவதும் யாப்பிற்கு முரணானசட்டங்களைச் சட்ட சபையில் விரைந்து நிறைவேற்றுவதைத் தடுப்பதும் பிரசைகளின் அடிப்படை உரிமைகளைப்பறிபோகாது காப்பதுமான கடமைகள் உண்டு.

மனிதனின் நீண்டகாலப் போராட்டம் சட்டங்களாலாய அரசாங்கத்திற்குக் கீழ் வாழ்வதற்கே-மனிதனாலாய அரசாங்கத்திற்குக் கீழ்வாழ்வதற்கன்று-என்று சொல்லப் பட்டுள்ளது. சட்ட அரசாங்கம் ஒன்றிற்குத் தன்னை அர்ப்பணித்த நீதிமுறை நமக்குச் சுதந்திர சமுதாயத்தை ஆக்கித்தரும் இன்றியமையாத பங்கைக் கொண்டுள்ளது. இவ்வுயர் இலட்சியத்தை உச்ச நீதிமன்றத்தின் ஆதிக்கம். சின்னமாய் அமைக்கிறது.

உச்ச நீதிமன்றம் பிரதம நீதிபதியையும் ...... மற்றும் ...... (எண்) நீதிபதிகளையும் கொண்டிருக்கும். சனாதிபதி உச்ச நீதிமன்றத்து ஒவ்வொரு நீதிபதியையும் நியமனம் செய்யும் போது, இதற்கு வேண்டியது எனத் தாம் கருதியவாறு, உச்ச நீதிமன்ற நீதிபதிகளோடு ஆலோசித்து நியமனச்செயலைப்புரிவார். உச்சநீதிமன்றத்து நீதிபதி 65 வயதை அடையும்வரை பதவிவகிக்கலாம் என்றிருக்கவேண்டும்.

பிரதம நீதிபதி உச்ச நீதிமன்றத்து நீதிபதிகளின் ஆலோசனையோடு சனாதிபதியால் நியமனம் செய்யப்படுவார்.

கோமறைக் கழகத்திற்குப் (Privy Council) பதிலாக மேன்முறையீட்டு உச்ச நீதிமன்றம்) Supreme Court of Appeal) இருக்கவேண்டும்.

இம்மன்றத்திற்குச் சனாதிபதியாலே முதல் நியமனம் செய்யப்படவேண்டும். பின்னர் செய்யப்படும் நியமனங்கள் நீதிமன்றத்தின் ஆலோசனையோடு சனாதிபதியால் செய்யப்படவேண்டும்.

நீதிபதிகளுடைய சம்பளம் திரட்டியநிதியிலிருந்து (Consolidated Fund) வழங்கப்படவேண்டும்.

சனாதிபதியின் கட்டளையொன்று குறித்து பாராளுமன்ற சபைகள் ஒவ்வொன்றிலும் பேருரை நடந்த பின்னர் ஒவ்வொரு சபையிலும் சமூகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டிற்குக் குறையாத பெரும்பான்மையால் ஆதரவளித்தன்றி உச்சி நீதிமன்றத்துநீதிபதிபதவியிலிருந்து அகற்றப் படமாட்டார்; திறமையின்மை தவறான நடத்தை என்ற சான்று அடிப்படைகளில்தான் பதவியிலிருந்து அகற்றுவதைச் செய்யவேண்டும்.

**நீதிமுறைச்சேவை ஆணைக்குழு**

நீதித்துறையின் மற்றும் கிளைகளில் உள்ளவர்களின் நியமனம், பதவி உயர்வு, பதவிமாற்றம், ஒழுங்கு நடவடிக்கை ஆகியவற்றைக் குறித்து செயல்புரிய உச்ச நீதிமன்ற நீதிபதிகள் அனைவரையும் கொண்ட ஓர் ஆணைக்குழுவிற்கு அதிகாரம் கொடுக்கவேண்டும்.

**10. பொதுச்சேவைகள்**

இந்தியநாடு சுதந்திரம் பெற்றதற்குச் சற்றுப் பின்னர் இந்தியாவின் ஆள்பதி நாயகம் (Governor General) 'அரசியல் வாதிகளின் காலம் முடிந்து பொதுச் சேவையாளரின் காலம் தோன்றிவிட்டது என்று குறிப்பிட்டார். குடித்தலைவர்களினதும் அரசனின் அதிகாரிகளினதும் ஆணையுரிமைக்குப் பதிலாக இலங்கையில் வந்த தற்காலப் பொதுச்சேவை நமது வரலாற்றிலே ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில்தான் தோன்றியது. தகுதி அடிப்படையில் தேர்ந்து சட்ட ஆட்சிச் சூழலில் செயல்பட்டு வாழ்க்கைத் தொழிலாக நிர்வாகம் செய்த தொகுதியினர் பொதுச் சேவையைச் சனநாயகப்படுத்துவதற்குக் குறிப்பிடத்தக்க சேவை செய்து மறைமுகமாக நிர்வாக ஒருங்கிணைப்பிற்கும் உழைத்துள்ளனர். இன்று ஆசியாவில் பரந்து அகன்று செல்லும் சமுதாய விஞ்ஞானப் புரட்சிகள் நிர்வாக உறுப்பினர் தொழில்நுட்பப் பணியாளர் ஆகியோர் புதிய கருத்துகளிடையே இயலமைதியோடு சஞ்சரிக்கும் வகையில் அவர்கள்தம் நிர்வாகஅமைப்பிலும் பயிற்சியிலும் திருத்தப்பட்ட திசைத் தொடர்புணர்வைக் கொடுக்கத் தூண்டுகிறது. நாம் அபாயம் ஒன்றிலிருந்து நம்மைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும். அதுஎதுவெனில் கடந்த ஒன்றரை நூற்றாண்டில் நாம்பெற்ற நலன்களை இழந்து பழங்காலத்து ஆட்சியாளர்கள்போல நமது அரசியல்வாதிகள் நடக்கக் கூடிய மத்திய காலத்து நிலப்பண்ணை முறை நிலைமைகளில் நாம் நழுவிவிழுந்துவிடுவதிலிருந்தேயாம்.

மேலும் சிறுபான்மையினரையும் பின்தங்கிய சமூகங்களையும்கொண்ட பலமக்கள் தொகுதிகளையுடைய நமது சமுதாயம்போன்ற சமுதாயத்திலே ஓரம் செய்தாலும் தனிப் பற்றுக் கொள்ளுவதும் இருக்கக்கூடிய நிலையிலே அன்றாடு நடைபெறும் நிர்வாகத்தில் அரசியல் தலையிடு இல்லாத பொதுச் சேவையின் தேவை எப்பொழுதைக் காட்டிலும் அதிகமாகிறது.

இந்நாட்டில் பொதுச் சேவையின் நாணயத்தை மட்டுமல்லாமல் சனநாயகச் சூழலில் சனநாயக அரசாங்கத்தையும் பாதுகாக்கும் பிர[illegible] வெளியில் சுதந்திரமுள்ள ஒரு பொதுச்சேவை ஆணைக்குழு இருப்பதேயாம்.

# 'சுரங்கம்' பார்க்கப் போனேன்

—வி. சு. அருளானந்தன்—

கடந்த செவ்வாயன்று காலை பதினொருமணியளவில் எமது கார் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலைத் தாண்டிக் கொண்டிருந்தது. எல்லா வீட்டுக் கதவுகளிலும் ஒரே சனக்கூட்டம். இளைஞர்களும் வயது வந்தவர்களுமாக சைக்கிள்களில் ஊர்வலம் போலச் சென்று கொண்டிருந்தனர். அப்போதுதான் கீரிமலையை நோக்கிச் சென்றுகொண்டிருந்த எனக்கும் முதல்நாள் கீரிமலையில் துறைமுக வேலைகளுக்காக வெடிவைக்கும் போது சுரங்கம் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக வெளியாகியிருந்த செய்தி நினைவு வந்தது.

அதையும் ஒருமுறை பார்த்துவிட வேண்டும் என்று ஆவல் எழவே சுற்றுலாவுக்காக கீரிமலை சென்றுகொண்டிருந்த நாமெல்லோருமே - காரில் இருந்தவர்கள் என் நண்பர்கள்தான் சடையம்மா மடத்தடியைச் சென்றடைந்தோம்.

காரிலிருந்து இறங்கிய நான் சனக்கூட்டத்தைத்தான் அங்கு பார்த்தேன். என்ன சுரங்கம் ஒரே இருட்டாக இருக்கிறதேஎன்றும் ஒரே சேறும் தண்ணியுமாக இருந்ததே என்றும் பேச்சுக்கள் அடிபட்டன. சிறுவன் ஒருவன் சேற்றில் குளித்துவிட்டு நின்றான். கமருக்காரர்களுடன் பலபேர் அங்கு நிற்பதைக்கண்டேன். ஆனால் அங்கு கண்ட இன்னொரு விஷயம் என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. அது வேறொன்றும் இல்லை. அங்கே நின்ற ஐஸ்பழ வண்டிகளும் கடலைவிற்கும் கூட்டமும் தான்.

கோயில்திருவிழாவுக்கென்றால்கூட இத்தனை கூட்டம் வருமா சுரங்கத்தினுள்ளே சென்று பார்த்துவிட வேண்டுமென்ற ஆவல் என்னைத் தூண்டிற்று. சனக்கூட்டத்தை விலக்கிக் கொண்டு எட்டிப்பார்த்தேன். அம்மா... எவ்வளவு ஆழத்துக்கு வெட்டியிருந்தார்கள். இருபத்தைந்து முப்பது அடிக்குமேல்இருக்கும். அதற்குள் நின்றிருந்த சனக்கூட்டத்தைக் கூறவாவேண்டும்? ஓரிடத்தில் மாத்திரம் பாண் போறணையின் வாயிலைப் போன்றிருந்தது அங்கே தவழ்ந்து உள்நுழைவோரும், வியர்வையில்தோய்ந்து வெளியே வருவோருமாக இருந்தார்கள். வெளியேறிக் கொண்டிருப்பவர்களின் முகத்தில் பொங்கும் மகிழ்ச்சிதான் என்ன. சந்திர மண்டலத்தில்காலடிவைத்த மனிதன்கூட அடைந்திருக்க முடியாத மகிழ்ச்சிஅவர்கள் முகத்தில்பொங்கிவழிந்தது நமது முன்னையோர்வாழ்ந்த இடத்தைப் பார்த்துவிட்டோமே நமது வாழ்வுக்கு வித்திட்ட பெரியார்கள் வாழ்ந்த, பாவித்த இடத்தைப் பார்த்துவிட்டோமே என்ற பூரிப்பில் அவர்கள் ஆழ்ந்திருந்தார்கள்.

அவர்களைப் பார்த்தபின் ஒருமுறை உள்ளேசென்று பார்த்துவிடவேண்டும் என்றது என் மனமும் உடனே ஒரு மாதிரியாக சனக்கூட்டத்தை விலக்கிக்கொண்டு உள்ளே நுழைந்துவிட்டேன் வெய்யிலின்கொடுமைவெளியேதான் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது உள்ளே ஒரே கும்மிருட்டு. பந்த வெளிச்சங்களாலும், ரோச், வெளிச்சங்களாலும் ஓரளவு [illegible]றத்தை நன்றாகநோக்கக் கூடியதாக இருந்தது. பாறையொன்றில் ஏறிநின்ற வண்ணம் ஒருமுறை எனது கண்களை நோட்டம் விட்டேன்.

கோடை காலத்தில் களிமண்தரை காய்ந்து எப்படி வெடித்திருக்குமோ அதே போன்ற வெடிப்புகள் என் தலைமேலிருந்த பாறைகளின் மீது! 'கடவுளே நீதான் துணை' யென்று என்மனம் ஆண்டவனை வேண்டிக் கொண்டது. உள்ளே மூன்று வாசல்கள். ஒன்று கிழக்கு நோக்கிச் செல்வதாகஅமைந்திருந்தது. அந்த வாசலை நோக்கிப் பாறைகளின்மீதும் சேற்றின்மீதும் காலடி எடுத்து நடந்து சிறுதூரம் சென்றிருப்பேன், உள்ளே வெளிச்சமொன்று தெரிந்தது. என்னவென்று எட்டிப் பார்த்தேன். நெஞ்சளவு தண்ணீரில் கையில் பந்தம் ஏந்தியவண்ணம் உள்ளே சென்ற சிலர் திரும்பியவண்ணம் இருந்தார்கள். உள்ளே எப்படி இருக்கிறது என்று விசாரித்தேன் 'அங்கே ஒரே சேறும், கழுத்தளவு தண்ணீரும்தான். வழி நீட்டாகப் போகிறது. முடிவு எங்கே என்று தெரியவில்லை. தண்ணீரோ மிக ருசியாக ஏன் இருக்கிறது என்றனர் சேற்றில் மாட்டி வில்லங்கத்தை விலைக்கு வாங்குவான் என்று கடற்கரை சென்ற வாசலை நோக்கி நடந்தேன் அங்கு மேல் பாறைகளின்மீது தங்கள் தங்கள் பெயர்களை சேற்றினால் எழுதியிருந்தார்கள். இவற்றைப் பார்த்து விழித்து நின்ற வேளையில்தான் பந்தத்துடன் உள்ளே வந்த சிலர் யார்கூட வரப்போகிறீர்கள், இந்தப் பாதைமுடிவு கண்டுதான் திரும்புவோம்' என்று கூறினார்கள். அவர்களுடன் சேர்ந்து நானும் உள்ளே சென்றேன். அவர் கொண்டுவந்த நூல் பந்துடன் வாசலில் நின்ற எனது நண்பனின் கையில் நூலின் ஒரு முனையைக் கொடுத்துவிட்டுப் பயணத்தை ஆரம்பித்தோம். குறுக்குநெடுக்குமாக வளர்ந்திருந்த பாறைகள் — நடக்க முடியாது தடுத்தன. சிறிது தூரம் செல்லத்தான் அங்கு ஒரு கொடி நாட்டப்பட்டிருந்ததைக் கண்டேன். அப்போதும் சந்திரமண்டலத்து நினைவுதான் எனக்குவந்தது. உள்ளே செல்லச் செல்ல மூச்சு விடவே சிரமமாக இருந்தது. பந்தம்கூட சற்று குறைவாகவே எரிய ஆரம்பித்தது. ஆனால் என் கையில் இருந்த நூலை மட்டும் விட்டுக்கொடுத்தபடி வந்து கொண்டிருந்தேன். இடையிடையே கிளைகளாகப் பிரியும் பல வழிகள். எவ்வளவு விநோதங்கள். என்னுடன் வந்தவர்களுக்குப் பயம் பிடித்துக்கொண்டது. 'தம்பி வந்தவழியே திரும்புவது தான் புத்தி' என்று நான் கூறியதைப் பலர் ஆமோதித்ததன் பேரில் எமது சுரங்கப்பயணத்தை அரை குறையில் முடித்துத் திரும்பினோம். ஆனால் அப்பாதையே இரண்டு மூன்று மைல்களுக்கு மேலும் போவதாகக் கூறினார்கள். திரும்பும்போதுதான் நூலின் உதவி தெரிந்தது. இல்லாவிட்டால் எங்கு சென்றிருப்போமோ? நினைக்கவே நடுக்கம் பிடிக்கிறது. வெளியே வந்த எமக்கு அமோக வரவேற்பு.

நான் கையில் கொண்டு சென்ற பொருளொன்றைக் கண்டவர்கள் 'எனக்கும் ஒரு துண்டு' என்று என்னை மொய்க்க ஆரம்பித்தார்கள். இத்தனைக்கும் அது தங்கப்பவுணோ அல்லது இரத்தினக்கல்லோ அல்ல. உருண்ட நீண்ட

(18-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## மணிமொழி

ஆண்டவனின் திருவுருவத்தை உள்ளத்திலே வைத்து தியானிக்கும் மனம் அங்குமிங்கும் அலையக்கூடாது. ரணசிகிச்சை செய்யும்போது மருத்துவரின் கவனம் ஒருகணம் கூட இங்குமங்கும் செல்வதில்லை. அவ்வாறு சென்ருல் ரணசிகிச்சையில் தவறு ஏற்படும். உடலைப் பொறுத்தே மனிதன் உயிர் வாழ்கிருன். எனவே அப்பணியில் கவனமும் ஏகாக்கிர சிந்தனையும் வேண்டும். இதைப்போன்று கவனத்துடன், உள்ளுணர்வுடன் பணியாற்றுபவரே யோகிகளாவார்கள்.

—வினேபாபாவே


## முக்கிய அறிவித்தல்

1970 நடப்பு வருடத்திற்கு எமது விளம்பரம், உபகாரநிதி, மற்றும் பரிசுகளுக்கு எம்மால் ஒதுக்கப்பட்ட நிதி முடிவடைந்துவிட்டபடியால் மேற்கொண்டு விளம்பரம் எதுகாரணம் முன்னிட்டும் எவருக்கும் கொடுபடமாட்டாது என்பதை அன்புடன் அறியத் தருகிருேம்.

ஆர். வி. ஜி. பீடி

'உற்பத்தியாளர்'

47, பீச்ரேட், யாழ்ப்பாணம்.


'ஈழநாடு' விளையாட்டு விழா

# உதைபந்தாட்டம் நாளை மாலை ஆரம்பம்

யாழ்ப்பாணம், செவ்

பொன்விழா தினவிழாவை முன்னிட்டு 'ஈழநாடு' ஆதரவில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் விளையாட்டுப் போட்டிகள் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் வலைப்பந்தாட்டம், கூடைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம் ஆகியன தொடர்ந்து நடைபெறுகின்றன.

இம்மாதம் 16-ம் திகதி மாலை உதைபந்தாட்டப் போட்டி ஆரம்பமாகும். அன்றுமாலை கொழும்பு விக்டேர்ஸ் விளையாட்டுக் கழக உதைபந்தாட்டக் குழுவும், யாழ் கோஷ்டியும் மோதவிருக்கின்றன.

கொழும்பு விக்டேர்ஸ் குழு 1967-1969 ஆண்டுகளில் நடைபெற்ற அகில இலங்கை உதைபந்தாட்டப் போட்டியில் சாம்பியனுகத் தெரிவு செய்யப்பட்டது. அண்மையில் நாட்டைக்காக்கும் நிதிக்கென நடாத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டியிலும் இந்தக்குழு சாம்பியனுகைத் தெரிவுசெய்யப்பட்டது.

போட்டிக்கான ஒழுங்குகளை யாழ். மெட்டல் இன்டஸ்றீஸ் ஸ்தாபனத்தார் செய்துவருகின்றனர்.

## எக்ஸ்போ 70-ல் 72 கோடி வருமானம்

ஒசாக்கா செப். 14

ஒசாக்காவில் நடைபெற்ற எக்ஸ்போ 70 கண்காட்சி நுழைவுச் சீட்டினுல் 72 கோடிரூபா வருமானம் கிடைத்துள்ளதாக அறிவிக்கப்பட்டது.

27 நாடுகள் பங்குகொண்ட இக் காட்சிக்குப் பொறுப்பாகவிருந்த சகல நாடுகளின் தலைமைக் கமிஷனர்களுக்குநினைவுப் பதக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இக்காட்சியை 62 1/2 கோடி மக்கள் கண்டு களித்தனர் என்று கணக்கெடுக்கப்பட்டுள்ளது. இன்றுடன் காட்சி முடிவுற்றது.

## பண்டைக்காலத் தூக்கு விளக்கு கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணம், செவ்.

பண்டைக்காலத்தில் உபயோகிக்கப்பட்டதாகக் கருதப்படும் கிருஷ்ணரின் முகத்தையுடைய தூக்குக் குத்துவிளக்கு ஒன்று யாழ்ப்பாணம் கடற்கரைவீதியிலுள்ள ஒருவரது வீட்டில் வெட்டப்பட்ட கிணற்றிலிருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளது.

செம்பினுல் செய்யப்பட்ட இந்த விளக்கு தற்போது யாழ்ப்பாணம் புதைபொருளாராய்ச்சி நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளது. கிணறு வெட்டிக்கொண்டு போனபோது இது கண்டுபிடிக்கப்பட்டது. கிருஷ்ணர் புல்லாங்குழலுடன் பசுமாடு ஒன்றின்மேல் நிற்பதுபோல் சித்திரம் அமைந்துள்ளது.

(கு. வி. ம.)

## கிளிநொச்சி ப. ச. தலைவர்

கிளிநொச்சி, ஞாயிறு

கிளிநொச்சிப் பட்டின சபைத் தலைவராகத் தமிழரசுக்கட்சியைச் சேர்ந்த திரு. எஸ். எஸ். முருகேசு ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

## கதாப்பிரசங்கம்

(வல்வெட்டித்துறை நிருபர்)

வல்வை நெடியகாடு திருச்சிற்றம்பலப் பிள்ளையார் கோவிலில் 'கந்தபுராண வரலாறு' என்னும் பொருள் பற்றி தொடர்ந்து 20 நாட்கள் சுவாமிநாத தம்பிரானின் கதாப்பிரசங்கம் நடைபெற்றுவருகிறது.

கிளைகலைத் தோட்ட சம்பவம்:

## கண்டனப் பொதுக் கூட்டம் நடத்த இ. தொ. ச. ச. வடகிளை தீர்மானம்

யாழ்ப்பாணம், செவ்.

பதுளை மாவட்டத்தைச் சேர்ந்த கிளைகலைத் தோட்டத்தில் நடைபெற்ற அசம்பாவிதத்தைக் கண்டிக்கு முகமாகவும் வடபகுதியிலுள்ள தொழிலாளரின் கூட்டான எதிர்ப்பைத் தெரிவிக்கும் முகமாகவும் இலங்கைத் தொழிற்சங்க சம்மேளன வடகிளை இம்மாதம் 22-ம் திகதி யாழ். மாநகரசபை மண்டபத்தில் ஒரு பொதுக் கூட்டம்நடத்தவிருக்கிறது.

இக்கிளையில் அங்கம்வகிக்கும் சங்கங்களான காங்கேசன்சிமெந்துத் தொழிலாளர் சங்கம் அரசாங்கலிகிதர் சேவைச் சங்கம் இலங்கை ஐக்கிய மேட்டார் தொழிலாளர் சங்கம் வடமாகாண ஆசிரியர் சங்கம், பரந்தன்இரசாயன ஊழியர் சங்கம் இலங்கை மோட்டார் தொழிலாளர் சங்கம், இலங்கை பஸ் தொழிலாளர் சங்கம் ஸ்ரீலங்கா ஜாதிககுரு சங்கம், அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கம், அ. பொ சே. தொழிலாளர் சங்கம், ஸ்ரீலங்கா பிரவாகன சமித்தி, வட. இ. ஐ' கள்ளுத் தொழிலாளர்சங்கம் இலங்கை உப்புத்தொழிலாளர்சங்கம் ஆகியவை இக் கண்டனப் பொதுக்கூட்டத்தில் பங்கு பற்றுமாறு சம்மேளனத்தின் வடகிளை அழைப்பு விடுத்துள்ளது.

கடந்த இரு மாதங்களாக கிளைகலைத் தோட்டத்தில் தொழிலாளர் வேலைநிறுத்தம் செய்துவந்ததும் வேலைநிறுத்தக்காரர் மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இராமையா அழகர்சாமி ஆகிய இரு தொழிலாளர் உயிர் துறந்ததும் மற்றும் ஐம்பதுக்கு மேற்பட்ட தொழிலாளர் காயமுற்றதும் தெரிந்ததே.

## பாரதி விழா

உடுப்பிட்டி, ஞாயிறு

கரவெட்டி கிழக்கு யார்க்கரு விநாயகர் வித்தியாசாலையில் தலைமையாசிரியர் திரு. எஸ். செல்லையா தலைமையில் பாரதிவிழாக் கொண்டாடப்பட்டது

அரசகருமமொழி வெளியீட்டுத்திணைக்கள மொழிபெயர்ப்பாளர் திரு. வ. சிவராசசிங்கம் இப்பாரதி விழாவில் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்திஞர்.

## விபி. டைரக்டராக நியமனம்

யாழ்ப்பாணம், செவ்

வடபிரதேச கம்யூனிஸ்ட் கட்சிச் செயலாளரான திரு. வி. பொன்னம்பலம், மந்திரி திரு. ரி. பி. இலங்கரத்தினுவால் கூட்டுறவு மொத்த விற்பனை நிலைய டைரக்டர்களில் ஒருவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. பொன்னம்பலம் அளவெட்டி பலநோக்குகூட்டுறவு சமாஜத் தலைவராகவும், மல்லாகம் கிராமசபை தலைவராகவும், பணியாற்றிவருகிருர்.

## 'சுரங்கம்...

(17-ம் பக்கத் தொடர்ச்சி)

வெறும்கற்கள்தான். உள்ளே சென்ற நான் ஓரிரண்டை கூடவே எடுத்து வந்திருந்தேன். ஒருவாறு சுரங்கப் பயணத்தை முடித்துக்கொண்டுகீரிமலை சென்று குளித்து மாலை வீடுதிரும்பும்போதுகூட சுரங்கப் பயணத்தைப்பற்றியேஎன் சிந்தனை அசைபோட்டுக் கொண்டிருந்தது.

இந்தச் சுரங்கம் உண்மையிலேயே பண்டைய மன்னர்களாலேயோ, அன்றி தவமணிகளாலேயோ சிருஷ்டிக்கப்பட்டிருக்கக்கூடும் என்று அங்குநின்றவர்கள் பேசிக்கொண்டார்கள். வேருெருவர் முன்பு ஒரு முனிவர் அவ்விடத்தில் வாழ்ந்ததாகவும் அவர் குளிக்கப் போவதும் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலுக்குப் போவதும் இந்தச் சுரங்கம் வழியாகத்தான் என்றும் பலவாறு பேசிக்கொண்டார்கள். இன்னும் ஒருவர் இதுசெயற்கையாகச் சிருஷ்டித்திருக்கமுடியாது என்றும் இவ்வளவு ஆழத்தில் இவ்வளவு தூரத்திற்கு மனிதனுல் வெட்டமுடியுமா என்றும், இது இயற்கையின் மாறுபாட்டால் கீழ்நிலம் ஆழ்ந்துவிட்டதால் அது சுரங்கம்போல் அமைந்துவிட்டதென்றும் கூறினுர். நானே, நாமேன் அவசரப்படுவான்; அதற்குத்தானே ஆராய்ச்சிப்பகுதியினர் இருக்கி[illegible] நினைத்துக்கொண்[illegible]

## திருமண அழைப்பு

மகாதேவன் — தர்மநாயகி

எமது புத்திரி தர்மநாயகிக்கும், துன்னாலை தெற்கு எஸ். கனகசபை தம்பதிகளின் புதல்வன் மகாதேவனுக்கும் (விரிவுரையாளர் கனிஷ்ட தொழில்நுட்பக் கல்லூரி யாழ்ப்பாணம்) 16-9-70 பிற்பகல் 2-05 மணிக்கும் 3-12 மணிக்குமிடையில் வல்லிபுர நாதர் ஆலயத்தில் நடைபெறும் திருமண வைபவத்தில் கலந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு உறவினர்களையும் நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றேம். தனிப்பட்ட அழைப்பிதழ்கள் இல்லை.

கந்தசாமி தம்பதிகள், மயிலணி சுன்னுகம்.

2949

## தேசிய ஒருமைப்பாட்டுக்கு...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

டுள்ளது. மனைவியையும் கணவரையும் பிரிக்கும் கட்டமாகவுள்ளது, 10 லட்சம் மக்களின் குடியுரிமை மட்டுமல்ல. இனிமேல்வரும் சந்ததியினருக்கும் இன்னல்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. குடியுரிமை விஷயத்தில் கொள்கை வேறுபாடு என்பன இருக்கக்கூடாது.

வட்டுக்கோட்டை எம்.பி, திரு. ஆ. தியாகராசா பேசுகையில், ஆட்சிபீடமே முழு அதிகாரபீடமாக அமைவது இங்கிலாந்துபோன்ற ஒரு மொழிபேசும் மக்களுக்குப் பொருத்தமாக இருக்கலாம். ஆனுல் பலமொழிகள் பேசும் இலங்கை போன்ற நாடுகளுக்குப்பொருத்தமில்லை என்ருர். அந்தநாடுகளில் ஆட்சிமன்றமே உயர்அதிகார பீடமென்று கூறப்பட்டபொதிலும், அரசியல் சாசனமே உயர்ந்த நிலையிலிருக்கிறது. இலங்கையில் அரசியல் சாசனத்தில் மொழி உரிமைக்கான ஷரத்துகளைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென வற்புறுத்திஞர்.

இந்திய அரசியல் சாசனம் உலகநாடுகளுக்கு எடுத்துக்காட்டாகவிளங்குகிறது என்றும் கூறிஞர்.

திரு. வி. பொன்னம்பலல் [illegible] வருமாறு:

எந்த ஒரு சுதந்திரநாடும் தனது பிரஜைகள் யார் என்பதை வரையறுக்க உரிமை பெற்றுள்ளது. உலக அரங்கில் ஒருவர் விரும்பும் நாட்டில் குடியேறிவாழ அந்த நாட்டின் அரசஅனுமதியுடன் உரிமை பெறுகிருர். இதேபோன்று நாடுகளுக்கிடையே ஏற்படும் வர்த்தகம், கலாச்சாரம் போன்ற தொடர்புகளின் அடிப்படையில் மனித உறவுகள் ஏற்பட்டு புதியசமூகங்கள் உலக அரங்கில் தோன்றியுள்ளன, இதற்கு இலங்கையிலுள்ள பறங்கியர் சமூகம் ஒரு நல்ல எடுத்துக்காட்டாகும். இந்நிலையிற்ருன் ஒருநாடு தனது தேசிய நலன்கருதி வரலாற்றுப் பின்னணியைக்கருத்திற்கொண்டு மனிதாபிமானத்துடன் பிரஜா உரிமையை நோக்கவேண்டுமெனக்கூறப்படுகின்றது.

தொழிற்சங்க உரிமைகளும், சமூகஏற்றதாழ்வுகளைக் களைதலும் இவை போன்ற பிறஉரிமைகளும்தான் ஜனநாயக உரிமைகளென்று அழைக்கப்படுகின்றன.

திரு. எம். கார்த்திகேசன் பேசுகையில், தனிமனிதனின் பாதுகாப்புக்கு ஆயுதம் ஏந்தக்கூடிய அடிப்படை உரிமை ஏற்பட வேண்டும் என்று கூறினுர். திரு. வி. சச்சிதானந்தமும் பேசினுர்.

## பிரதமருக்கு வடகொரியா அழைப்பு

கோட்டை, திங்

இலங்கைப் பிரதமர் திருமதி பண்டாரநாயகாவை வடகொரியாவுக்கு விஜயம் செய்யுமாறு வடகொரியத்தலைவர் திரு. மார்ஷல் கிம் சங் அழைப்பு அனுப்பியுள்ளார்.

## மரண அறிவித்தல்

ந. சுப்பிரமணியம்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ந. சுப்பிரமணியம் காலமாகிவிட்டார். இவர் திருமதி பொன்னரியத்தின் அருமைக்கணவரும் பழைய பூங்காவீதி, சுண்டிக்குளி நடராசா இரத்தினம், புஸ்பராணி, பவளராணி, கமலாதேவி ஆகியோரின் அருமைத்தந்தையுமாவர் அன்னுரின்பூதவுடல் ஈமக்கிரியைகளுக்காக 117, கண்டிவீதி கச்சேரியடியிலுள்ள இல்லத்திலிருந்து இன்று பிற்பகல் 4 மணிக்கு செம்மணி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

2195

இப் பத்திரிகை 'ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970ம் ஆண்டு செப்டம்பர் மீ 15-ந் உ அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org